
கல்கி
வைரவிழா ஆண்டு
KALKI
2.12.2001
ரூ. 6.00
லட்ச ரூபாய்
பைக்!


ISO - 14001
ISO 900
ஆசை பாப்பாவின் மேனிக்கு வெகு இதம்
அம்மாவின் மேனிக்கும் மென்மை சுகம்!
Mysore Sandal
Baby
Baby Soap
மைசூர் ஸாண்டல் பேபி சோப் —
கர்நாடகா சோப்ஸ் & டிடர்ஜென்ட்ஸ் லிமி
பெங்களூர் 560 055
Visit us at : www.mysoresandal.com
CANCO • BLR • KSDL • MSBS • 200

காதில் விழுந்தவை:



ஜெயந்தியின் கண்டிஷன்!

1998ம் வருடம் பாராளுமன்றத் தேர்தலில் அ.இ.அ.தி.மு.க, பா.ஜ.க, ம.தி.மு.க ஆகிய கட்சிகள் இணைந்து கூட்டணி அமைத்தன. பின்பு வந்த தேர்தல்களில் அணிகள் மாறி விட்டாலும், அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் மீண்டும் 1998ம் வருடக் கூட்டணி தமிழகத்தில் அமைவதற்கான வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கின்றன என்கிறார்கள். வரும் பிப்ரவரியில் நடக்க இருக்கும் உ.பி. மாநில சட்டமன்றத் தேர்தலுக்குப் பிறகு தே.ஜ.மு கூட்டணி நெல்லிக்காய் மூட்டை சிதறுவதுபோல் பிரிந்து போய் வாஜ்பாய் ஆட்சிக்கு ஆபத்து வரும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. அப்போது வரும் பாராளுமன்றத் தேர்தலில்தான் இந்தக் கூட்டணி அமையுமாம். அதற்கேற்றாற்போல்தான் அம்மா காய்களை நகர்த்துகிறாராம். பா.ஜ.கவை விட்டு தி.மு.க பிரிந்து போவதற்கான சாத்தியங்கள் கூடி வருகின்றன. ஆனால் ம.தி.மு.கவும், பா.ம.க.வும் எந்தக் கட்டத்திலும் பா.ஜ.க தோழமையை விடத் தயாரில்லையாம். குறிப்பாக ம.தி.மு.க.வில், "இனி எந்தக் கட்டத்திலும், தி.மு.கவுடன் கூட்டணி சேரக்கூடாது" என்று முடிவெடுத்து விட்டார்களாம்.

● தனிக்கச்சேரி நடத்துவதைவிட, நேரடியாக பா.ஜ.கவில் இணைந்து விட்டால், தான் அமைச்சராவதற்கு தி.மு.க தடைக் கற்களைப் போட முடியாது என்பது திருநாவுக்கரசுவின் எதிர்பார்ப்பு. ஆனால் அவர் அப்படி ஒரு முடிவு எடுத்திருப்பதை அவரது கட்சியினர் கடுமையாக எதிர்க்கிறார்கள். பா.ஜ.க.வில் இணைந்தால், நாளை அந்தக் கட்சி அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்கும் பட்சத்தில் மறுபடி அம்மாவுடன் இணைந்து பணியாற்ற வேண்டியிருக்கும் பழைய அவமானங்கள் தொடரும் என்ற தயக்கம் காரணமாகவே கட்சியினர் யோசிக்கிறார்களாம். "நிறைய பணம் செலவாகிவிட்டது. இனி என்னால் செலவழித்து கட்சி நடத்த முடியாது" என்பது திருநாவுக்கரசின் பதில். அவரது 'பலவீனத்தைப்' புரிந்து கொண்ட அம்மா, கொஞ்சம் ஐஸான தகவல்களை அனுப்பி மீண்டும் அரசுக்கு வலை வீசி வருகிறாராம்.

● மூப்பனார் மறைவுக்குப் பிறகு ஜெயந்தி நடராஜன் காங்கிரஸில் இணைந்து விடுவார் என்று சொல்லப்பட்டது. இந்த நிலையில் அமெரிக்கா சென்ற ஜெயந்தி, மீண்டும் சென்னைக்குத் திரும்பியவுடன் காலில் சிறு விபத்து ஏற்படவே வீட்டில் ஓய்வெடுத்து வருகிறார். சமீபத்தில் த.மா.கா செயற்குழுவுக்குப் பதினைந்து நிமிடங்கள் வந்துபோன ஜெயந்தி, காங்கிரஸ் மேலிடத்திலிருந்து சிக்னல் எதிர்பார்த்து காத்திருக்கிறாராம். அப்படி இணைந்தால் அகில இந்திய கமிட்டியில் ஒரு பொறுப்பு கொடுக்க வேண்டும் என்பது அவரது நிபந்தனையாம்!

— சஞ்சயன்


கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

மெகா மேம்பாலம்!

சென்னை பீட்டர்ஸ் சாலையில் அருகருகே இரண்டு மினி மேம்பாலங்கள். அவற்றுக்கு இடையே, வாழ்க்கை நதியைக் கடக்க உதவும் ஒரு மெகா பாலமாக விளங்கி வரும் புதுக் கல்லூரிக்குள் நுழைகிறோம்.

கலைப்படிப்பு முதல் நிர்வாக மேலாண்மைப் படிப்பு வரை பயிற்றுவிக்கப்படும் ஐம்பதாண்டு பழைமையான கல்லூரிக்குள், நாம் கண்டுபிடித்த முதல் மாணவர் அல்ட்ரா மாடர்னாக இருந்த காதர் பாட்ஷா. 'சம்பத்குமாரை உங்களுக்குத் தெரியுமா' என்று கேட்டதுதான் தாமதம், அவசரமாய் அவருக்கு மூக்கின் நுனியில் கொஞ்சமாய்க் கோபம், "என்ன சார், ஒரு வெல்நோன் ஸ்டூடண்டைத் தெரியாமல் இருக்குமா? இப்போ காலைக் கல்லூரி முடிந்து மாணவர்கள் புறப்பட்டுப் போய்க் கொண்டு இருக்காங்க. அநேகமாக அவர் இப்போ துறையில் இருக்கமாட்டார். விளையாட்டு மைதானத்தில் ஏதாவதொரு மரத்துக்குக் கீழே உட்கார்ந்திருப்பார். கண்டுபிடிச்சுக்கோங்க" என்று சொல்லிவிட்டு, நாம் யார் என்பதை கூட தெரிந்து கொள்ளாமல் அவசரமாய் மாலைக் கல்லூரி வகுப்புக்குப் போய்விட்டார். அவர் வார்த்தைகளை நம்பி விளையாட்டு மைதானத்தை வலம் வந்தோம். தென்னை மரத்தின் கீழே அமர்ந்திருந்த மாணவர், அடிக்கடி வானத்தை நோக்கி சிந்தித்தபடி தீவிரமாக








எதையோ எழுதிக் கொண்டிருந்தார். ஓசைப்படாமல் நெருங்கினோம். ஆச்சர்யம்! 'நான்தான் சம்பத்குமார்' என்று அதிர்ச்சி தந்தார். அவர் கையிலிருந்த காகிதத்தைப் பட்டென்று பிடுங்கிப் படித்தோம். உழைப்பென்று தலைப்பிட்ட ஒரு மூன்று வரிக் கவிதை.

வாழ்க்கையில்
முன்னேறுவதற்காக
பின்னோக்கி நடக்கிறார்கள்
கயிறு திரிப்பவர்கள்

இனியும் இவரைப் பற்றி சொல்லாவிட்டால் நீங்கள் 'ஏக கவி' எழுதக்கூடும். பா.சம்பத்குமார், புதுக்கல்லூரியின் தமிழ்த் துறையில் முதுகலை தமிழ் இலக்கியம் பயி



• இல. வடிவேல்-சம்பத்-ரமேஷ்பாபு

லும் இரண்டாமாண்டு மாணவர். உங்கள் கல்லூரியின் வைரம் யாரென நிர்வாகத்திற்குக் கடிதம் மூலம் கேட்டபோது - பரிந்துரைக்கப்பட்டவர்தான் சம்பத்குமார். சும்மாயில்லை, இளங்கலை பயின்ற மூன்றாண்டுகளில் மட்டும் வட்டம், மாவட்டம், மாநிலம் மற்றும் தேசிய அளவில் நடத்தப்பட்ட கவிதை, சிறுகதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் இருநூற்று பதினாறு பரிசுகளைத் தட்டிக் கொண்டு வந்திருக்கும் மாணவர். "இத்தனை பரிசுகள் வாங்கியிருந்தாலும், வாணியம்பாடி முத்தமிழ் மன்றம் நடத்திய கவிக்கோ கவிதை அறக்கட்டளை கவிதைப் போட்டியில் வென்று முதல் பரிசை, கலைஞர் கையால் பெற்றதும், தேசிய தலைமை மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் நடத்திய கட்டுரைப் போட்டியில் அகில இந்திய அளவில் மூன்றாம் பரிசு பெற்றதும் கொல்கத்தாவில் நடந்த அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான, கலை மற்றும் பண்பாட்டு விழாவில், தமிழகத்தின் சிறந்த தன்னார்வத்தொண்டர் என்ற பரிசு பெற்றதும் தனக்குள் தன்னம்பிக்கையை விதைத்த தருணங்கள்" என்கிறார்.



மாசுக் கட்டுப்பாட்டு வாரியக் கட்டுரையின் சாராம்சம் என்ன என்றால் "டி.வி. எஸ். ஃபிப்டி மாதிரி சின்னஞ் சிறு

மெகா மாணவன்!

மோட்டார் சைக்கிளைக்கூட இயற்கை எரிவாயுவில் ஓட்ட வேண்டும் என்பதுதான். மோட்டார் சைக்கிள்களுக்குத் தகுந்த மாதிரி சிலிண்டர்களின் வடிவத்தை மாற்றிக் கொள்ளலாம். மோட்டர் சைக்கிள் ஓட்டினால் எல்.பி.ஜி.யில் ஓட்ட வேண்டும் என்பதற்காகத்தான் விடுதியிலிருந்து மிதி வண்டியில் கல்லூரிக்கு வந்து கொண்டிருக்கிறேன்" என்று வியப்பூட்டினார் புதுக் கல்லூரி வைரம்.

"ஹாய் சம்பத்" என்றபடி வந்து சம்பத்தின் தோள்களில் கைபோட்டு அமர்ந்து கொண்டனர் அவரது இரு நண்பர்கள்.

"இவன் ரமேஷ்பாபு, சென்னை பல்கலைக் கழக அளவிலான பளு தூக்கும் மாணவர்களில் முன்னணி வகிப்பவன். அது தவிர மிஸ்டர் நியூ காலேஜ் அதாவது கல்லூரி அளவிலான கட்டுடல் ஆணழகன் போட்டியில் நடப்பாண்டு வெற்றிக் கனியைப் பறித்தவன். இவன் இல.வடிவேல். நிறைய நவீன நாடகங்களில் நடிப்பவன். இருவருமே எனது வகுப்புத் தோழர்கள். இன்னொரு தகவலைச் சொன்னால் நீங்கள் ஆச்சர்யப் படக்கூடாது" என்று சின்ன இடைவெளி கொடுத்துவிட்டுத் தொடர்ந்தார் :

"எங்கள் மூன்று பேருக்கும் குடியாத்தம் அருகேயுள்ள சிங்கல்பாடிதான் சொந்த ஊர். ஒன்பதாம் வகுப்பில் ஆரம்பித்து, ஒரே பள்ளி, ஒரே கல்லூரி என்று முதுகலை வரை ஒன்றாகப் படித்துக் கொண்டிருக்கிறோம்" என்று அவர்களது நட்பின் ஆழத்தைச் சொல்லி அசர வைத்தார்.

இவர்கள் மூவரும் சேர்ந்து, கடந்த ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி ராஜ்பவன் சென்று முன்னாள் தமிழக ஆளுநர் பாத்திமா பீவி முன்பு பதினைந்து நிமிட குறுநாடகம் நடித்துக்காட்டி பாராட்டுகளையும் பரிசுகளையும் அள்ளி வந்திருக்கிறார்கள்.

"இஸ்லாமியப் பின்புலம் கொண்ட கல்லூரியில், இஸ்லாமிய மாணவர் அல்லாத எங்களுக்குக் கிடைக்கும் உற்சாகமும், சலுகைகளும் ஏராளம். எங்கள் முதல்வரும், இன்குலாப், கம்பம் சாகுல் அமீது, அகமது மரைக்காயர், முரளி, ராஜா, அப்துல்காதர், காதர் பாஷா போன்ற பேராசிரியர்களும், எங்கள் துறைத் தலைவர் காஜா முகைதீனும் தரும் சுதந்திரம், அவர்களின் அர்ப்பணிப்பு உணர்வையும் வேறெங்கும் பார்க்க முடியுமா என்பது சந்தேகம்தான்" என்று சந்தோஷச் சான்றிதழ் தருகிறது இந்த மூவர் கூட்டணி.

ஆசியாவிலேயே மண்புழு ஆராய்ச்சியில் முன்னணியில் இருக்கும், தாவரவியல் துறை புதுக் கல்லூரியினுடையது. சரத்குமார், நடிகர் கார்த்திக், கோவிந்தவாசன் போன்ற எண்ணற்ற பிரபலங்களை உருவாக்கிய இந்தப் புதுக் கல்லூரியின் வாசலும், பள்ளி வாசலும் இங்கே ஒன்றாக இருப்பது, இயல்பாக அமைந்த இறை அதிசயம்.

சந்திப்பு : ஆர்.சி.ஜெயந்தன்
படங்கள் : ஸ்ரீஹரி

சமீபத்தில் 'பஜாஜ் எலிமினேட்டர்' என்ற புது மாடல் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு வந்துள்ளது. சென்னையில் அதன் விற்பனையைத் தொடங்கி வைத்த நடிகை சுஹாசினி, சும்மா பேச்சுக்கு 'என்ன விலை?' என்று கேட்டு வைக்க, என்னதான் விசேஷம் என்று தெரிந்து கொள்ளும் ஆவலில் ஆழ்வார் பேட்டையில் உள்ள 'லக்ஷ்மி சுஜி ஆட்டோ' விற்பனைப் பிரிவைச் சேர்ந்த ஷரீஃபை கேட்டு அறிந்தோம்.

இந்தியாவின் முதல் அதிவேக இரு சக்கர வாகனம் இது.

லட்ச ரூபாய் பைக்!



வந்த பதிலைக் கேட்டு, மயக்கம் போடாத குறை! புதுமாடல் ஃபேன்ஸி பைக்கின் விலை 92,000ரூபாய்!

கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள அந்த பைக்கில் அப்படி ஒரு மணி நேரத்துக்கு 116 கி.மீ. தூரம் பயணிக்கக் கூடியது. (சத்தியமாக, சென்னையில் உள்ள ரோடுகள் இருக்கும் நிலையில் இந்த வேகம் சாத்தியமில்லை.) மிகவும் பாதுகாப்பானது. மற்ற பைக்குகளில்

பிரேக் பிடித்தால் வீல் ஒரு சுற்று சுற்றி விட்டுதான் நிற்கும். ஆனால் இந்த பைக், டிஸ்க் பிரேக் சிஸ்டம் கொண்டதால், எத்தனை வேகத்தில் சென்றாலும், பிரேக் பிடித்த உடனேயே வண்டி அந்த இடத்திலேயே புள்ளி வைத்த மாதிரி



நிற்கும். வீல்களின் அகலம் 130மி.மீ. ஆதலால் ஒரு டயரின் விலை மட்டுமே மூவாயிரம் ரூபாய்!

மோட்டார் சைக்கிள்களில் மிக குறைந்த உயரமும் (680மி.மீ.) மிக அதிக நீளமும் (2155மி.மீ.) கொண்டது!

157கிலோ எடையுள்ள இந்த வண்டியின் பெட்ரோல் டேங்க் கொள்ளளவு 14 லிட்டர்!

நான்கு ஸ்ட்ரோக் பைக்கான இதை மற்ற வண்டியைப் போல உதைத்தும் ஸ்டார்ட் பண்ணலாம். கார் போல செல்ஃப் ஸ்டார்டரும் உண்டு. (லட்ச ரூபாய் கொடுத்து உதைப்பானேன்!)



• மோகன்

இதன் பாகங்கள் அனைத்தும் ஜப்பானில் சிறந்த தொழில்நுட்ப வல்லுனர்களால் வடிவமைத்துத் தயாரிக்கப்பட்டு, பூனாவில் அசெம்பிள் செய்யப்படுகிறது.



• சண்முக வடிவேல்

பொதுவாக டூ-வீலர்களில் பயணம் செய்பவர்கள் முதுகு வலியால் பாதிக்கப்படுவது உண்டு. ஆனால் இந்த பைக்கில் அந்த பிரச்னையைத் தவிர்க்கும் விதமாக இருக்கை வசதியும் சஸ்பென்ஷனும் வடிவமைக்கப் பட்டுள்ளன- என்று சிறப்பம்சங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஒரு புறம் பூஞ்சாளம் பிடித்த மாங்கொட்டையைத் தின்று பஞ்சப்பட்டினிக் கூட்டம் ஒன்று நொந்து கிடக்க, இன்னொரு பக்கம் அறிமுகமான முதல்நாளே நாற்பது எலிமினேட்டர் பைக்குகள் விற்றுத் தீர்ந்துள்ளன! சந்தோஷப்பட முடிகிறதா?

இந்த காஸ்ட்லி பைக் சமாசாரத்தைப் பற்றி இருவரிடம் கேட்டபோது:

மோகன் (வழக்கறிஞர், வேளச்சேரி):

இந்தியாவில் பெட்ரோல் தேவையை வைத்துப் பார்த்தால்,

நிச்சயம் இது போன்ற அதி நவீன மோட்டார் சைக்கிள்கள் தேவைதான். கார்கள் பத்து அல்லது பதினைந்து கி.மீ.தான் மைலேஜ் தரும். இந்த பைக் கண்டிப்பாக காரை விட ஐந்து மடங்கு மைலேஜ் அதிகமாக கொடுக்கும்.

சீனா போன்ற நாடுகளில் கூட இப்ப பைக் பயன்படுத்தறவங்க சைக்கிளையும், கார் பயன்படுத்தறவங்க இந்த மாதிரி நவீன பைக்குகளையும் பயன்படுத்த ஆரம்பிச்சுட்டாங்க. காரணம் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கவும் எரிபொருளைச் சிக்கனப்படுத்தவும்தான்!

சண்முகவடிவேல் (தனியார் கம்பெனியில் பணிபுரிபவர், பெரம்பூர்) :

அட போங்க சார்! ஆட்குறைப்பும் வேலை இல்லாத் திண்டாட்டமும் அதிகமா இருக்கு. சம்பளம் பத்தாதனால குடும்பத்தில் பிரச்னை. இதுலே பைக் வச்சுக்கிட்டிருக்கிற எங்களை மாதிரி ஆட்கள் சைக்கிளைப் பயன்படுத்தலாமான்னு யோசிக்க ஆரம்பிச்சிருக்கோம். நம்ப ரோடுங்க ஏற்கெனவே அழகா இருக்கு. இதுல மழையும் பெஞ்சா, ரொம்ப அழகா மாறிடுது! இந்த லட்சணத்துல இத்தனை காஸ்ட்லியான பைக்குங்களை எல்லாம் நம்ம நாட்டுக்கு அறிமுகப்படுத்தறது படு வேஸ்ட்!

அதுவும் இல்லாம இத்தனை விலை கொடுத்து வண்டியை வாங்கி நாளைக்கு அதை ரிப்பேர்னு கொண்டு போனா ஸ்பேர் பார்ட்ஸ்லாம் 'தண்ணி' விலைல இருக்கும்! நிச்சயம் கட்டுப்படி ஆகாது.

லட்ச ரூபாய்க்கு ரெண்டு பழைய அம்பாசிடர் கார் வாங்கி டிராவல்ஸுக்கு விட்டா நாலு காசாவது பார்க்கலாம்!

— மடிப்பாக்கம் வெங்கட்

படங்கள் : யோகா

அட்டையில் : ஷாந்தி - ரங்கராஜன்

கோட்டு ஏன்? டை எதற்கு?

ரிமோட்

வினோத்

வெளிநாட்டிலிருந்து வந்திருந்த ஒரு தமிழ் நண்பர் கேட்டார்:

"தமிழ்நாட்டில் எல்லாத் தலைவர்களும் அறிஞர்களும் அரசியல்வாதிகளும் மேடைப் பேச்சாளர்களும் வேட்டி சட்டைதான் அணிகிறார்கள். டீவி ஒளிபரப்பிலும் அப்படித்தான் தெரிகிறார்கள். பின்னே ஏன் எல்லாத் தமிழ் சேனல்களிலும் செய்தி படிக்கும் ஆண்கள் சகிக்க முடியாத கோட்டும் டையுமாகக் காட்சி தருகிறார்கள்? அதையாவது முறைப்படி அணிகிறார்களா என்றால் அதுவும் இல்லை. சுத்தக் கோமாளித்தனமாக இருக்கிறது. எதனால் இப்படி?"

What we call progress is the exchange of one nuisance for another nuisance.



பொடோ சட்டத்தைவிட, பஸ் ஸ்டிரைக்கை விட, சென்ற வாரம் அதிக பரபரப்பு ஏற்படுத்திய விஷயம் தென்னாப்பிரிக்காவில் நடந்த கிரிக்கெட் கேலிக்கூத்துதான். இந்திய அணியில் பாதிப் பேருக்கு மேல் தண்டனையா! அதுவும் டெண்டுல்கருக்கா! ஈஎஸ்பிஎன்னில் நேரடி வர்ணனை செய்து கொண்டிருந்த ஜெஃப்ரே பாய்காட்டும் நவ்ஜோத்சிங் சித்துவும் கொதித்துப் போனார்கள். கோர்ட்டுக்குப் போய் மான நஷ்ட வழக்குத் தொடர வேண்டும் என்றார் பாய்காட். சித்துவோ, மேட்ச் ரெஃப்பரி மைக் டென்னிஸைக் கன்னாபின்னாவென்று திட்டித் தீர்த்தார். Such a torrent of choicest epithets! உணர்ச்சி வசப்படக் கூடாது என்று சாந்தோபதேசம் செய்தவர் கவாஸ்கர் ஒருத்தர்தான்.

இங்கிலாந்து அணி இங்கே வந்திருக்கும் சமயத்தில் இங்கிலாந்துக்காரரான மைக் டென்னஸ் இந்திய வீரர்களுக்கு இப்படியொரு தண்டனை விதித்திருப்பது திட்டமிட்ட சதி என்பது பலருடைய சந்தேகம். இந்திய ரசிகர்களிடமிருந்து அனுப்பப்பட்ட இ-மெயில்களும் போன்கால்களும் டீவி பெட்டியே சுடுகிற மாதிரி நெருப்பைக் கக்கின.

இந்திய கிரிக்கெட் போர்டு தலைவரான டால்மியா வாய்ப் பேச்சில்தான் சூரர் என்பது பாய்காட்டின் அபிப்பிராயம்.





எல்லாம் அறிந்த கடவுளுக்கு இங்கிலீஷ் மட்டும் தெரியாதா என்ன? ஆகையால் 'புத்ரி' படத்தில் 'தாங்க்யூ தாங்க்யூ கடவுளே, அவளை எனக்குக் காட்டியதாலே' என்று பாடியதைக் குற்றம் சொல்ல முடியாது. ஷேக்ஸ்பியர் கூட, 'Love is blind, and lovers cannot see the pretty follies that themselves commit' என்றார்.

ஆனால் அந்தக் கடவுளே வரிகளை ஏன் அத்துடன் நிறுத்த வேண்டும்? 'தாங்க்யூ தாங்க்யூ கடவுளே, நினுசு நினுசான டிரெஸ்களில் அவளைக் காட்டியதாலே' என்றெல்லாம் சேர்த்திருக்கக் கூடாதோ? அந்தப் பாட்டின்போது மோனல் தோன்றிய காட்சிகளைப் பாடலாசிரியர் பழனிபாரதி பார்க்கவில்லை போலிருக்கிறது.



• தேங்க்யூ தேங்க்யூ!

நியூஸிலாந்தில் ஒரு சூப்பர் மார்க்கெட் வாசலில் இப்படியொரு அறிவுப்புப் பலகை தொங்கியதாம். Credit and discount are given if you are 80 years old and accompanied by both your parents.

இவர் நேர்மையான வியாபாரி. உண்மையைச் சொல்லிவிட்டார். நேர்மையற்ற வியாபாரிகளிடம் ஏமாறும்போது நுகர்வோர் நீதிமன்றத்தை அணுகி எளிதாக நிவாரணம் பெறலாம் என்று விளக்கினார் சி.எம். ஜெயராமன் என்ற அதிகாரி (பொதிகை) நுகர்வோர் நீதிமன்றத்தின் மூன்று சிறப்புக்கள் என்று அவர் குறிப்பிட்டவை:

1. வழக்கறிஞர் வைக்கத் தேவையில்லை. நாமே போகலாம்.

2. தொண்ணூறு நாட்களுக்குள் தீர்ப்பு கிடைக்கும்.

3. கோர்ட் கட்டணம் எதுவும் கிடையாது.

இதுபோன்ற சீரியஸ் நிகழ்ச்சிகளில் சிரிப்பதற்குத் துணுக்குக் கிடைப்பது துர்லபம். ஆனால் பேட்டியாளர் ஒரு ஜோக் சொன்னார்:

பாரசூட் வாங்க ஒருவர் கடைக்காரரிடம் கேட்டார்: 'இந்தப் பாரசூட் தரமானது தானா?'

கடைக்காரரின் பதில்: 'மிகவும் தரமானது, ஐயா. குதிக்கும்போது விரியவில்லை என்றால் கொண்டு வந்து கொடுங்கள். மாற்றித் தருகிறோம்.

கரணம் தப்பினால் மரணம் என்று கழைக் கூத்தாடிகள் சொல்வது வழக்கம். (எங்கே மறைந்தார்கள் இந்த வீர திலகங்கள்?) ஏறத்தாழ அதே மாதிரியான தொழில், அதே மாதிரியான அபாயம் இன்றைய ஸ்டண்ட் நடிகர்களுக்கு என்று தெரிந்தது. சென்னை டைம்ஸில் (ஸன்) கோவை ராஜசேகரும் அவருடைய உதவியாளரும் பேசியபோது, கூட சில குட்டுகளும் உடைந்தன.

உதாரணமாக, துப்பாக்கியால் சுடப்பட்டு ரத்தம் கொட்டக் கீழே விழுகிறார்களே, அது எப்படி? ஒரு பலூனில் குங்குமச் சாயம் நிரப்பி, மார்புப் பகுதியில் சட்டையின் உட்புறம் வைத்துவிடுகிறார்களாம். பொம்மைத் துப்பாக்கி பட்டென்று சுட்டதும் பலூன் டக்கென்று உடைந்து 'ரத்தம்' டொக்கென்று கொட்ட, அவர் சட்டென்று இறப்பாராம்.

பேட்டி முடிவில் ரசிகர்களுக்கு ராஜசேகர் விடுத்த வேண்டுகோள்: 'நாங்கள் உயிரைக் கொடுத்து உழைக்கிறோம். நீங்கள் தியேட்டருக்குப் போய்க் காசு கொடுத்துப் படம் பார்த்தால்தான் எங்கள் பிழைப்பு நடக்கும். ஆகவே தயவு செய்து திருட்டு வீடியோ பார்க்காதீர்கள்.'


இதற்குச் சட்டத்தைத்தான் குறை சொல்ல வேண்டும். Laws too gentle are seldom obeyed; too severe, seldom executed என்று மூத்தோர் சொல்லும் வார்த்தை அமுதம். ○



ஹய்-அபி ஊ...லலல்லா!

வேட்பாளர்களுக்குத் தாங்கள் எந்த ஜாதி என்பதே தெரியவில்லை; ஏபிஸி தெரியாதவர்கள்கூட தேர்தலில் நிற்கலாம்; ஓபிஸி பற்றி தெரியாதவர்கள் நிற்கக் கூடாதென்கிறார்களே!

நிற்கக் கூடாதது நிற்பதும், நிற்க வேண்டியது நிற்காததும் தானே பிரச்னையின் அறிகுறிகள்? ஓடிக் கொண்டிருந்த ரயில் திடீரென்று நின்றுவிட்டது; டிரைவர் நாயுடுகாரு, தீபாவளிக் கொண்டாட்டங்களை ஒட்டி, நன்றாகப் போட்டுவிட்டு, தள்ளாடியிருக்கிறார். செம்பூருக்கும் கோவண்டிக்குமிடையே இவரது ஆட்டம் தாள முடியாமல் ரயிலின் ஓட்டம் தடைபட்டுவிட்டது. கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்துக்கு, சென்ட்ரல் ரயில்வேயின் ஹார்பர் லைனில் போக்குவரத்து ஸ்தம்பித்தே விட்டது! இது நின்று கழுத்தறுத்ததா?... நிற்காமல் தலைவலி தந்த விஷயம் என்ன தெரியுமா? தினம் ஆறிலிருந்து பத்து மணி வரைதான் பட்டாசு வெடிக்க வேண்டும் என்று



மும்பைக்காரர்களுக்கு இதுவரை இரண்டு ஜாதிகள்தான் தெரியும் – பணம் இருப்பவர்கள்; பணம் பறிப்பவர்கள்; இப்போது திடீரென்று என்னென்னவோ ஜாதி எல்லாம் முளைத்து, வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலுக்கென்று ரிஸர்வேஷனெல்லாம் செய்யப் போவதாகச் சொல்லிக் குழப்புகிறார்களே? முதலில் பி.எம்.ஸியையே கலைத்துவிடப் போவதாகப் பூச்சி காட்டினார்கள்; அடுத்தது இந்தத் திடீர் ஒதுக்கீடு! மும்பையின் வெற்றியே, ஜாதி பற்றி அலட்டிக் கொள்ளாத அதன் காஸ்மாபாலிடன் தனத்தில்தானே இருக்கிறது? ஒரு சில கார்ப்பொரேட்டர்களின் வெற்றிக்கென்று இதைத் தியாகிக்கலாமோ? பல



"எங்க மேனேஜர் லெட்டர் எழுதினா அதிலே ஒரு பர்சனல் டச் இருக்கும்!"

"இருக்கட்டும்... அதுக்காக ஹெட் ஆபீஸுக்கு லெட்டர் எழுதறப்ப 'சிரஞ்சீவி ஜெனரல் மேனேஜருக்கு அனேக ஆசீர்வாதம்'னா லெட்டரைத் தொடங்கறது?"

— மேல்மங்கலம் பத்ரா


சட்டமெல்லாம் போட்டிருக்கிறார்களே, இம்முறை வெடிச் சத்தம் நின்றுவிடும் என்று நினைத்த மும்பைக்காரர்களுக்கு ஏக ஏமாற்றம். வழக்கம் போல் இரவு பத்து மணிக்கு மேல்தான் பல இடங்களில் பட்டாசுகளைக் கொளுத்தவே ஆரம்பித்தார்கள். சட்ட விரோதமாக வெடித்தால் காவல் துறைக்குப் புகார் செய்யுங்கள் என்று பேப்பரில் விளம்பரம் செய்திருக்கிறார்களே என போலீஸுக்கு ஃபோன் செய்தால், அந்தப் பக்கம் வெடிச் சிரிப்பைக் கேட்ட பொதுநல விரும்பிகளுக்கு, அதைவிட பயங்கர ஷாக்! குண்டு வெடிப்பு சம்பவங்கள், அண்டர் வர்ல்ட் ஷூட் அவுட்டென்று பழக்கப்பட்டு விட்ட மும்பை காவல் துறைக்கு, பட்டாசு வெடிப்பெல்லாம் மத்தாப்புச் சிதறல்களாகத் தெரிகிறதோ?

தெரிவது ஒன்று, தெரியாதது மற்றொன்று, தெளிவது பிறிதொன்று என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஐஸ்வர்யா ராய், அபிஷேக் பச்சனுக்கு அனுப்பிய க்யூட்டான எம்.எஸ்.எஸ். மெஸேஜ் மொபைலில் தெரிவது கண்டு, இருவருக்கு மிடையே யாருக்கும் தெரியாமல் லவ்லல் லாவோ என்று பத்திரிகைக்காரர்கள் தவிப்பதைப் பார்த்து, 'ச்சீ... வெறும் ஃப்ரெண்ட்ஷிப்தான்' என்று ஐஸும், அபியும் தெளிவாக்கியதைச் சொல்லவில்லை; கொலாபாவிலுள்ள சுந்தர்நகர் குடியிருப்பில் வசிக்கும் அருணாவும் ராம்தாஸும் ஒருவரை ஒருவர் கட்டிப் பிடித்த நிலையில் மோட்சமடைந்ததைக் கண்டு எல்லோருக்கும் 'நிறைவேறாக் காதல் கதை'யாகத் தெரிந்தது இயல்பே! ஆனால் தெரியாதது... இருவரும் மணமாகி, இருபது வருடங்களாகச் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர் என்ற விஷயம். கடைசியில் தெளிவானது என்னவென்றால், குடிபோதையிலிருந்த கோபக்கார ராம்தாஸ், தம் மனைவியையே பட்டாசாக பாவித்து, தீபாவளி அன்று மண்ணெண்ணெய் ஸ்நானம் செய்வித்துப் பற்ற வைக்க, அவள் எரிந்துகொண்டே கணவனையும் கட்டிப் பிடித்து எரிய விட்டாள் என்பது! வெட்டுண்டவர்களெல்லாம் விரோதிகள், கட்டுண்டவர்களெல்லாம் காதலர்கள் என்று இந்தக் காலத்திலும் நீங்கள் நினைத்தால்... உங்கள் மனம் வெள்ளை!

வெளுத்ததெல்லாம் பாலாவதுமில்லை; வெள்ளைப் பவுடரெல்லாம் ஆந்த்ராக்ஸ் ஆவதுமில்லை! ஹக்காங்... கம் மானாச்சும் கிலி ஏற்படுத்த வேண்டுமென்று, சுய விலாசம் இடப்படாத கவர்களில் டால்கம் பவுடரை அப்பி அனுப்புவது, குறும்பர்களுக்கு இப்போதெல்லாம் ஃபாஷனாகி விட்டது! ஆனால் போஸ்ட்டாபீசில் இதையெல்லாம் சரியாக, சேர்க்க வேண்டிய இடத்தில் சேர்த்து விடுகிறார்கள் – குப்பைக் கூடையில்!

கூடை நிறைய ஆப்பிள் இருந்தாலும், சிலருக்கு 'எலந்தம் பயம்' தானே சுவைக்கும்? முதல்வர் மகனாகவே இருந்தாலும், அரசியலில் அடி எடுத்து வைக்காமல், சினிமா பக்கம் சாய்ந்திருக்கிறாரே எங்கள் விலாஸ் ராவ் தேஷ்முக்கின் மகன் ரீதேஷ்? 'நமக்கெல்லாம் இது சரிப்படாது' என்று நான் எவ்வளவோ தடுத்தும் கேட்கவில்லை' என்று அங்கலாய்க்கிறார் அப்பா; 'அரசியலோ, சினிமாவோ, இரண்டுமே நிலையற்றதுதானே?' என்று யதார்த்தம் பேசுகிறார் அம்மா; கடைசியில் என்னவோ இருவருமே ஆசிர்வதித்து விட்டார்கள். கலிஃபோர்னியாவில் நடிப்புக் கலையைப் பயின்ற ரீதேஷ், இப்போது ஷூட் பண்ணிக் கொண்டிருப்பது ஹைதராபாத்தில் – விஜயபாஸ்கர் இயக்கி, ராமோஜி ராவ் தயாரிக்கும் உஷா கிரண் மூவீசாரின் 'துஜே மேரி கஸம்' படத்துக்காக!

— ஜெயஸ்ரீ ராஜ்



2001 டிசம்பர் 2
விஷு கார்த்திகை 17
மலர் : 60
இதழ் : 18

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



களிப்பு, கண்ணியம், கட்டுப்பாடு!

சச்சின் டெண்டுல்கர் கிரிக்கெட் ஆட்டத்துக்கே இழுக்கு தேடித் தந்திருக்கிறார் என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலின் நடுவர், ஆணி அடித்தாற்போல் தீர்மானித்துவிட்டார்!


கிரிக்கெட் ஆட்டத்தின் அழகு, கண்ணியம், களிப்பு, துடிப்பு என்று முக்கியமான அம்சங்கள் அனைத்துக்கும் மதிப்பளித்து விளையாடும் ஓர் அரிய ஆட்டக்காரர் சச்சின். இவரிடம் ஐ.சி.சி பிரதிநிதி மைக் டென்னிஸ் கண்ட குறைதான் என்ன...?

பந்தைத் தமது நகங்களால் கீறி, அதில் வடுக்களை உருவாக்கினார் என்பது குற்றச்சாட்டு! தமது ஆட்டத்தொகையில் முக்கால் பங்கை அபராதமாகச் செலுத்தும்படி உத்தரவிட்டார். ஓர் ஆட்டத்தில் விளையாடத் தடையும் விதித்தார். சச்சின் பேரிலான குற்றச்சாட்டை நம்புவது கஷ்டம் எனினும் அவர் விதிமுறையை மீறி (மறந்து) நடந்துகொண்டார் என்பதை மறுப்பதற்கில்லை.

வேறு ஐந்து ஆட்டக்காரர்களும் கண்டனமும் தண்டனையும் பெற்றுள்ளனர். அபராதம் செலுத்தியாக வேண்டும் என்பதுடன் அவர்களுள் ஒருவர் (வீரேந்திர செவாக்) அடுத்த டெஸ்ட் பந்தயத்தில் ஆடத் தடை!

இந்த ஆட்டக்காரர்கள் அளவுக்கதிகமாக அப்பீல் செய்து, அம்பயர்களை அவுட் கொடுக்கும்படி வற்புறுத்தியதாகக் குற்றச்சாட்டு. எதையும் மறுக்க ஆட்டக்காரர்களோ அணி மானேஜரோ முயற்சி செய்யவில்லை.

ஆனால், ஓரவஞ்சனை காரணமாகவே இவர்களுக்கு மட்டும் தண்டனை கிடைத்துள்ளது



என்று பரவலாகப் பேசப்படுகிறது. பிசிசிஐ தலைவர் ஜக்மோகன் டால்மியா வெகுண்டு எழுந்து, தீவிர எதிர்ப்பும் கண்டனமும் தெரிவித்து நிபந்தனைகளும் விதித்துள்ளார். தென் ஆப்பிரிக்க அணி ஆட்டக்காரர்களும்கூட குறைவின்றி அம்பயர்களை மிரட்டி, கூச்சலிட்டு அப்பீல் செய்தனர் - குறிப்பாக போலக். எனினும் அவர்களுக்கு எவ்வித தண்டனையும் விதிக்கப்படவில்லை.

இந்த விஷயத்தைச் சுட்டிக்காட்டி, இந்திய ஆட்டக்காரர்களின் செயல்களையும் தவறுகளையும் நியாயப்படுத்த முயற்சி செய்வது அழகல்ல. ஒரு தவறு இன்னொரு தவறை நியாயப்படுத்தாது.


கனவான்களின் ஆட்டம் என்று கிரிக்கெட்டுக்கு ஓர் அடைமொழி உண்டு. வெற்றி - தோல்விக்கு அப்பாற்பட்டு, களிப்புக்காக மட்டுமே அவ்வாட்டத்தில் ஈடுபட வேண்டும் என்பதே இலக்காக இருந்தது. எந்த விளையாட்டிலுமே இதுதான் ஆதர்சம் எனினும் கிரிக்கெட்டில் இந்த இலட்சியமே ஆட்டத்தைக் காட்டிலும் முக்கியமாகக் கருதப்பட்டது.

ஒரு நாள் பந்தயங்களும் அபரிமிதமான பரிசுத் தொகைகளும் வருமானமும் ஆட்டத்தின் ஜீவனை நலிவுறச் செய்துவிட்டன. இப்போதைய கிரிக்கெட், களிப்புக்காக மட்டுமே ஆடப்படுவதில்லை; ஏதோ யுத்தம் போலவும், காசுக்காகவும் ஆடப்படுகிறது!

காசுக்காக மட்டுமே ஆடப்படுகிற ஆட்டமாக அது மாறிவிடாமல் இருக்க வேண்டும். நட்புக்காக ஆடப்படும் ஆட்டமாகவே விளங்க வேண்டும். அரசியல்வாதிகள் வீதிக்கு வந்து போராடுவதுபோல் கிரிக்கெட் வீரர்களும் மைதானத்தில் ஆர்ப்பாட்டங்களில் இறங்கி விடக் கூடாது. ஆபாசச் செய்கைகளையும் கொட்டி முழக்கி அம்பயர்களை மிரட்டுவதையும் தவிர்க்க வேண்டும். ஆட்டத்தில் நம் வீரர்கள் தோற்பதைச் சகித்துக் கொள்ளலாம்; ஆனால் கண்ணிய மற்ற நடத்தை என்ற அவப்பெயரைப் பெற்றால் அதை நம்மால் தாங்கிக் கொள்ளவே முடியாது.

ஏழைகள் செலுத்திய ஏழரை மில்லியன்!

அமெரிக்காவில் உள்ள ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவின் மூன்று கிளைகள், அந்நாட்டின் நிதி அமைச்சகத்துக்குக் கொழுத்த அபராதம் செலுத்தியிருக்கின்றன. அபராதத்



தொகை ஏழரை மில்லியன் டாலர்!

ஏழை இந்தியன் இத்தொகையை ரூபாயாக மாற்றிப் பார்ப்பானானால் மயக்கமே அடைந்து விடுவான்! ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா தேசியமயமான வங்கி என்பதால், உண்மையில் அபராதத் தொகையை ஏழை இந்தியன் செலுத்துகிற வரிப்பணத்திலிருந்துதான் கட்டியிருக்கிறார்கள்.

நமது உழைப்பும் வியர்வையும் இப்படி ஏன் அமெரிக்க நிதியமைச்சகத்துக்கு அபராதத் தொகையாக மாற வேண்டும்?

அமெரிக்காவிலுள்ள ஸ்டேட் பாங்க் நிர்வாகம் அந்நாட்டு நிதியமைச்சக விதிகளை மீறியும் கவனக் குறைவாகவும் செயல்பட்டிருக்கிறது. இது விஷயத்தில் தங்கள் தவறை உணர்ந்து ஒப்புக் கொள்ளாவிட்டாலும் சம்பந்தப்பட்ட ஸ்டேட் பாங்க் அதிகாரிகள் எதிர்ப்பு எதுவும் தெரிவிக்காமல் அபராதம் செலுத்திவிட்டனர்!

சில விதிகள் அறியாமை காரணமாகக் கடைபிடிக்கப்படவில்லை. வேறு சில அறிந்தே மீறப்பட்டுள்ளன!

ரிசர்வ் வங்கிக்கு அடுத்தபடியாக, முன்னணி வங்கியாகக் கருதப்படுவது ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா. வழிகாட்டியாக இருக்க வேண்டிய இந்த வங்கி, அமெரிக்க பங்கு மார்க்கெட் விதிகளுக்குப் புறம்பாக, இந்திய பாண்டுகளை, பதிவு செய்யாமலே விற்றிருக்கிறது. இந்தத் தவறுக்காகவும் அமெரிக்க பங்கு மார்க்கெட் பாதுகாப்பு அமைப்பு, ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவைக் கண்டித்திருக்கிறது.

சர்வதேச பொருளாதார அரங்கில் நாம் முன்னணியில் இராவிட்டாலும் இதுபோன்ற சறுக்கல்களில் முன்னணி வகிக்கிறோம் என்பது சோகமான உண்மை! இதில் ஏற்படும் நஷ்டம் ஒருபுறமிருக்க, இந்தியாவின் பிரதான வங்கி ஒன்றில் அதிகாரிகள் இவ்வளவு அறியாமையுடன் கவனக் குறைவாக நடத்துகொள்கிறார்கள் என்ற உண்மை நாட்டுக்கே தலைகுனிவு! ○

தொடர்கதையாக நீளும் வீரப்பன் விவகாரத்தில் மீண்டும் ஒரு விறுவிறுப்பான அத்தியாயம் துவங்கியுள்ளது.


'அதிரடிப் படைகளை வாபஸ் வாங்கி, நான் சொல்லும் சில நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டால் சரணடையத் தயார்' என்று வீரப்பன் தமிழக அரசுக்கு காஸெட் அனுப்பியதாக ஒரு தகவல் வந்தது. 'ஆனால் அப்படியொரு காஸெட் வரவேயில்லை' என்று முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் மறுத்துவிட்டார். ஆனால் அதேசமயம் 'நெற்றிக்கண்' பத்திரிகை ஆசிரியரான ஏ.எஸ். மணி, தமக்கு வீரப்பனிடமிருந்து ஒரு காஸெட் வந்ததாகக் கூறி அதைப் போலீஸாரிடம் ஒப்படைத்து உள்ளார். வீரப்பனிடம் இருந்து வந்ததாகச் சொல்லப்படும் அந்தக் காஸெட்டில் 'நக்கீரன்' கோபாலை அவதூறாகச் சொல்லியிருந்தான் வீரப்பன். மணிக்கு வந்த காஸெட் 'வீரப்பனால் அனுப்பப்பட்ட காஸெட் அல்ல' என்று இப்போது போலீஸ் சொல்கிறது. இப்போது, 'நக்கீரன்' நிருபரும், முதன்முதலாக வீரப்பனைச் சந்தித்து பேட்டியெடுத்தவருமான சிவ சுப்பிரமணியனைக் கைது செய்து கர்நாடகச் சிறையில் அடைத்து வைத்துள்ளனர். இதன் காரணமாக வீரப்பன் விவகாரத்தில் பழையபடி சூடு பிடிக்கத் துவங்கியுள்ளது.

ஜூலை மாதம் தமிழ்நாடு - கர்நாடகா கூட்டு அதிரடிப் படைக்குத் தலைவராக நியமிக்கப்பட்ட தேவாரம் தலைமையில் வீரப்பன் தேடுதல்

சூடு பிடிக்குது

வீரப்பன் விவகாரம்!





வேட்டை மறுபடி துவங்கப்பட்டது. எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் ஐ.ஜி. விஜயகுமார் தலைமையில் காட்டில் பரவினார்கள். வீரப்பன் பிடிபடுபவதன் மூலம் அரசியல் ரீதியாக தனக்குச் செல்வாக்கு கூடுமென்பதால் வீரப்பன் வேட்டைக்கு நிதிப்பற்றாக்குறை பற்றி சிறிதும் கவலைப்படாமல் பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் மூன்று மாதத்துக்கும் மேல் ஆன நிலையில் 'திக்குத் தெரியாத காட்டில் தேடித் தேடி இளைத்தேனே' என்றாகிவிட்டது அதிரடிப் படையின் நிலை. இந்தக் காலகட்டத்தில் ஒரே ஒருமுறைதான் வீரப்பன் கும்பலை, போலீஸ் (தேவாரம் கணக்குபடி ஐந்துபேர்) நெருங்கி மோதியதாகத் தகவல் வந்தது. அப்போதும் அந்தக் கும்பல் போட்டுவிட்டுச் சென்ற பிரியாணி பொட்டலங்களைத்தான் அதிரடிப் படையால் கைப்பற்ற முடிந்தது. அதிரடிப் படைக்குச் சரி



யான தகவல்கள் கிடைக்காததால்தான் வேட்டையில் இதுவரை வெற்றி கிடைக்க வில்லை என்றும் காரணம் சொல்லப்பட்டது. இதற்கிடையில் ஒன்றிரண்டு கிராமங்களில் இருந்து அதிரடிப் படையின் அத்துமீறல்கள் பற்றிச் செய்திகள் வந்தன. மேலும் எல்லைப் பாதுகாப்புப் படையும், வேறு பல முக்கிய பணிகளுக்குத் தேவை என்பதால் வாபஸ் வாங்கப்பட்டது. யானைக் குட்டியைச் சீண்ட முயன்ற பாதுகாப்புப்படை வீரர் களை, தாய் யானை துரத்தியதால், ஓடும் போது ஐ.ஜி. விஜயகுமாருக்குக் காயம் ஏற் பட்டது. மேலும் அடிக்கடி மழை வேறு பெய்ததால் திட்டமிட்டபடி அதிரடிப் படையால் செயல்பட முடியவில்லை. சில சமயங்களில் தலைவர் தேவாரமே காட்டை விட்டு சென்னைக்கு விடுப்பில் வந்துவிட்ட தாகச் சொல்கிறார்கள். கடந்த ஒரு மாத கால மாக அதிரடிப் படைகள் பெரும்பாலும் முகாமில்தான் பொழுதைப் போக்கிக் கொண் டிருக்கிறார்களாம். இந்த நிலையில்தான் காஸெட் வருகை, நிருபர் கைது என்ற பரபரப்பாகி விட்டது விவகாரம்.

இந்த விவகாரத்தில் கிளைக் கதையாகச் செல்வது தமிழ்நாடு விடுதலைப் படையின் செயல்பாடுகளைப் பற்றிய செய்திகள். ராஜ்குமார் கடத்தல் விவகாரத்தின்போது இந்த அமைப்பின் பெயர் அடிபட்டது. இதன் தலைவர் மாறன், ரேடியோ வெங் கடேசன் போன்றவர்கள் ஜெயிலில் இருந் தாலும் இதே அமைப்பைச் சேர்ந்த ராஜா ராம், முருகேசன், ஹுசைன் போன்றவர்கள் வெளியே தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருப்பதாகச் சொல்கிறது போலீஸ். இவர்களில் ஒருவரையாவது பிடித்தால்கூட வீரப்பன் விவகாரத்தில் கொஞ்சம் முன் னேற்றம் ஏற்படலாம் என்று கருதுகிறது போலீஸ். 'கோர்ட் வளாகத்தில் வைத்து ஜெயலலிதாவைக் கொலை செய்வோம்' என்று வலையில், இந்த அமைப்பு செய்தி அனுப்பியதாகச் சமீபத்தில் சொல்லப் பட்டது. ஆனால் பாண்டிச்சேரிவரை சென்று விசாரித்த போலீஸார், இந்த விவ காரத்தில் மேலும் தகவல்களைச் சொல்ல வில்லை. 'ஜெயலலிதா செஷன்ஸ் கோர்ட் டில் ஆஜராக வேண்டும் என்று அப்போது பிரஷர் இருந்தது. இது போல ஒரு செய்தி வந்தது என்றால் பாதுகாப்பு காரணம் காட் டித் தவிர்க்கலாமே என்ற எண்ணத்தில்தான்

வேண்டுமென்றே செய்யப்பட்ட காரியம் அது' என்று சொல்பவர்களும் உண்டு.

"**வீ**ரப்பன் காஸெட் அனுப்புவது என்றால் தனது பெங்களூர் தொடர்புகள் மூலமாகவோ அல்லது நெடுமாறன் மூலமாகவோ அனுப்புவானே தவிர இந்தச் சூழ்நிலையில் மணி மூலமாக அனுப்ப மாட்டான்" என்று உறுதியாகச் சொல்கிறார்கள் வீரப்பன் விவகாரத்தைக் கண்காணித்து வரும் பத்திரிகையாளர்கள்... நக்கீரன் கோபாலின் பெயரை வம்புக்கு இழுப்பதற்காக சில விஷமங்கள் நடப்பதாகவும் சொல்கிறார்கள்.

'பல திசை திருப்பும் செயல்களில் போலீஸ் ஈடுபட்டிருக்கிறது' என்பது அவர்களின் குற்றச்சாட்டு. 'நக்கீரன் நிருபர் சிவசுப்பிரமணியம், ஆத்தூர் அருகேயுள்ள அவரது வீட்டிலிருந்து சற்று தூரத்திலேயே கர்நாடக மாநில அதிரடிப் படையால் கைது செய்யப்பட்டு மைசூருக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்' என்கிறார் நக்கீரன் காமராஜ். மைசூர் அருகே அவரைக் கைது செய்ததாகவும், அவரிடமிருந்து மின்னணு தகவல் சாதனங்களைக் கைப்பற்றியதாகவும் போலீஸ் சொல்கிறது. கர்நாடக போலீஸ், தமிழ்நாட்டுக்குள் வந்து ஒருவரைக் கைது செய்கிறது என்றால், தமிழக போலீஸின் ஒத்துழைப்பு இல்லாமல் செய்ய முடியாது. இப்போது வீரப்பன் பதுங்கியுள்ள இடத்தைப் பற்றித் தகவல்களைத் தெரிந்து கொள்வதற்காகவே சிவசுப்ரமணியத்தை, போலீஸ் பிடித்துள்ளதாகச் சொல்கிறார்கள். இந்த அடிப்படையில் பார்த்தால் இது போன்ற தகவல்களுக்காக மேலும் பலரை தமிழக - கர்நாடக அதிரடிப் படைகள் சங்கடப்படுத்தும் என்கிறார்கள்.

ராஜ்குமார் விடுதலைக்குப் பிறகு வீரப்பன் விவகாரத்தில் பல்வேறு காரணங்களுக்காக அட்வென்சரிஸத்தைத் தவிர்த்தே வருகிறது நக்கீரன். "அதிரடிப் படை வீரப்பனைப் பிடித்தே தீர வேண்டும் என்ற வேகத்துடன், துடிதுடிப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது சுணங்குவதற்கான வாய்ப்பே கிடையாது. எந்த நேரமும் வீரப்பன் பிடிபடலாம்" என்று உறுதியாகச் சொல்கிறார் ஒரு மூத்த போலீஸ் அதிகாரி.

- **கௌசி**

எட்டுக்குள்ளே யோகமிருக்கு!



அர்ஜுனா, தபஸ்விகளைக் காட்டிலும், ஞானிகளைக் காட்டிலும், நித்ய நைமித்திக, காம்ய, கர்மங்களைச் செய்பவர்களைக் காட்டிலும் இயம நியமங்களுடன் கூடிய யோகாப் பியாசம் செய்யக் கூடிய யோகியே சகல விஷயங்களிலும் மேலானவனாகத் திகழ்கிறான்.

– பகவத்கீதை

'இயம நியமங்களுடன் கூடிய யோகாப்பியாசம்' என்று ஸ்ரீ கண்ணனே குறிப்பிட்டுள்ளானே! 'இயம நியமம்' என்றால் என்ன என இந்த வாரம் தெரிந்துகொள்வோம்.

1) இயமம்
2) நியமம்
3) ஆசனம்
4) பிராணாயாமம்
5) பிரத்தியாகாரம்
6) தாரணை
7) தியானம்
8) சமாதி

இந்த எட்டுபடிதான் யோகத்தின் படிகள்... ஒவ்வொரு படியாக ஏறி, கடந்து, கடைசி நிலையாகிய சமாதி நிலையை அடைய வேண்டும்.

1) இயமம்:

முதல்படி இயமம். இந்த முதல் படியில் ஐந்து சின்ன படிகள் உள்ளன.

டாக்டர் ஏ.எஸ். அசோக்குமார்

• உள்ளத்தாலும், பேச்சாலும், செயலாலும் எவ்வுயிரையும் துன்புறுத்தாமல் இருப்பது.

• உள்ளத்தாலும், பேச்சாலும், செயலாலும் பிறர் பொருளைக் கவராமலிருப்பது.

• உள்ளத்தாலும், பேச்சாலும், செயலாலும் பிரம்மச்சரியம் அனுஷ்டிப்பது. (இங்கே பிரம்மச்சரியம் என்பது இல்வாழ்க்கையில் ஈடுபட்டாலும், அளவோடு உறவு கொள்வது, ஒரு மனைவியோடு வாழ்வது என்பது பொருள்)

• பிறர் கொடுக்கும் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளாமை (அன்பளிப்பை வழங்குகின்றவர்களுக்கு, அன்பளிப்பை ஏற்றுக் கொண்டவர்,



ஏதேனும் ஒரு வகையில் அவரது மனத்துக்கு ஏற்ப நடக்க வேண்டி வரும். இதனால் பரிசைப் பெற்றுக் கொள்பவர், தமது சுதந்திரத்தையும் சுயேச்சையையும் விட்டுவிட்டு, வழங்குவோரின் தயவை நாட வேண்டிய சூழ்நிலை உருவாகும்)

மேற்கூறிய விதிமுறைகளைக் கடைபிடித்தாலே வாழ்க்கையில் எவ்விதச் சிக்கலும் இல்லாமல் வாழலாம். ஒருவரின் தகுதி, திறமை, சூழ்நிலை ஆகியவற்றுக்கேற்ப, 'இயம' விதிகளைக் கடைபிடிக்க வேண்டியது அவசியம்.

நியமம்:

இந்தப் படியில், தூய்மை, திருப்தி, தவம், நல்ல பழக்க வழக்கம் என நான்கு சிறு படிகள் உள்ளன. இவையும் அத்தியாவசியமான படிக்கற்கள்!

தூய்மை: உடலையும் உள்ளத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். குளிர்ந்த நீரில் நீராடுவது, சாத்வீக உணவைச் சாப்பிடுவது, யோக பயிற்சியில் கூறப்பட்டுள்ள ஆறு கிரியைகளால் உடல் உள் உறுப்புகளைச் சுத்தம் செய்வது.

திருப்தி: நாம் அனுபவித்து வரும் சுக போகங்களில் கிடைத்திருக்கின்ற வாய்ப்பு, வசதி போன்றவற்றில் 'போதும்' என்ற திருப்தி கொள்வது.

தவம்: சந்தோஷம், சோகம், விருப்பு, வெறுப்பு போன்ற செயல்களுக்கு இடம் கொடுக்காமல் மனத்தைக் கட்டுப்படுத்துதல்.

நல்ல பழக்க வழக்கங்கள்: இராமாயணம், மகாபாரதம் போன்ற ஆன்மிக சம்பந்தமான நூல்களைப் படிப்பது, யோகம் பயில்வது, நல்ல நண்பர்களுடன் நட்பு கொள்வது, பயனுள்ள விஷயங்கள் பற்றி அறிவது, சொற்பொழிவு, இனிய பாடல்கள் கேட்பது.

இறை பக்தி: உள்ளத்தாலும், பேச்சாலும், செயலாலும் கடவுளை நினைத்தல், நாமத்தை உச்சரித்தல்.

ஆசனம்: மன நிலைப்பாடுக்காக அமர்ந்து, நின்று, படுத்து செய்யும் பயிற்சிகள் 'ஆசனம்' என்கிறோம். ஆசனங்கள் செய்கின்றபோது, உடலுக்குச் சிரமம் இல்லாமலும், வியர்வை வராமலும் நிலையாக இருந்து செய்ய வேண்டும். இந்தப் பயிற்சிகளால் மனோபலம் அதிகமாகும்.

4) பிராணாயாமம்: மூச்சை சரி வர அடக்கியாளுதல்

5) பிரத்தியாகாரம்: மனத்தைப் புறத்தே புலன்கள் வழி செல்லாது தடுத்து அதை உள்முகமாகத் திருப்புதல், மனத்தில் உள்ள பொருளை அறியச் சிந்தித்தல்.

> இயமம் நியமமே எண்ணிலா ஆதனம்
> நயமுறு பிராணாயா மம்பரத்தி
> யாகாரம்
> சயமிகு தாரணை தியானம் சமாதி
> அயமுறும் அட்டாங்கம் ஆவதும்
> ஆமே.
> – திருமூலர்

6) தாரணை: 12 வரை எண்ணும் மாத்திரை காலம், ஒரு பொருளின் மீது மனம் ஒடுங்குவது.

7) தியானம்: மனத்தை ஒரு பொருளின் மீது நிறுத்தி, இடைவிடாது சிந்தித்தல்.

8) சமாதி: இந்நிலையில் சித்தத்தின் போக்குகள் முற்றிலும் வேரோடு அறுபட்டுப் போய், 'நான்' என்கிற சிந்தனைகூட அறவே நீங்கி, தியானத்தில் மூழ்க மனம், பரத்தில் ஆட்கொள்ளப்பட்டிருக்கும். சமாதி நிலை அடைவதுதான் யோகியரின் இலட்சியம்.

குறிப்பு:- முதல் 5 யோகங்கள் 'ஹட யோகம்' என்றும், 6,7,8 யோகங்கள் ராஜ யோகம்' என்றும் கூறப்படுகின்றது. இவற்றைப் பற்றி 'பதஞ்சலி யோக சூத்திரத்தில்' மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்த வாரம், 'ஹலாசனம்' செய்முறை விளக்கத்துடன் சந்திப்போம்.

படம்: ஸ்ரீஹரி

எச்சரிக்கை: இங்கே தரப்பட்டுள்ள யோகாசன பயிற்சி முறைகள் தகவலுக்காக மட்டுமே. இவை வழிகாட்டி முறைகள் அல்ல. யோகாசன நிபுணரின் நேரடி கண்காணிப்பில்தான் பயிற்சி தொடங்க வேண்டும்.



ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா தேவி ஸ்ரீ நீலசரஸ்வதி ஸ்ரீ விரஜா காலபைரவர் தேவஸ்தானம்

அபராஜிதபுரி, சோழிங்கநல்லூர், சென்னை - 600 119.
☏ : 4501404.

ஸ்ரீ சிருங்கேரி, ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமிகள் ஆசிகளுடன்
குலதேவதா ப்ரீதி பூஜையும் ஸ்ரீ ராகு, கேது, செவ்வாய், சனி தோஷ பரிகார பூஜை மற்றும் ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா, ஸ்ரீ வீர சரபேஸ்வரர் மஹாயாகம் 29.12.2001 சனி காலை 7 மணி முதல் மாலை 3 மணி வரை

அழைப்பிதழ்

ஆயுள் காரகனான ஸ்ரீ சனீஸ்வர பகவான் எல்லோருடைய ஜாதக அமைப்பிலும், ராகு-18 வருஷம், கேது-7, சனி-19 வருஷம் என்று 44 வருஷங்கள் ஆட்சி செய்கிறார். அன்றாட வாழ்வில்ராகுகாலம், எமகண்டம் சனியின் காலமே ஆகும். சனியின் கோரைப் பற்களாக திகழ்வது ராகுவும், கேதுவும். சனியின் அம்சமாக விளங்குவது செவ்வாய் ஆகும். இந்த நான்கு கிரகங்களும் உக்ர குணமுடையவை என்பதால் இவர்களை ப்ரீதி செய்து உத்தம பலன்களை பெறுவது நன்மைகளைத் தரும்.

இந்துக்கள் அனைவருக்கும் வம்ச வம்சமாக ஒரு குல தெய்வம் உண்டு. வருஷத்துக்கு ஒருமுறையாவது குலதெய்வ பூஜை செய்ய வேண்டும். வேலை விஷயமாக வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் வாழ்பவர்கள் குலதெய்வ பூஜைகளையும், பித்ருக்களுக்கு செய்ய வேண்டிய திதி, சிரார்த்தம், தர்ப்பணம் இவற்றையும் செய்ய முடியுமால் உள்ளனர். இதனால் - அகால விபத்து, அக்னி, மின்சாரம், நெருப்பு இவற்றினால் துன்பம் உண்டாகுதல் பயண காலத்தில் மரண பயம், குடும்பத்தில் கலகம், பிரிவு, பீதி, பைத்தியம் பிடித்தல், விஷ வ்யாதிகள் தோன்றுதல், மரணப்படுக்கையில் படுத்தல், கல்யாணத் தடை, புத்திரப் பேறு இன்மை, வேலை கிடைக்காமல் வருந்துதல், வழக்குகளில் மாட்டுதல், சிறைவாசம் அனுபவித்தல், கெட்ட எண்ணங்களை வளர்த்துக் கொள்ளுதல் போன்ற தீய செயல்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

கலிகாலமான இன்று யுத்த பயம், விஷக்கிருமி பயம், புதுப்புது வியாதிகளால் பயம் இப்படி எண்ணற்றக் கஷ்டங்கள் நிகழ்ந்து வருகின்றன. மேலும் சுய முயற்சியினால் ஒருவன் முன்னேறும்போது அவன் எதிரிகள் செய்யும் ஏவல், பில்லி, சூன்யம் அபிசாரகர்மா துஷ்ட தேவதை ப்ரயோகம், சத்ருபயம், மரணபயம் என்று பலவஞ்சனைகளை அன்பர்கள் அனுபவித்து வருகின்றனர். இத்தகைய சங்கடங்களிலிருந்து விடுபட்டு சாந்தியாக வாழ்வதற்காக வேண்டி 29.12.2001 அன்று நடைபெறும் பரிகார பூஜையிலும், ஸ்ரீ ப்ரத்யங்கிரா, ஸ்ரீ வீரசரபேஸ்வரர் யாகத்திலும் அன்பர்கள் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

உபயம்

பரிகார பூஜை - ரூ.1200.00, யாக பூஜை - ரூ.10000.00, பித்ருக்கள் நினைவாக் அன்னதானம் - ரூ. 2000, குலதெய்வம் நினைவாக புஷ்ப அலங்காரம் - ரூ. 2000.00. உபய தொகைக்கான A/c Payee Draft ஐ SRI PRATHYANGIRA ASHRAM TRUST என்ற பெயருக்கு எடுத்து உபயதாரர்களின் பெயர், குடும்பத்தினர் பெயர், நட்சத்திரம், கோத்திரம், குறைபாடுகள் இவற்றை எழுதி கோயில் முகவரிக்கு அனுப்பி ரசீது பெற்றுக் கொண்டு பூஜைகளில் நேரில் கலந்து கொள்ளலாம். வெளியூர் உபயதாரர்களுக்கு பதிவுத் தபாலில் பிரசாதம் அனுப்பப்படும்.

குறிப்பு: மஹாலக்ஷ்மி, அன்னபூரணி, வராஹி, சரபேஸ்வரர், பஞ்சமுக ஆஞ்சநேயர், பாலமுருகன், ஐயப்பன் சந்நிதிகள் நிர்மாணிக்கும் பணியில் கைங்கர்யம் செய்ய விருப்பம் இருப்பவர்கள் தொடர்பு கொள்க.

‘மனித உயிர்க் கடிகாரம்’ பற்றிய ஆராய்ச்சிக்காக மதுரை காமராாசர் பல்கலைக் கழக உயிரியல் துறை, ஒரு புதுமணத் தம்பதியை, தனிமை அறையில் தங்க வைத்து ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளது.

இளங்கோவன் - யுவனா சத்ய ப்ரியா தம்பதி கடந்த அக்டோபர் 12ம் தேதி தனிமை அறைக்குள் சென்று, 30 நாட்களுக்குப்பின் நவம்பர் 11ம் தேதியன்று வெளி உலகுக்கு வந்தனர்.

இந்த ஆராய்ச்சிக்காக வெளிச்சம் மற்றும் ஓசை உட்புக முடியாத இரட்டைச் சுவர் கொண்ட விசேஷ அறை தயாரிக்கப்பட்டது.

அதில், ஃபிரிட்ஜ், நூலகம், வீடியோ, டேப்ரிக்கார்டர், இரட்டைக் கட்டில், சமையலறை வசதி, உடற்பயிற்சி பொருள்கள், குளியலறை, மின் விளக்குகள் என எல்லா வசதிகளும் உண்டு. ஆனால் வெளி உலகத் தொடர்பு உடைய டீவி, போன், வாட்ச் போன்ற எந்தப் பொருளும் இல்லை.

இந்தத் தனிமை அறை நுழைவாயில் அருகில் அதனுடன் இணைந்து ஒரு சிறிய அறை ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. இந்த சிறிய அறையின் கதவு உள்ளிருப்பவர் விருப் பப்படி பூட்டவும், திறக்கவும் வசதி பெற்றது.

உள்ளே தனியாக வசிப்பவர் தனக்குத் தேவையான பொருட்களை (அரிசி, காய்கறி, பழங்கள் போன்றவற்றை) ஒரு தாளில் எழுதி, இந்தச் சிறிய அறையில் வைக்கப்பட்டுள்ள ஒரு மேஜையில் வைத்துவிட வேண்டும். வருவதற்கு முன் வெளியே எரியும்படி அமைக்கப்பட்டுள்ள சிவப்பு விளக்கின் சுவிட்சை அழுத்தி விட்டு வருவார். இதனால் அவர் அந்த சிறிய அறைக்கு வந்து செல்வதை வெளியில் இருப்பவர்கள் புரிந்து கொண்டு தேவையானவற்றை உடனே தருவார்கள்.





இந்த அறையில் தங்கியிருப்பவர்களது விழிப்பு, உறக்க நேரம், உடல் உஷ்ணம், உணவு இடைவெளி நேரம் போன்றவை தொடர்ந்து வெளியே வைக்கப்பட்டுள்ள ஒரு கருவியில் பதிவு செய்யப்படும். அறையின் உள்ளே தங்கி இருப்பவர் தமது செயல்களை

● க. மாரிமுத்து



வெளிப்படுத்த 'இவன்ட்பாக்ஸ்' என்ற தகவல் பலகையில் உள்ள சுவிட்ச்கள் மூலம் வெளியில் இருப்பவர்களுக்குத் தெரியப்படுத்துவார். அறை உள்ளே இருப்பவர்கள் தரையில் நடந்தால், ஃப்ளோர் சென்ஸார் மூலம் கண்காணிக்கப்பட்டு பதிவு செய்யப்படும்.

தனிமை அறையில் இருப்பவர்களது உடலில் மணிபர்ஸ் அளவுள்ள 'மினிலாகர்' என்ற கருவி செருகப்பட்டிருக்கும். இது அவர்களுடைய உடலின் உஷ்ண அளவை பதினைந்து நிமிடங்களுக்கு ஒரு முறை பதிவு செய்யும்.

தொடர்ந்து முப்பது நாட்கள் தனிமை அறையில் இருந்துவிட்டு வெளியில் வந்த இளங்கோவன் - யுவனா சத்யப்ரியா புதுமணத் தம்பதிகளைச் சந்தித்தபோது...

"முதல் இரண்டு நாட்களுக்குத்தான் வெளி உலகத் தொடர்பு இருப்பது போன்ற உணர்வு இருந்தது. அதன் பின்னர் நாங்கள் வேறு கிரகத்தில் இருப்பது போல உணர்ந்தோம். எங்களது ஒவ்வொரு செயலையும் இவன்ட் பாக்ஸில் பதிவு செய்து கொண்டே வந்தோம். நிறைய நேரம் கிடைத்ததால் எங்களது உயிரியல் துறை சம்பந்தமான புத்தகங்களைப் படித்தோம். வீடியோவில் சினிமா பார்த்தோம். நாளிதழ் வாசித்தோம். எங்களுக்கு விருப்பமான உணவை தயாரித்துக் கொண்டோம். சூரிய வெளிச்சம், வாட்ச் இல்லாததால் நாங்கள் விழித்து இருக்கும் பகல், சப்ஜெக்டிவ் டே என்றும் தூங்கிய நேரத்தை சப்ஜெக்டிவ் இரவு என்றும் கணக்கிட்டோம். எவ்வளவு நேரம் தூங்கினாலும் அதை இரவாகக் கணக்கிட்டோம். மற்றபடி எங்களுக்கு உடல்

தனிமையில் டிக்... டிக்...!

ரீதியாகவோ, மனரீதியாகவோ எந்த பாதிப்பும் ஏற்படவில்லை." என்றனர்.

இந்த ஆய்வு குறித்து, 'வௌவால் மனிதர்' என்றழைக்கப்படும் டாக்டர் க.மாரிமுத்துவைச் சந்தித்தோம்.

"இந்த சோதனைகள் மூலமாக மருத்துவமனை மற்றும் தொழிற்சாலைகளில் ஷிப்டுகளில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் உடல் நிலை குறித்தும், நாடு விட்டு மற்றொரு நாட்டுக்குப் பறந்து சென்றடைந்தவுடன், அவரது செயல்பாடுகள் சென்றடைந்த நாட்டின் நேரத்துக்குத் தகுந்தபடி எவ்வாறு மாறுகின்றன என்பது பற்றியும், நீர் மூழ்கி கப்பல்களில் இருப்பவர்கள் உடல் நிலை குறித்தும் பல விஷயங்கள் தெளிவுபடும்.

"இந்தியாவிலிருந்து ஒருவர் அமெரிக்கா சென்றால் அங்கே சென்றபின் சுமாராக பதினொரு மணி நேரம் வித்தியாசப்படும். இது 'டிலேய்டு ஷிப்ட்' எனப்படும். இந்த நேர வித்தியாசத்தை அதற்குத் தகுந்தவாறு உடல் ஏற்றுக் கொள்ள மூன்று நாட்களும் இதே போல் ஒருவர் இந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியா சென்றால் அங்கே சென்றவுடன் ஏற்படும் நேர மாற்றத்தை 'அட்வான்ஸ் ஷிப்ட்' என கணக்கிட்டு அதற்கு ஏற்றவாறு உடல் நிலை மாறுபட ஏழு நாட்களும் ஆகும்" என்றார்.

"ஆய்வுக்கு உட்பட்ட இளங்கோ மற்றும் யுவனா சத்யப்ரியா ஆகியோர் தங்களது ஒரு நாளை சுமாராக 29 மணி நேரமாகக் கணக்கிட்டுள்ளனர். இவர்கள் 7ம் தேதியன்று 4ம் தேதி நாளிதழைக் கேட்டு வாங்கிப் பார்த்தனர். இவர்கள் தனிமை அறையில் 27 நாட்கள் இருந்ததாகவும் நினைத்தார்கள். மனிதத் தனிமை அறை வசதி, உலகில் ஜப்பான், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மனி, நெதர்லாந்து ஆகிய நாடுகளிலும் ஆறாவதாக இந்தியாவில் உள்ள மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலும் உள்ளது.

"இதுவரை தனிமை அறையில் தனித் தனியாக பதினாறு பேர் சோதிக்கப் பட்டிருக்கின்றனர். ஓர் இளம் தம்பதி ஆய்வுக்குத் தங்கியிருப்பது இதுவே முதன் முறை."

பேட்டி, படங்கள் : மது



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



72, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம், சென்னை - 63. Tel & Fax: 237 6129.
E-mail: sspeetam@md3.vsnl.net.in, sspeetam@hotmail.com
Please visit our Website at: www.sspeetam.org

புத்தாண்டு - பொங்கல் நல்வாழ்த்துக்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த 14 ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, திக்கற்ற 120 மாணவர்களும் 30 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்ந்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியைச் செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

● காலை சிற்றுண்டி (150 பேருக்கு)	ரூ.	1,000/-
● மதிய உணவு	ரூ.	2,000/-
● இரவு சிற்றுண்டி	ரூ.	1,000/-
● இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	1,000/-
● ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
● ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	12,000/-
● குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	2,00,000/-

மேலும் தங்களின் பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் பிறந்த நாள், தொழில் / வியாபாரம் தொடங்கிய நாள், மற்றும் இதர பண்டிகை நாட்களான தீபாவளி, பொங்கல், கிறிஸ்துமஸ், ரம்ஜான் போன்றவைகளில் மாணவர்களுக்கு சிறப்பு விருந்து ஒன்றை அளித்து அவர்களுடன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ளலாம்.

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம். தங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு **Cheque / DD / MO** மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு.

இறைவன் தொண்டில்
சுவாமி ஸ்ரீ ஸர்வாத்மானந்தர்



9

காஞ்சனா தாமோதரன்

"என்னைக் காயப்படுத்தணும். அதுக்காக நீ என்ன வேணும்னாலும் சொல்வே, இல்லையா விது?"

"எனக்குச் சண்டை போட ஆசையில்லை, ரமேஷ்."

"எப்போ பார்த்தாலும் 'நான், எனக்கு'. இதைத் தவிர உனக்கு ஏதாவது தெரியுமா?"

"எப்டி, எப்டி, கதையையே மாத்தறீங்களே. இது நியாயமா?"

சகஜமாகச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்த அப்பா அம்மா திடீரென்று எரிந்து விழ ஆரம்பித்ததுமே, புது நாய்க்குட்டி தொடர அருணாவும் அம்பிகாவும் சாப்பாட்டு மேசையை விட்டு எழுந்து போயாயிற்று. விது அப்படிப் பழக்கி வைத்திருந்தாள். குழந்தைகள் முன் பெற்றோர் சண்டை போட்டுக் கொள்வது அவர்கள் மனவளர்ச்சிக்கு நல்லதில்லை. அவர்கள் அந்த அறையை விட்டு வெளியேறியதால் மட்டும் அப்பா அம்மா சண்டை போடுவது தெரியாமலா போய் விடும் - உள்மனக் குரல். தெரியும்தான். ஆனால், பெரியவர்களின் விளை



இக்கரையில்

யாட்டுகளைச் சிறு மனங்கள் இப்போதே புரிந்து கொள்ள வேண்டாமே.

குழந்தை வளர்ச்சி மனோதத்துவம் பற்றி இவ்வளவு தெரிந்து வைத்திருப்பவன் சண்டையே போடாமல் இருந்தால் என்ன. பதில் சொல்லாமலேயே இந்தக் கேள்வியை அவள் கடந்து நீண்ட காலம் ஆகியிருந்தது.

விது சாப்பாட்டு மேசையைச் சுத்தம் செய்ய ஆரம்பித்தாள். ரமேஷ் அவ்வளவு தட்டுகளையும் கழுவி டிஷ்வாஷரில் போட்டான். மிச்சமிருந்த உணவைச் சின்னச் சின்ன ப்ளாஸ்டிக் டப்பாக்களில் போட்டுக் குளிர்ப் பதனப் பெட்டிக்குள் வைத்தான். விது கழுவிக் கொடுத்த பெரிய பாத்திரங்களைத் துடைத்துக் காய வைத்தான். விதுவைத் தொடர்ந்து தொலைக்காட்சி இருக்கும் குடும்ப அறைக்குள் உட்கார்ந்து கொண்டான்.

"சொல்ல வந்ததை முடி, விது. இப்போ உனக்கு என்ன வேணும், என்ன பிரச்னை?"

"பிரச்னை எனக்கு இல்லையே, ரமேஷ். நீங்கதான் உங்க வேலை போனாலும் போலாம்னு சொன்னீங்க. உங்களுக்குத் திறமை இல்லைன்னு சொல்லாம, நாட்டுப் பொருளாதாரம், ஆள் குறைப்பு அது இதுன்னு சும்ம்ம்மா கதை விட்டா எப்படியாம்?" அவன் நெற்றியில் அந்த நரம்பு மெல்லத் துடிக்க ஆரம்பித்திருந்தது. அதன் வேட்டைத் திறமையைக் குறைத்துப் பேசியதும் ஆண் மிருகம் கோபப்படுகிறது. ஆதி உணர்வோ. கொஞ்சம் பயமும் கொஞ்சம் சந்தோஷமுமாய் விது சிலிர்த்தாள்.

"நான் உன்னை என்ன பண்ணினேன், விது? ஏன் இப்படி வெறுத்துக் கொட்றே?"

"முதல்லே இப்படிச் சப்தம் இல்லாம டி.வி. பார்க்கிறதை நிறுத்துங்க." பின்னணியில் மௌனமாய் ஓடிக் கொண்டிருந்த தொலைக்காட்சியை அணைத்தான். தன் கேள்வியை மீண்டும் கேட்டான்.

"நான் உன்னை என்ன பண்ணினேன், விது?"

"நீங்க பண்ணினது இல்லை. நான் பண்ணாததுன்னு நீங்க நினைக்கிறீங்களே... ஒவ்வொரு நாளும் வார்த்தையில் சொல்லாம சொல்லிக் காட்டுறீங்களே... அதான்."

"விது, எம்.பி.ஏ. பண்ணணும்னு சொன்னே. முடிச்சே, சரி. வேலை பாக்கணும்னு சொன்னே. கிடைச்ச வேலை ஒண்ணுல கூட உன்னால ரொம்ப நாள் நிக்க முடியலியே... ஏன்னு அப்போ கேட்டதைத் தவிர நான் என்ன சொன்னேன்?"

இவன் மீண்டும் ஏளனம் செய்கிறான். இரத்தம் தலைக்கு வேகமாய் ஏறுவதை அவளால் உணர முடிந்தது. குரல் தானாய் உயர்ந்தது. "எனக்கு வாய்ச்ச சூப்பர்வைசர் எல்லாம் உதவாக்கரையா இருந்தா நான்

என்ன பண்ண முடியும்? உங்களுக்கென்ன? வீட்டைக் கவனிக்க ஒருத்தி இருக்கா, நிதானமா உக்கார்ந்து வேலை பாக்க முடியுது... கூட வேலை பார்க்கறவங்களோட கால்ஃப் விளையாடிக் காக்காய் பிடிக்க முடியுது..."

வேலையில் ஏன் நிலைக்க முடியவில்லை என்பது அவளுக்குமே புதிர்தான்.

"நீ உன்னிடமிருந்து அதிகம் எதிர்பார்க்கிறாயோ, விது? ஒரு வகையில் உன் வேலையைச் சராசரியாகக் கூடச் செய்யவிடாமல் அதுவே உன்னைத் தடுக்கலாம். இந்த அளவு 'பர்ஃபெக்ஷன்' என்பதற்கு இன்னொரு பெயர் 'நியூரோசிஸ் அப்செஷன்' - ஒரு விதமான மனநோய்." அவளோடு வேலை பார்த்தவள் சிரித்தபடியே சொன்னது நினைவுக்கு வந்தது. எதையும் நுணுக்கமாக, ஒரு குறையும் இல்லாமல் செய்ய வேண்டும் என்பதை அவ்வளவு தீவிரமாகத் தன் மனதில் பதித்தது யார்...?

ஒரு வேலைக்கும் இன்னொரு வேலைக்கும் இடையே வீட்டில் உட்கார்ந்திருக்கும் போது டெல்லியில் அம்மாவைக் கூப்பிடுவாள். வேலையில் சேர்ந்து இன்னும் ஒரு மாதம் கூட ஆகவில்லையே அதற்குள்ளேயா அம்மா கணக்கு வைத்திருப்பாள். எடுத்த காரியம் எல்லாவற்றையும் வெற்றிகரமாகச் செய்து முடிக்கும் அம்மாவுக்கு இந்த விது மாதிரி ஒரு தோல்விக் களஞ்சியம் பிறந்தது எப்படி? அம்மா கேட்க மாட்டாள். ஆனால் விதுவுக்கு அவள் மௌனம் புரியும்.

பத்தாயிரம் மைல் தள்ளியிருந்தும், தொலைபேசி மௌனத்தினாலேயே மூச்சு முட்டச் செய்பவள் அம்மா... விதுவின் மூச்சு வேகம் அதிகரித்தது இப்போது. பாய்வதற்கு வசதியாக இதோ ரமேஷ் பக்கத்திலேயே இருக்கிறான்.

"உங்களுக்கு வேலை போனா கவலைப்பட வேண்டாம். என்னைக் குத்திக் காட்டுறதுன்னுதான் இன்னொரு வேலை இருக்கவே இருக்கே..."

"வேலை போக ஒரு சின்ன சான்ஸ் இருக்குன்னுதானே சொன்னேன். அதுக்குள்ளே என் வேலை போயே போய்ட்டதா தண்டோரா போட வேண்டாம்..." ரமேஷ் கொஞ்ச நேரம் அமைதியாய் இருந்தான்.

"விது, சூரியன் மாதிரி உன்னையே எப்பவும் மத்தியில் வைக்காம ஒரு பிரச்னையைப் பார்க்க உன்னால முடியுமா?"

"இல்லை, ரமேஷ். என்னால முடியாது. உங்களாலேயும் முடியாது. எந்த மனுஷப் பிறவியினாலுமே முடியாது. ஆனா, உங்க எல்லாரையும்விட நான் நேர்மையா வெளிப்படையா அதைச் சொல்றேன். அவ்வளவு தான்."

"இதுக்குப் பேர் நேர்மையும் வெளிப்படையுமா?" ரமேஷின் குரலில் ஏளனம். நிறுத்தினான். குரல் கொஞ்சம் இளகியது. "விது, எல்லாம் நீ விரும்பறபடி இருந்தா சந்தோஷமா இருப்பே. உனக்குள்ளேயே ஏதோ ஓர் அலைச்சல். வேலை சரியா அமையலைங்கிறது ஒரு காரணம்தான். மத்த காரணங்கள் என்னன்னு சொல்ல மாட்டேங்கிறே. உனக்கே புரியலியோ என்னமோ. தினமும் நான் வீட்டுக்கு வந்தவுடன் என்னைக் காரணம் இல்லாமல் குத்திக் கிழிக்கிறே. கொஞ்சம் ஒதுங்கி இருக்கிறதைத் தவிர வேற என்ன செய்றதுன்னு எனக்குப் புரியலை..."

விது சும்மா இருந்தாள்.

"விது, சினிமாத்தனமா ஃப்ளாஷ்பேக் பண்றேனேன்னு நினைக்காதே. நாம சேர்ந்து சந்தோஷமா இருந்த காலம் ஞாபகம் இருக்கா? அது நீதானான்னு எனக்கு இப்போ ஆச்சரியமா இருக்கு. எனக்கு இப்போ நீ யாருன்னே தெரியலை. நாம என்ன விளையாட்டு ஆடறோம்னும் புரியலை." ரமேஷின் குரல் உடைந்தது. அவன் கண்களில் என்ன, நீரா? விது திடுக்கிட்டுப் போனாள். ஒரு கணம் உள்ளே ஏதோ அசைந்து கொடுத்தது.

"இப்போ ஏன் அழறீங்க?"

மௌனம். அழுது பழக்கப்படாத ஒருவன் குலுங்கி அழுகிற மௌனம்.

"விது, என்னை உனக்குப் பிடிக்கலைன்னு எனக்குப் புரிஞ்சு ரொம்ப நாளாச்சு. இப்போ எனக்கும் உன்னைப் பிடிக்காமல் போச்சோன்னு பயமா இருக்கு. அதான்..."

விது அதிர்ந்தாள். அவனிடமிருந்து அவள் விலகிச் சில வருடங்கள் ஆயிற்று. ஆனால், அவன் தன்னிடமிருந்து விலகுவது எதிர்பாராதது. இவனுக்கு எவ்வளவு

"தூக்கத்துல நடந்துக்கிட்டிருந்தானே உங்க பையன்... மருந்து சாப்பிட்டதுக்கு அப்புறம் ஏதாவது இம்ப்ரூவ்மெண்ட் இருக்கா?"

"நல்ல இம்ப்ரூவ்மெண்ட் இருக்கு டாக்டர்... இப்பல்லாம் ஓடுறான்!"

- ஜி.வி.பிரியா.

தைரியம். எவ்வளவு அலட்சியம். அவன் அழுததால் பூத்த சிறு கனிவும் மறைந்தது.

"அப்போ டிவோர்ஸ் பண்ணலாமா, ரமேஷ்?" மென்மையாகக் கேட்டாள்.

அவள் எதிர்பார்த்த அதிர்வு அவன் முகத்தில் தெரிந்தது. கொஞ்சம் நிம்மதியாய் இருந்தது.

"ஃப்ரெஞ்ச் ஃப்ரைஸ் வாங்கலாமான்றது மாதிரி டிவோர்ஸ் கேக்கிறியே, விது?"

"ஒரு கட்டத்துக்கு அப்புறம் எல்லாமே நமுத்துப் போன ஃப்ரெஞ்ச் ஃப்ரைஸ்தான்."

"ஏன் டிவோர்ஸ் பண்ணணும்? சொல்லு."

"ஆணியடிச்ச மாதிரி இதுதான் காரணம்னு சொல்ல முடியாது, ரமேஷ். நீங்களேதான் சொன்னீங்களே. எனக்கு உங்களைப் பிடிக்கலை, உங்களுக்கு என்னைப் பிடிக்கலை. நானா உங்களைத் தொட்டு நிறைய வருஷம் ஆச்சு. நீங்க இப்போ என் பக்கத்தில கூட வர்றதில்லை. உண்மையான கணவன் - மனைவியா வாழ்ந்து ரொம்ப காலம் ஆச்சு. அதனால, ஒரே வீட்ல நாம சேர்ந்து இருந்தாலும், இப்போ நான் சொல்றது கோர்ட்டில செல்லுபடி ஆகும்..."

"சட்ட நுணுக்கமா?" ரமேஷ் குரலில் கொஞ்சம் கோப அதிர்ச்சி. "ஒண்ணில்லை, ரெண்டில்லை, பதினாறு வருஷம். கொஞ்ச அர்த்தம்கூட மிஞ்சலையா, விது? திரும்பி வர முடியாத கட்டத்தை நாம இன்னும் தாண்டலை..."

"நான் தாண்டிட்டேன்." 'புரிந்துதான் பேசுகிறாயா?' என்ற சிறு உள்குரலை நசுக்கினாள்.

"விது, உன் மனசில பிடிவாதம் இருக்கிற அளவுக்கு உறுதி கிடையாது. எனக்குத் தெரியும். உனக்குள்ள அடைஞ்சு கிடக்கிற வருத்தங்களுக்கு என்னையும், நம்ம உறவையும் காரணமாக்கப் பார்க்கிறே. நீ பண்றது சரியா? கொஞ்சம் நினைச்சுப் பார்."

"உங்ககிட்டே நெருங்க முடியாது..."



"இவ்வளவு நேரமா, உன் கால்ல விழாத குறையா கெஞ்சிப் பேசிக்கிட்டிருக்கேன். எங்கிட்டயா நெருங்க முடியாதுன்னு சொல்றே?"

மௌனம்.

"விது, அப்படியே நெருங்க முடியலைன்னாலும், அதுக்குக் காரணம் நானா நீயா?"

மௌனம்.

"விது, வாயைத் திறந்து பேசேன். நாம இரண்டு பேரும் சந்தோஷமா இருக்க முடியும்னுதான் நான் நினைக்கிறேன்."

விது மௌனமாய்ப் படுக்கையறைக்குள் நுழைந்தாள். ரமேஷ் தொடர்ந்தான். படுக்கையில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டான். மௌனத் தொலைக்காட்சி போடத் துறுதுறுத்த கையை அடக்கினான். படுக்கையின் கால்மாட்டில் இருந்த நீளமான சிடார் மரப்பெட்டியை விது திறந்தாள். அதனுள்ளிருந்த பட்டுப் புடவைகள், காக்ராக்கள் இத்யாதிகளின் அடியிலிருந்து ஒரு சால்வையை உருவி எடுத்தாள். தேனிலவுக்குக் காஷ்மீர் போனபோது, ஸ்ரீநகரில் அவன் அவளுக்காக வாங்கியது. ரமேஷ் அருகே உட்கார்ந்து அதை அவனுக்குப் போர்த்தினாள். மென்மையான சிடார் மர வாசமும் சால்வையின் மிருதுவும் காஷ்மீர் ஞாபகங்களும் அவனை அணைத்துக் கொண்டன.

ரமேஷ் தன்னையறியாமல் புன்னகைத்தான்.

"பொன்னாடையா?"

அவன் கைகளைப்பற்றிக் கொண்ட விதுவின் முகத்தில் பதில் புன்னகை இல்லை. ஒன்று மாற்றி ஒன்றாய் அவன் உள்ளங்கைகளுள் அவள் முத்தங்களும் கண்ணிமை ஈரமும் சேர்ந்து மெல்லப் பதிந்தன.

"ரமேஷ், நாம இரண்டு பேரும் சந்தோஷமா இருக்க முடியும்னு சொன்னீங்க. முடியும். ஆனால், சேர்ந்து இல்லை."

பக்கத்து அறையிலிருந்து அப்பா - அம்மாவின் குரல்கள் ஏறுவதும் இறங்குவதும் மட்டும்தான் கேட்டன. சுவர் வழியே வார்த்தைகள் புரியவில்லை. அப்பாவும் அம்மாவும் இன்றைக்கும் தூங்கமாட்டார்களோ. நடுவில் கிடந்த நாய்க்குட்டியை அணைத்துக் கொண்டு, அரையிருட்டில் ஒருவரை ஒருவர் பார்த்தபடி, படுக்கையில் சுருண்டிருந்த அருணாவும் அம்பிகாவும் தூங்கவில்லை.

(தொடரும்)



மனிதன்!

பெங்களூர் விக்டோரியா பொது மருத்துவமனை பிணவறை அருகே காலை பத்து மணிக்கெல்லாம் தவறாமல் வருகை தரும் திருவிக்கிர மகாதேவாவுக்கு அப்படி என்னதான் வேலை? அடையாளம் தெரியாமல் அநாதையாக இறந்து போனவர்களின் சடலங்களைப் பெற்றுச் சென்று இடுகாட்டில் அடக்கம் செய்வதுதான் இவருடைய வேலை. கடந்த முப்பது ஆண்டுகளாக, தனி மனிதனாக, இந்தச் சேவை செய்து வருகிறார்.

பதினேழு வருடங்களுக்கு முன் இடிந்து விழுந்த கங்காராம் புத்தகக் கட்டடத்தில் கண்டெடுக்கப்பட்ட அடையாளம் தெரியாத சடலங்கள், விடுதலைப்புலி சிவராசன் கும்பல் உள்பட பல பிரபல ரவுடிகள் என பாகுபாடின்றி இதுவரை 40,000க்கும் மேற்பட்டவர்களின் சடலங்களை இவர் அடக்கம் செய்திருக்கிறார். துவக்கத்தில் ஒரு சடலத்துக்கு 75 ரூபாய் என்று கொடுத்து வந்த போலீசார் தற்போது 200 ரூபாய் கொடுக்கிறார்கள். மயானத்தில் குழி தோண்டுபவருக்குக் கொடுக்கப்படும் கூலியும் இதில் அடக்கம். மருத்துவமனையில் கிடைக்கும் சடலங்களைத் தவிர வசதியற்ற ஏழைகள் இறந்துவிட்டாலும் பணம் ஏதும் பெறாமல் இலவசமாகவே அவர்கள் முறைப்படி காரியங்களைச் செய்து தருகிறார்.

“**எ**ட்டு வயது சிறுவனாக இருந்தபோது உடல் நலமில்லாத என்னுடைய தாயை நஞ்சன்கூடு தாலுகாவில் உள்ள ஒரு கிராமத்திலிருந்து பெங்களூருக்கு அழைத்து வந்தேன். மருத்துவமனையில் சேர்ந்த சில நாட்களுக்குள் தாயார் இறந்துவிடவே அநாதையானேன். அப்போது இது போன்று அநாதைப் பிணங்களை வாங்கி, அடக்கம் செய்து வந்த 'தாத்தா' என்பவர் எனது தாயாரின் உடலை அடக்கம் செய்ததோடு எனக்கும் அடைக்கலம் கொடுத்தார். தாத்தாவின் மரணத்துக்குப் பிறகு அதே தொழிலில் ஈடுபட்டேன். எனது சேவையைப் பாராட்டிய ஒருவர் உதவியுடன் சொந்தமாக குதிரை வண்டியொன்றை வாங்கி, பிணங்களை மயானத்திற்கு எடுத்துச் செல்லத் தொடங்கினேன். கட்டை வண்டி, பாரவண்டி என்று பயன்படுத்திய எனக்கு, குதிரை வண்டி ரொம்ப சௌகரியமாக இருக்கிறது. இருந்தாலும் நெருக்கடி மிகுந்த சாலைகளில் பிணத்துடன் செல்லும்போது, மக்கள் பீதி அடைகிறார்கள். ஆட்டோ அல்லது சிறிய வேன் இருந்தால் உதவியாக இருக்கும். ஆனால் பணத்துக்கு எங்கே போவேன்?” என்கிறார்.

இவரது சேவையைப் பாராட்டி கர்நாடக அரசு, ஆண்டுதோறும் கர்நாடக ராஜ்யோத்சவா தினத்தன்று பல்வேறு பிரிவினருக்கு, தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிப்பதுபோல் இவருக்கும் பதக்கம் வழங்கி கௌரவித்தது. ஆனால் மனைவியின் மருத்துவச் செலவுக்காக அதை விற்று விட்டாராம்!

“இஸ்லாமிய மதத்தில் யாராவது அநாதையாக இறந்துவிட்டால், முஸ்லிம் அமைப்புகள் முன்வந்து அடக்கம் செய்கின்றன. எத்தனையோ இந்து சேவை மையங்கள் இருந்தபோதிலும் இந்த விஷயத்தில் போதுமான அளவு உதவி கிடைப்பதில்லை. மனித நேயம் என்பது எதுவரை...?' - கேட்கிறார் மகாதேவன் வேதனையோடு.

— அ. குமார்.



வாக்கு மேலம்

தேர்தல்தோறும்
இறந்துபோனோர்
உயிர்த்தெழுவதுண்டு...
இப்போதோ
வாக்களித்துவிட்டு
உயிருடன் திரும்ப
உத்தரவாதமில்லை!

ஆயுத சின்னங்கள்
போட்டியிட்டு
ஜனநாயகத்தை
ரணப்படுத்தி ஓடவைக்க...

பலரின் பதவிக்காக
சிலருக்குச் சிவலோகப் பதவி!

இந்நாட்டு மன்னர்களின்
உரிமைகள் கைப்பற்றப்பட்டு
தேர்தலில் விழுந்தது
வன்முறை முத்திரை!

பொய்களை
ஜீரணிக்கமுடியாமல்
திணறிப்போயின வாக்குப் பெட்டிகள்!

இனி
உயிரைத் துச்சமாய் மதித்து
வாக்களிக்கப் போனாலும்
அடையாள அட்டை அவசியம்...
சடலங்களை
அடையாளங்காண உதவுமே!

தஞ்சை ராகவ், மகேஷ்

உடல் வளத்துக்கு உணவு எப்படி இன்றியமையாததோ அப்படியே மன வளத்துக்கு பக்தி முக்கிய தேவையாகும். மாலுமிகள் பயன்படுத்தும் திசைகாட்டும் கருவி எப்போதும் வடதிசையை நோக்கியே இருப்பதுபோல பக்தரும் எப்போதும் பகவானை நோக்கியே இருப்பதுடன் அந்த நிலையில் மட்டுமே ஆனந்தம் அடையும் மனப் பக்குவத்தையும் பெறவேண்டும்.


- ஸ்ரீ சாய்பாபா

- எஸ். சுவாமிநாதன், மன்னார்குடி



சமீபத்தில் தீவிரவாதிகளால் தகர்க்கப்பட்ட அமெரிக்க ராணுவ தலைமையகம் பெண்டகனின் பரப்பளவு 29 ஆயிரம் ஏக்கர். இது இரண்டாவது உலகப் போரின்போது 14 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டது. வேலை செய்வோர் 28000 பேர். 13 லிஃப்ட்டுகள் உள்ளன. டெலிபோன் தொடர்புகளின் எண்ணிக்கை 36,000 தினசரி பழுதாகும் மின்சார பல்புகளின் எண்ணிக்கை மட்டும் ஆயிரக் கணக்கில் இருக்குமாம்.

- வே. செந்தில்குமார், கொங்கணாபுரம்.





கொளுத்திப் போடு; லட்சுமி வருவா!

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஒரு சிறந்த ஓவியர் என்பது பலருக்குத் தெரியாது. ஒரு தாளில் கட்டுரையோ கவிதையோ எழுதும்போது அந்தப் படைப்புக்குரிய ஓவியத்தை தலைப்பிலேயோ, ஓரத்திலேயோ தீட்டிவிடுவார். தாம் படித்துக் கொண்டிருக்கும் புத்தகத்தின் மீது கூட அப்போதைக்குத் தோன்றும் ஓவியத்தை உடனே வரைந்து மகிழ்வார்.

ஆதாரம்: 'நினைவலைகளில் பாவேந்தர்'

தகவல்: பாரதிசெல்வம்

தினமும் சுத்தமான தேனுடன் பேரீச்சம் பழம் கலந்து அல்லது பனங்கற்கண்டு பசும் பாலுடன் தேன் சேர்த்துக் குடியுங்கள். உடல் பருமன் அதிகரிக்கும்.

- கே. ராஜேந்திரன், மருதாடு.

திருவொற்றியூர் நகராட்சியின் 20-வது வார்டுக்கு, காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் ராதாகிருஷ்ணன் தமது வார்டில் உள்ள 3647 வாக்காளர்களுக்கும் தமது வெங்கடேஸ்வரா தியேட்டரில் 'பூவெல்லாம் உன் வாசம்' திரைப்படம் பார்க்க கை சின்னம் போட்ட இலவச காட்சிக்கான டிக்கெட் வழங்கினார்.

- சிவகங்கை இராம் முருகன்

ஆட்டோவின் முகப்பில் ஏதாவது

தேன்கூடு

கடவுளின் பெயரை துணையாக குறிப்பிடுவர். ஆனால் எங்கள் ஊரில் ஓடும் ஆட்டோவில் 'ஸ்ரீ மனசாட்சி துணை' என எழுதப்பட்டுள்ளது.

- வே. தெய்வேந்திரன்,
மஞ்சள்நீர்காயல்.



ஒரு கால்பந்தாட்ட வீரர், கால்பந்து விளையாடும்போது, மைதானத்துக்குள் ஒவ்வொரு ஒன்பது நிமிடங்களுக்கும் சராசரியாக ஒரு மைல்தூரம் ஓடிக்கொண்டிருக்கிறார்.

- ச. பிரபு, ஈரோடு.

பீகார் மாநிலத்தில் தீபாவளியின்போது வீட்டைச் சுத்தம் செய்வார்கள். பிறகு ஒரு துடைப்பத்தைக் கொளுத்தி வெளியே போட்டு விடுவார்கள். அப்படிச் செய்வதால் மூதேவி வீட்டை விட்டு வெளியேறி, மஹாலட்சுமி தங்கள் வீட்டிற்கு வருவாள் என்பது நம்பிக்கை.

- பா. அச்சுதன்,
சென்னை - 30

ஒரு நல்ல செயலை துவங்குவதற்கும் ஒரு தீய பழக்கத்தை விட்டு விடுவதற்கும் நல்ல நாள் பார்த்துக் கொண்டிருக்கிறீர்களா? இதோ... இன்று தான் அந்த நல்ல நாள்!

- படித்த
நினைவிலிருந்து
நரேந்திரன்

பழங்களின் இனிப்



பைச் சுவைத்து மகிழும் நாம், அந்த இனிப்புச் சுவைக்காக பாடுபடும் இயற்கையைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டாமா? ஒருதுண்டு பழத்தில் இருக்கும் சர்க்கரைச் சத்துக்காக அந்த மரத்தின் 35 இலைகள் ஒரு வேனிற் கால முழுவதும் செயல்பட வேண்டியிருக்கிறது!

- கௌசல்யா
ஸ்ரீவத்ஸவன்

ARTHRITIS / மூட்டுவலி

1. OSTEO ARTHRITIS
2. RHEUMATOID ARTHRITIS
3. ANKYLOSING SPONDYLITIS
4. GOUT

1. கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும்.
2. கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும்.
3. கழுத்து வலி (Cervical Spondylitis)
4. நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area)
5. இடுப்பு எலும்பும் (Pelvis Bone) தொடை எலும்பு தலையும் (Femural Head) சேருமிடம்.
6. குதிகால் இணைப்புகளின் வலி.

முதலியவை பல ஆண்டுகளாக இருந்தாலும் வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்கவிளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம்.

சென்னை, பம்பாய், டெல்லி மற்றும் வெளிநாட்டில் இருந்தும், தாங்கமுடியாத மூட்டுவலியுடனும், வீக்கத்துடனும் நடக்க முடியாமல் சிரமப்பட்டவர்களும், காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாமல் சிரமப்பட்டவர்களும், எங்களிடம் நல்ல விதமாக சிகிச்சை பெற்று மகிழ்ச்சியுடன் சென்று இருக்கின் றார்கள். மற்ற விபரங்களுக்கு நேரில் வந்து பார்த்தால்தான் நாங்கள் கொடுக்கும் சிகிச்சையின் தன்மை புரியும்.

ADYAR NATURE CURE CENTER

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 600 020.
Phone:4413399, 4402470. Tele Fax: 044-4916650
(காந்திநகர் பஸ்டெப்போ எதிரில் Aunty Uncle ஷாப் பக்கத்தில் உள்ள தெரு)

ஆர்த்ரிடிஸ் பற்றியும் - மற்றும் அதற்கு ஏற்ற உணவுப் பழக்கம் பற்றியும் தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் நேரில் வந்து குறிப்பு புத்தகங்களை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: வெளியூரில் இருந்து வருபவர்களுக்கு, குறைந்த செலவில் தங்க, சாதா மற்றும் ஏர்கண்டிஷன் ரூம்கள் வாடகைக்கு எங்கள் ஆஸ்பத்திரியில் கிடைக்கும். சைவ உணவு வசதி மட்டும் உண்டு. வியாதியஸ்தர்களுக்கு தேவைப்பட்ட மாற்று உணவுகளும் வழங்கப்படும் என்பதையும் அறியவும்.

நீங்கள் கேட்டவை - தராசு

● எஸ்.பவதாரிணி சீனிவாசன், திருத்துறைப்பூண்டி ❐

? ஆஸ்திரேலியா, பிரேசில் போன்ற நாடுகளில் கட்டாயமாக வாக்களிக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறதாமே. இங்கும் நடைமுறைப் படுத்தினால் என்ன?

! சட்டம் இயற்றலாம். நடைமுறைப்படுத்துவதுதான் சாத்தியமில்லாத காரியம். தேர்தல் பணிகள் ஏற்கெனவே விழி பிதுங்கச் செய்யுமளவுக்கு இருக்கின்றன. அடையாள அட்டை கொடுப்பதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது. அப்புறம் எப்படி இவ்வளவு பேரும் வாக்களித்தார்களா என்று பார்ப்பது?

● உமரி பொ. கணேசன், மும்பை - 37


? 'பெண்கள் வளர்ச்சியடையாமல் எந்த நாடும் உருப்படாது' என்று ஷபானா ஆஸ்மி கூறியுள்ளாரே?

! உண்மைதான். வளர்ச்சிக்கு வழி வகுத்துத் தரவேண்டுமே யொழிய, 'சலுகை ஒதுக்கீடு மூலம் வளர்ச்சியைத் திணிப்பேன்' என்று சண்டி பண்ணக் கூடாது. அப்புறம் குருவி தலையில் பனங்காய் வைத்தாற்போல் ஆகிவிடும்.

● விஜயஸ்ரீ ராஜேஸ்வரன், மொரட்டுப் பாளையம்

? ஒரே நேரத்தில் நானும், லைலாவும், மும்தாஜும் உங்களைச் சந்திக்க வந்தால் யாரை முதலில் சந்திப்பீர்கள்?

! நீங்கள் மூவரும் சந்தித்துக் கொள்ள வழி செய்துவிட்டு நான் ஜூட் விடுவேன். (சினிமா நடிகைகள் தொடர்பான கேள்விகளுக்குத் தராசு பதில் சொல்லாமல் ஜூட் விடுகிறார் என்று இனி யாரும் சொல்ல முடியாது)





• வளர்ச்சி ஃபார்முலா



• ... நேரத்தில்..!

● க. நாகராஜன், பறக்கை

? அன்றைய எம்.ஜி.ஆர். அரசை 'ஸ்லோ பட் நாட் டல்' என்று சொல்வார்கள்... இப்போதைய அரசை என்ன சொல்லலாம்...?

! Bad, but not dead!

● எஸ். ஆறுமுகம், விழுப்புரம்

? ஜெயலலிதாவின்

• ஒரே..

▢ ரூ.100 பரிசு பெறுபவர் :
எஸ். பவதாரிணி சீனிவாசன்,
சரவணா காலனி, 12எ, வடக்கு
வீதி, திருத்துறைப்பூண்டி - 614 713

★ ரூ.50 பரிசு பெறுபவர் :
கல்லார் ரஹ்மத்,
220, கடசல்கார தெரு,
நாகை - 611 001.

வடிவேலு சொன்னது நியாயமா?

? வருங்காலம் எப்படி இருக்கும்..?

! வரும்படியான காலமாக!

● ஆர்.ஆர்.சாமி, திருவண்ணாமலை

? நமது நாட்டின் பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் காப்பது பத்திரிகைகளின் கடமை என்கிறாரே சுஷ்மா சுவராஜ்..?

! தேச நலன் என்ற விரிந்த பரந்த நோக்கில் இம் பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் உள்ளடக்கி பார்த்தால் இந்த அறிக்கைக்கு அழகான அர்த்தம் இருக்கிறது; குறுகிய ஹிந்துத்வ கண்ணாடி வழி பார்த்தால் ஆபத்து இருக்கிறது!

● பா. குணா, சேத்துப்பட்டு

? உங்களுக்குப் பிடித்த மேடை நாடகம்?

! வீரப்பன் - தேவாரம் நாடகம்; வாஜ்பாய் அயோத்யா நாடகம்!

● பஞ்சவண்ணமகன், கருப்பம்புலம்

? முன்னாள் பிரதமர் நரசிம்ம ராவ் - இந்நாள் தமிழக முதல்வர் பன்னீர்செல்வம் - ஆறு வித்தியாசங்கள் சொல்லுங்களேன்..?


• தமிழ்ப் பற்று!...

! கட்சிக்குள் பலத்த எதிர்ப்புக்கிடையே அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்துக் கொண்ட ராவ் எங்கே. 'டம்மி' முதல்வரான பன்னீர் எங்கே..! இந்த ஒரு வித்தியாசமே ஆறாயிரம் வித்தியாசங்களுக்குச் சமமாயிற்றே!

● ஜி. ஜெயராமன், கூந்தலூர்

? அ) மத்திய அரசின் நிதி நிலைமை?
ஆ) தமிழக அரசின் நிதி நிலைமை..?

! அ) மெச்சிக் கொள்ளும்படி இல்லை. கறு கறுப்புடன் இயங்கினால் காலம் தள்ளலாம்.

ஆ) நிதி இல்லாவிட்டாலும் கருணாநிதி இருக்கிறார்; அவர் தலையை உருட்டிக் காலம் தள்ளலாம்!

● த. குமரேசன், புதூர்

? நேரடி ஒளிபரப்பில் (சன் டீ.வி.) பேசிய வடிவேலுவிடம் ஒரு நேயர் 'நீங்கள் பேசுவது சுத்த தமிழாக இல்லையே.... நடிகர்கள் எல்லோருமாகச் சேர்ந்து நல்ல தமிழில் பேசி தமிழுக்கு அழகு சேருங்களேன்..' என்று கூற, 'நீங்கள் தமிழரா?' என்று எதிர்க் கேள்வி கேட்டார் வடிவேலு. அவர் இல்லை; தாம் கன்னடக்காரர் என்று பதில் சொல்ல, 'போனைக் கீழே வையுங்க!' என்று அவரைத் துண்டித்தார் வடிவேலு... இது நியாயமா?

! கன்னடக்காரர் ஒருவருக்குத் தமிழின்மேல் உள்ள பற்றுக்கு மதிப்பளித்து பதில்கூறாமல் தமிழரான வடிவேலு மட்டம் தட்டியது துரதிர்ஷ்டம்தான்.

● திருமலை நாயக்கன், வேலூர் - 4

? சாதாரணமானவர்களின் சுற்றுப் பயணத்துக்கும் விஐபிக்களின் சுற்றுப் பயணத் துக்கும் என்னங்க வித்தியாசம்?

! பஸ் ஸ்டிரைக் சமயத்தில் டாபிகலான கேள்வி கேட்டு, கேள்வி - பதில் பகுதியில் இடம் பெற்ற உங்கள் சாமர்த்தியத்தைப் பாராட்டுகிறேன்.

● கல்லார் ரஹ்மத், நாகை ★

? **Euthanasia** என்றழைக்கப்படும் கருணைக் கொலையை ஆதரிக்கிறீர்களா?

! விஞ்ஞான, மருத்துவ முன்னேற்றங்களின் விளைவால் மனித உயிரை செயற்கையாக நீட்டித்து வைக்கிற ஆற்றலைப் பெற்று அதை உபயோகித்தும் வருகிறோம் என்னும்போது, அதே ஆற்றலை, அந்த உயிருக்குக் கௌரவமானதொரு முடிவைத் தரப் பயன்படுத்துவது நியாயமே. ஆனால் இது விஷயத்தில் முதலில் சட்டத்தின் அனுமதி வேண்டும் (நம் நாட்டில் அது கிடையாது); பின்னர் உற்றார் உறவினரின் பூரண சம்மதம் வேண்டும்.


• பாரம்பரியக் கவலை!


• ஏணி வைத்தாலும்...


• ... எட்டாது!

குழந்தை மட்டும்

ஜி.பி.சதுர்புஜன்



கேகேயை சந்திக்க ஐஐஎஸ்ஸி ஹாஸ்டலுக்கு போய்க் கொண்டிருந்தேன். இது என்ன 'கேகே' என்று ஒரு பெயர் என்று கேட்கிறீர்களா? என் நண்பன் பெயர் தான் கிருஷ்ணகுமார். நாங்கள்தான் சுருக்கி செல்லமாய் கேகே என்று கூப்பிட ஆரம்பித்தோம். நாளடைவில் அந்தப் பெயரே நிலைத்துவிட்டது.

என்னுடைய ஜாதகத்தில் புதன் சற்று வலுத்திருப்பதாலோ அல்லது என்னுடைய நியூமராலஜி எண் ஐந்து என்பதாலோ - என்ன காரணம் என்று தெரியவில்லை - எனக்குப் பலதரப்பட்ட நண்பர்கள் எப்படியோ வந்து அமைந்து விடுகிறார்கள். மெத்தப் படித்த மேதாவிலாசிகள், நான்காம் வகுப்போடு நிறுத்திவிட்டு நாலுவிதக் கடைகளில் வேலை பார்ப்பவர்கள், உயர்வு தாழ்வு என்றில்லாமல் பலதரப்பட்ட நண்பர்கள் எங்கிருந்தோ வந்து சேர்ந்து விடுகிறார்கள்.

கேகேக்கும் எனக்கும் நிறைய வித்தியாசம். நான் கூச்ச சுபாவமுடையவன். அவனோ எங்கும் எதற்கும் சிறிது கூட கூச்சப்பட மாட்டான். மனத்தில் தோன்றுவதை எல்லாம் தேங்காய் உடைப்பது போல் பட்டென்று சொல்லிவிடுவான். அப்படி ஒரு தைரியம்!

நான் உடையில் அவ்வளவாக அக்கறை செலுத்த மாட்டேன். அதெல்லாம் பெண்களுக்குத்தான் முக்கியம் என்று விட்டுவிடுவேன். கேகேயோ மிகவும் அக்கறையோடு, நன்றாக மாட்ச் செய்து, போடுவான். புதிதாய் வந்திருக்கும் ரெடிமேடுகளைத்தான் வாங்குவான். எங்களுடைய முற்றிலும் மாறான போக்குகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

ஆனாலும் நாங்கள் இருவரும் நெடுநாளைய நண்பர்கள். ஏதோ ஒரு வசீகரம் எங்கள் இருவரையும் நட்புப் பிடியில் இணைத்து வைத்துக் கொண்டிருக்கிறது என்றுதான் எனக்கு நினைக்கத் தோன்றுகிறது. இல்லாவிட்டால், இப்படி, திருமணமாகி, இரண்டு குழந்தைகள் என்று ஆனபின்பும், வீட்டில் மனைவி கமலாவுக்கு துணையாக இருப்பதை விட்டு விட்டு, கேகே, கேகே என்று பள்ளி, கல்லூரி நாட்களில் இருந்ததைப் போல் ஸ்கூட்டரை எடுத்துக் கொண்டு அவனைத் தேடி



போட்டிக்கதை-13

அலைவேணா..?

ஜஎஸ்வி ஹாஸ்டல் ஓரமாக வண்டியை நிறுத்தினேன்.

உள்ளே போய்ப் பார்த்தால், கதவைச் சாத்திக் கொண்டு என் கண்களுக்கு இலத்தீனும் கிரேக்கமுமாய் விசுவரூப மெடுத்த தலையணை அளவு கணிதப் புத்தகங்களை, நாவலைப் படிப்பதுபோல் புரட்டிக் கொண்டிருந்தான் கே.கே.

என்னைப் பார்த்தவுடன் அதையெல் லாம் ஒதுக்கிவிட்டு, ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு நொடிப் பொழுதில் அரட்டைக்குத் தயாராகிவிட்டான். "என் னவோ தெரியலை பாலு. உன்னைப் பார்த் தால், எனக்கு நல்ல மாற்றாக இருக்கிறது. கணக்கும் பௌதிகமும், இடையிடையே கல்யாணப் பேச்சுமாய் இருக்கும் கேம்பஸ் நண்பர்கள் கம்பெனி வெகு சீக்கிரம் எனக்கு போரடித்துவிடுகிறது. உன்னைப் பார்த் தால்தான் எனக்குப் புதுப்புது ஐடியா வெல்லாம் வருகிறது." என்று இயற்கையான உரிமையோடு ஆரம்பித்தான்.

எங்களுக்கே உரித்தான உலகத்தில்

இருவரும் சஞ்சரித்துக் கொண்டிருந்தோம். எவ்வளவு நேரமானாலும் கேகே சொல்லுவதைக் கேட்டுக் கொண்டேயிருக்கலாம்.

அப்போதுதான் அந்த விபரீத ஆசையை கேகே சர்வசாதாரணமாக வெளியிட்டான்.

"என்னப்பா, நீதான் பி.எச்.டி.யை முடிக்கப் போகிறாயே. இதே இன்ஸ்டிடியூட்டில், உனக்குப் பிடித்த நல்ல வேலையும் கிடைக்கப் போகிறது. நல்ல பெண்ணாய்ப் பார்த்துச் சொல்லவா கல்யாணத்துக்கு?" என்று நான் கேட்டதற்கு, அவன் சொன்ன பதில் மிகவும் வினோதம்.

"பாலு... உனக்கு என்னுடைய டேஸ்ட் ரொம்ப வித்தியாசமாய் இருக்கலாம். ஆனால், நான் நல்லா யோசிச்சு, என்னுடைய உணர்வுகளைப் புரிஞ்சுகிட்டுத்தான் சொல்றேன். எனக்குக் கல்யாணம் வேண்டாம். ஐ டோன்ட் வான்ட் டு லிவ் வித் எ கேர்ல்; பட், ஐ வான்ட் டு ஹேவ் அ சைல்ட் டு ப்ளே வித்... கொழு கொழு, மொழு மொழுன்னு, செக்கச் செவக்க, கண்ணை உருட்டிக்கிட்டு அழகான குழந்தையா பெத்துக் கொடுக்க எனக்கு ஒரு நல்ல பெண் தேவை. குழந்தையை எங்கிட்ட பெத்துக் கொடுத்திட்டு, அவ எங்கேயாவது ஓடிப் போயிடணும்.." சிரித்துக் கொண்டே, ஆனால் சீரியசாய்ச் சொன்னான். கேகேயின் பாணியே அதுதான். திடுக்கிடும் விஷயத்தைக்கூட சாதாரணமாகச் சொல்வான்.

அப்போதுதான், எனக்கு ஒரு வருடத்திற்கு முன்னால் மும்பையில் கிளையன்ட் கம்பெனி ஒன்றில் சந்தித்து, உடனடி நண்பியான ஐவியின் ஞாபகம் வந்தது. என்ன ஒற்றுமை? ஒரே மாதிரியான விபரீத எண்ணம் எங்கேயோ பிறந்து எங்கேயோ இருக்கும் மாறுபட்ட இருவருக்கு எப்படி ஏற்பட்டது?

ஐவி ஒரு பெங்காலி. தொலைக்காட்சியில் தினம் நூறுமுறை ஆடிப்பாடி விளம்பரப்படுத்தப்படும் மல்ட்டிநேஷனல் சோப்புக் கம்பெனி ஒன்றில் புராடக்ட் மேனேஜராக அப்போதுதான் சேர்ந்திருந்தாள். அந்த இளம் வயதிலேயே அசாத்தியதிறமை, புத்திகூர்மை, நாவன்மை, சுறுசுறுப்பு, மற்றவர்களை ஈர்க்கும் உடல்வாகு இவையெல்லாமுமாகச் சேர்ந்து அவளுக்குக் கைநிறைய சம்பளத்தையும், அதிகாரத்தையும் வாங்கிக் கொடுத்திருந்தன. ஆனால், இத்தனையும் இருந்தும் ஏதோ ஒரு வெறுமையில் தான் இருப்பதாக பேல்பூரியைக் கொரித்துக் கொண்டே சொன்னாள்.

"ஏதோ, என்னுடைய சுதந்தர வேட்கைக்கும், முன்னேற்றத் துடிப்புக்கும், இந்த வேலையும் பணமும் உபயோகமாய் இருக்கிறது. ஆனாலும், பல நேரங்களில் எல்லாமே ஒன்றும் இல்லாத சூன்யமாய் இருக்கிறது." என்று அலுத்துக் கொண்டாள்.

"உனக்கேற்ற ஆண் மகனை நீ இன்னும் சந்திக்கவில்லை போலிருக்கிறது. சந்தித்துக் கல்யாணம் செய்து கொண்டால், எல்லா மனநிறைவும் தானாக வந்துவிடும்."

"கல்யாணமா? கனவில் கூட கிடையாது. எனக்குக் கல்யாணத்தில் கொஞ்சம்கூட

"தினமும் வீட்டுக்கு லேட்டாவே வர்றீங்களே. உங்க மனசுல என்ன நினைச்சிக்கிட்டு இப்படிப் பண்றீங்க?"

"உன்னைத்தான்! இல்லேன்னா சீக்கிரம் வரமாட்டேனா?"

- ஸ்ரீ.வி.பிரியா





"ஏன் டியூப்லைட்டைப் பார்த்துச் சிரிக்கிறாய்?"

"அதில் 'சோக்' இருக்கே!"

- எஸ்.மோகன்



''ஏன் பாட்டி, தினமும் 'மெகா சீரியல' முடிஞ்சதும் டீ.வி.மீது தண்ணீர் தெளிச்சு, துணியால் துடைக்கிறே?''


''சீரியலில் தினம் யாராவது செத்துத் தொலைக்கிறாங்களேடா, சாவு தீட்டாச்சே!''

- *கோவா கோபாலன்*

''நம்ம அண்ணனுக்கு 'பைசா நகரின் சாய்ந்த கோபுரமே வருக! வருக!'னு நோட்டீஸ் அடிச்சு ஒட்டியிருக்காங்களே ஏன்?''

''அவரு தலைவர் காலில பொத்துன்னு விழவும் மாட்டார். நிமிர்ந்து நேரா நின்னு பேசவும் மாட்டார். அதான்!''

- *நெல்லையப்பபுரம் செல்வன்*



விருப்பமில்லை. நாட் தட் ஐ ஹேட் மென். பட், ஐ டோன்ட் வான்ட் டு லிவ் வித் எ மேன் ஃபார் தி ரெஸ்ட் ஆஃப் மை லைஃப். என்னுடைய சிறகுகள் வெட்டப்பட்டது போல் உணர்வேன்'' என்று படபட ஆங்கிலத்தில் பொழிந்தாள்.

''...பட் யூ நோ பாலு, ஐ பேட்லி வான்ட் டு ஹேவ் எ சைல்ட்! டஸின்ட் தட் சவுன்ட் ஸ்டிரேன்ஜ் டு யூ? பட் ஐ ரியல்லி வான்ட் எ மேன் ஹூ வில் கிவ் மீ எ சைல்ட் - எ சைல்ட் ஆஃப் மை ஓன். தென், ஹீ ஷுட் கெட் லாஸ்ட் ஃப்ரம் மை வோர்ல்ட் ஃபார் எவர்...''

நான், சிரித்து விட்டு, ''இதை வேறு எந்த ஆண்மகனிடமும் சொல்லி விடாதே. வம்பில் முடிந்துவிடும்'' என்று சொல்லி விட்டு, மீண்டும் அடுத்தமுறை மும்பை வரும்போது சந்திப்பதாக வாக்கு கொடுத்து விட்டு நகர்ந்தேன்.

பெங்களூர் திரும்பியதும், ஐவியை சந்தித்ததைப் பற்றியும், அவள் சொன்னதையும் கமலாவிடம் சொன்னபோது, அவள் என்னை முறைத்துப் பார்த்தாள்.

''இதுக்குத்தான் கண்டவங்களோட எல்லாம் பல்லைக் காட்டிக்கிட்டுப் பேசாதீங்கங்கறது. நீங்க டூர் போற போது இன்னும் என்னவெல்லாம் பண்றீங்களோ, யாரோட எல்லாம் சுத்தறீங்களோ!'' என்று புலம்பித் தள்ளிவிட்டாள்.

இப்போது கேகே சொன்னதைக் கேட்டதும் ஐவியை நினைத்துக் கொண்டேன். கேகேயிடம் ஐவியைப்பற்றி சொன்னபோது, ''ரொம்ப நல்லதாய்ப் போச்சு. நானே அவளுக்கு எழுதிக் கேட்டு விடுகிறேன். அவள் விலாசம் கொடு'' என்றான்.

நாட்கள் அசுர வேகத்தில் நகர்ந்து விட்டன. பெங்களூரிலிருந்து கான்பூருக்கு எனக்கு மாற்றலாகி விட்டது. இந்த இடைப்பட்ட நேரத்தில், ஈமெயில் போக்கு வரத்தில் தொடங்கி வெகு சீக்கிரமே ஐவிக்கும் கேகேவுக்கும் ஒரு தற்காலிகத் திருமணம் நடந்து விட்டிருந்தது. ஆனால் என்னால் அவர்களைச் சந்திக்க முடியவில்லை.

பெங்களூருக்கு அலுவலகப் பணி தொடர்பாக வரும் சந்தர்ப்பம் கிடைத்த போது, அவர்கள் இருவரும் திருமணமாகாமல் சேர்ந்து இருந்த வீட்டுக்குப் போனேன். இருவரும் என்னை நன்றிப் பெருக்குடன் விழுந்து, விழுந்து உபசரித்தார்கள். வாய் மூடாமல், இருவரும் என்னைச் சந்தித்தது பற்றியும், அது எப்படி வாழ்க்கையில் அவர்களுக்குத் திருப்பு முனையாய் அமைந்தது என்றும் வரிவரியாய்ச் சொன்னார்கள்.

என்னால் ஆவலை அடக்க முடியவில்லை.

''அதுசரி. நீங்கள் இருவரும் சேர்ந்து இருந்து இரண்டு வருடங்களுக்கு மேல் இருக்குமே. குழந்தை ஒன்றுக்கு ஏற்பாடு செய்யவில்லையா?'' என்றேன்.

அதற்கு, அவர்கள் சொன்ன பதில் : ''குழந்தையா, அதற்கென்ன அவசரம்? நாங்களே ஒருத்தருக்கு ஒருத்தர் குழந்தையா, இருக்கோம். அதெல்லாம், இன்னும் ஓரிரண்டு வருடங்கள் கழித்து மெதுவாகப் பார்த்துக் கொள்ளலாம்...''

கமலாவிடம் இதை நான் சொன்னபோது அவள் வெட்கப்பட்டுச் சிரித்தாள். ●

சிவகாமியின் சபதம்

முப்பத்தைந்தாம் அத்தியாயம்

இரண்டாவது அரங்கேற்றம்

திருநாவுக்கரசு அடிகளுக்கு அப்போது ஏறக்குறைய ஐம்பத்தைந்து பிராயமிருக்கலாம். அப்பெருமானுடைய பொன் வண்ணத் திருமேனி முழுவதும் தூய வெண்ணீறு பூசியிருந்தது. அவருடைய கழுத்தையும் மார்பையும் ருத்திராட்ச கண்டிகைகளும் தாழ்வடங்களும் அலங்கரித்தன. சிரசிலும் கரங்களிலும் அவ்வாறே ருத்திராட்சங்கள் பொலிந்தன. காதுகளிலும் ருத்திராட்ச குண்டலங்கள் இலங்கின. இடையில் தூய வெண்துகில் உடுத்தியிருந்தார். அவருடைய திருமுகத்தில் ஞானஒளி வீசிற்று. இறைவனை நினைந்து இடையறாது கண்ணீர் விட்ட அவருடைய கண்களில் கண்ணீர் பேரருள் ததும்பிற்று. கோயில் பிராகாரங்களில் புல் செதுக்குவதற்கான உழவாரப்படை அந்தத் தொண்டர் சிகாமணியின் திருத்தோளில் சாத்தப்பட்டிருந்தது.

திருநாவுக்கரசர் காஞ்சியில் அமைந்திருந்த சைவத் திருமடத்துக்கு அதிபராக விளங்கியபோதிலும், அவ்வப்போது ஸ்தல யாத்திரை சென்று திரும்புவது வழக்கம். தொண்டை நாட்டிலும் சோழ நாட்டிலும் உள்ள பல சிவ ஸ்தலங்களுக்கு அவர் சென்று சிவாநந்தமும் தமிழின்பமும் ததும்பும் தெய்வத் திருப்பதிகங்களைப் பாடினார். சென்ற இடங்களிலெல்லாம் ஜனங்கள் அவரைச் சிவிகையில் ஏற்றி ஊர்வலம் நடத்திச் சிறப்பாக வரவேற்றார்கள். அவர் சென்ற ஒவ்வொரு ஸ்தலத்திலும் கோயில் பிராகாரங்களில் முளைத்திருக்கும் புல்லை அவர் தம் கையில் பிடித்த உழவாரப் படையினால் செதுக்கிச் சுத்தம் செய்தார். இந்தச் சிவகைங்கரியத்தை ஆயிரக்கணக்கான மக்கள் அதிசயத்

அமரர் கல்கி

துடன் பார்த்தார்கள். அதுமுதல் தங்கள் ஊர்க் கோயில்களைப் புதுப்பித்துச் சுத்தமாக வைத்திருக்கத் தீர்மானித்தார்கள்.

வாகீசப் பெருமானுடைய திருவாக்கினால் தத்தம் ஊரிலுள்ள கோயிலுக்கு மகிமை உண்டாக வேண்டும் என்று ஜனங்கள் விரும்பினார்கள். "எங்கள் ஊருக்கும் விஜயம் செய்ய வேண்டும். எங்கள் ஊர்க் கோயிலைப் பற்றியும் பாடியருள வேண்டும்" என்று அவரிடம் வேண்டிக்கொண்டார்கள்.

அவ்விதம் அப்பெருமான் பாடிய பாடல்களை அந்தந்த ஊர்க்காரர்கள் ஓலைச்சுவடிகளில் எழுதிக்கொண்டு பெறுதற்கரிய பேறு அடைந்ததாக எண்ணி மகிழ்ந்தார்கள்.

இத்தகைய மகிமை வாய்ந்த நாவுக்கரசர் எழுந்தருளியிருக்கும் இடங்களில் ஜனங்கள் அருளொளி விளங்கிய அவருடைய திருமுகத்தைப் பார்த்துக் கொண்டும், அவருடைய திருவாக்கிலிருந்து எப்போது, என்ன அமுத வார்த்தை வருமோ என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டும் இருப்பார்கள்.

அங்ஙனமிருக்க, இன்று அவருடைய சொந்த மடாலயத்தில் அவரிடம் பக்தி பூண்டு தொண்டு செய்யும் சீடர்கள் கூட, "ஆயனர் வருகிறார்!" என்ற சொல்லைக் கேட்டதும் ஒருமுகமாக வாசற்பக்கம் திரும்பிப் பார்த்தார்கள் என்றால், அதிலிருந்து மக்களின் உள்ளத்தில் ஆயனச் சிற்பியார் எப்பேர்ப்பட்ட இடம் பெற்றிருந்தார் என்று ஊகித்து அறியலாம்.

அங்கிருந்தோர் எல்லாரையும்விட நாவுக்கரசரின் அருகில் வீற்றிருந்த குமார சக்கரவர்த்தியின் உள்ளத்திலேதான் அதிகப் பரபரப்பு உண்டாயிற்று: 'இதோ ஆயனர் வருகிறார்!' என்ற வார்த்தைகளைக் கேட்டதும், 'ஒரு வேளை அவருடன் சிவகாமியும் வருவாளோ!' என்ற எண்ணம் அவர் மனத்தில் தோன்றிக் கிளர்ச்சியை உண்டாக்கிற்று. அடுத்த கணத்தில், 'அவள் எதற்காக இங்கு வருகிறாள்?' என்ற எண்ணம் மனச்சோர்வை உண்டாக்கியது. இவ்விதம் அவர் மாறி மாறிக் கிளர்ச்சியும் சோர்வும் அடைவது அதிக நேரம் நீடித்திராதபடி இதோ ஆயனர் வாசற்படியண்டை வந்துவிட்டார்! – ஆகா! இது என்ன 'ஜல் ஜல்' சத்தம்; பாதசரத்தின் ஒலி போல் இருக்கிறதே! அதோ, ஆயனருக்குப் பின்னால் வரும் பெண்? சந்தேகமென்ன? சிவகாமியேதான்!

குமார சக்கரவர்த்தியின் கண்கள் சிவகாமியின் முகத்தை நோக்கின. சிவகாமியின் கண்களும் முதன் முதலில் மாமல்லரின் ஆவல் ததும்பிய கண்களைத்தான் சந்தித்தன. வாடியிருந்த சிவகாமியின் முகத்தில் ஒருகணம் புது மலர்ச்சி காணப்பட்டது. ஆனால், ஒரு கண நேரந்தான்! அடுத்த கணத்தில் அந்தச் செந்தாமரை முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. தலைகுனிந்து பூமியை நோக்கிய வண்ணம் சிவகாமி தன் தந்தையைப் பின் தொடர்ந்து அந்த மண்டபத்திற்குள்ளே நுழைந்தாள்.

நயன பாஷையில் நடைபெற்ற மேற்படி நாடகத்தை வேறு யாரும் கவனியாத வண்ணம் மண்டபத்துக்குள் அப்போது பெருங் கலகலப்பு ஏற்பட்டிருந்தது.

பணிவுக்குப் பெயர் போன நாவுக்கரசர் பெருமான், ஆயனர் மண்டபத்துக்குள்ளே நுழைந்ததும் தாமும், ஆசனத்தை விட்டு எழுந்து நாலு அடி நடந்து எதிர் கொண்டு, "வரவேணும்! சிற்ப சக்கரவர்த்தியே! வரவேணும்!" என்று உபசரித்து அழைத்தார். ஆயனர் இதைக் கண்டதும் விரைந்து முன்னால் வந்து, "அபசாரம்! அபசாரம்!" என்று கூறிக் கொண்டே திருநாவுக்கரசரின் திருப்பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்.

நாவுக்கரசர் ஆசனத்தைவிட்டு எழுந்தபோது, அவருடன் எழுந்த சீடர்கள், நாவுக்கரசரும் ஆயனரும் அமர்ந்த பிறகு, தாங்களும் தத்தம் இடத்தில்

உட்கார்ந்தார்கள்.

எல்லாரும் உட்கார்ந்த பிறகும் சிவகாமி மட்டும் ஆயனருக்குப் பின்னால் தலை குனிந்தவண்ணம் நின்று கொண்டிருந்தாள். அப்போது தான் அவளைப் பார்த்த நாவுக்கரசர், "ஆகா! இந்தப் பெண் யார், ஆயனரே? தங்கள் குமாரி சிவகாமியா?" என்று கேட்க, ஆயனர், "ஆம், அடிகளே! தங்களைத் தரிசிக்கப் போகிறேன் என்று சொன்னபோது சிவகாமி 'நானும் வருகிறேன்' என்றாள்! அழைத்துக் கொண்டு வந்தேன்" என்றார்.

"மிக்க சந்தோஷம். உங்கள் குமாரியைப் பார்க்க வேண்டுமென்று நானும் மிக்க ஆவலாயிருந்தேன். நடனக் கலையில் அவள் அடைந்திருக்கும் அபூர்வத் தேர்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டேன். சமீபத்தில் அரங்கேற்றம் நடந்ததாமே? நான்தான் அச்சமயம் இல்லாமற் போய்விட்டேன்" என்று நாவுக்கரசர் கூறினார்.

"எனக்கும் அது மிக வருத்தமாயிருந்தது. சுவாமி! அன்று சிவகாமியின் நடனத்தைப் பார்த்துவிட்டு ருத்ராச்சாரியார் பிரமித்துப் போய்விட்டார். சிற்பம், சித்திரம், சங்கீதம் ஆகிய கலைகளுக்கெல்லாம் நடனக்கலைதான் ஆதாரம் என்பதை அன்றைக்குத்தான் அவர் ஒத்துக்கொண்டார். 'சிவகாமியின் நடனத்தைப் பார்த்த பிறகு, சங்கீதக் கலையில் நான் கற்க வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறதென்பதை அறிந்தேன்' என்று சபை நடுவில் வாய்விட்டுச் சொன்னார்."

இவ்விதம் ஆயனர் கூறியபோது அவருடைய குரலிலும் முகத்திலும் பெருமிதம் கொந்தளித்தது.

அப்போது வாகீசர், "ஆயனரே! சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் ஆகிய தெய்வக் கலைகளுக்கு ஆதாரமும் நடனந்தான்! அண்ட பகிரண்டங்களையெல்லாம் படைத்துக் காத்து அழிக்கும் பெருமான் தில்லைச் சிற்றம்பலத்தில் ஆனந்த நடனம் பயில்கிறார் அல்லவா?" என்று திருவாய் மலர்ந்தார்.

இதுவரை மௌனமாக இருந்த குமார சக்கரவர்த்தி "சுவாமி! நடராஜப் பெருமானின் ஆனந்த நடனத்தைப் பற்றிய தங்களுடைய பாடல் ஒன்றுக்கு, அன்று ஆயனர் மகள் அபிநயம் பிடித்தாள்; தாங்கள் அதை அவசியம் பார்க்க வேண்டும்!" என்றார்.


"ஆம், சுவாமி! தங்களுடைய மூன்று திருப்பாடல்களுக்குச் சிவகாமி அபிநயம் பிடிப்பதாயிருந்தாள். ஆனால், ஒரு பாடலுக்குத்தான் அபிநயம் பிடிக்க முடிந்தது. அரங்கேற்றம் நடுவில் நின்ற செய்தி கேட்டிருப்பீர்களே!" என்று ஆயனர் கூறியபோது, அதனால் ஏற்பட்ட வருத்தம் இன்னும் அவருக்குத் தீரவில்லையென்று தோன்றியது.

"கேள்விப்பட்டேன், ஆயனரே! யுத்தத்தினால் சிவகாமியின் அரங்கேற்றம் மட்டுந்தானா தடைபட்டது? இன்னும் எத்தனையோ காரியங்கள் தடைபடும் போலிருக்கின்றன. உம்மை நான் அழைத்த காரியங்கூட அப்படித்தான்!" என்று வாகீசப் பெருமான் கூறினார்.

"சுவாமி! என்ன காரியமாக என்னை வரச் சொல்லிப் பணித்தீர்கள்?" என்று ஆயனர் கேட்டார்.

"நமது திருமடத்தை இந்த ஏகாம்பரர் சந்நிதியிலிருந்து திருமேற்றளிக்குக் கொண்டு போக வேண்டுமென்று விரும்பினேன். இந்த இடம் நகரின் மத்தியில் இருப்பதால் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கு உகந்ததாயில்லை. ஆனால் திருமேற்றளியில் அமைதி குடி கொண்டிருக்கிறது. கோயிலைச் சுற்றியுள்ள நந்தவனத்தில் மல்லிகை மலர்களும் கொன்றை மலர்களும் பூத்துக் குலுங்குகின்றன. சந்தடி கூச்சல் ஒன்றும் கிடையாது. இறைவனைத் துதிப்பதற்கும் தமிழ் பயில்வதற்கும் திருமேற்றளி தக்க இடம்."

"பெருமானே! திருமேற்றளி இறைவன் மீது பாடல் ஏதாவது பாடப் பெற்றதோ?" என்று ஆயனர் கேட்க, நாவுக்கரசர் தமது சீடர்களைப் பார்த்தார். உடனே ஒரு சீடர் திருமேற்றளிப் பதிகத்திலிருந்து பின் வரும் பாடலைப் பாடினார்:-



"செல்வியைப் பாகங்கொண்டார்
சேந்தனை மகனாக் கொண்டார்
மல்லிகைக் கண்ணியோடு
மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியிற் கரை யிலாத
காஞ்சிமா நகர்தன் னுள்ளார்
எல்லியல் விளங்க நின்றார்
இலங்குமேற் றளிய னாரே!"

மேற்கண்ட பாடலைச் சீடர் இனிய குரலில் உருக்கமாய்ப் பாடி வந்தபோது, நாவுக்கரசர் பெருமானின் கண்களில் நீர் ததும்பி நின்றது. திருமேற்றளிக் கோயிலில் மல்லிகையும் கொன்றை மலரும் சூடிச் சூரியனைப் போல் ஜோதி மயமாக விளங் கிய சிவ பெருமானை, மீண்டும் அகக் கண்ணால் அவர் நேருக்கு நேரே தரிசித் துப் பரவசமடைந்தவராகத் தோன்றினார். அந்தக் காட்சியை அங்கிருந்த மற்றவர்கள் பார்த்துப் பரவச மடைந்திருந்தார்கள்.

பாடல் முடிந்து சிறிது நேரம் வரையில் மௌனம் குடி கொண் டிருந்தது. பின்னர் நாவுக்கரசர் பரவச நிலை நீங்கித் தம்மைச் சுற்றியிருந்



தவர்களைப் பார்த்தார். உடனே ஆயனர், "அடிகளே! தாங்கள் உண்மையிலேயே நாவுக்கரசர்தான். தங்களுடைய திருவாக்கு அப்படி மகிமை வாய்ந்திருக்கிறது. தங்களுடைய பாடலில் இடம் பெற்று விட்டபடியால் இந்தக் காஞ்சி நகருக்கும் இதிலுள்ள திருமேற்றளிக்கும் இனி அழிவென்பதே இல்லை. தங்கள் விருப்பத்தின்படி திருமேற்றளியில் மடாலயத் திருப்பணியை மேற் கொள்ளச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் துறைமுகப் பட்டினத்தில் ஒரு முக்கியமான திருப்பணியைத் துரிதமாகச் செய்து முடிக்கும்படி சக்கரவர்த்தி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். எதை முதலில் செய்வது என்று குமார சக்கரவர்த்தி ஆக்ஞை இட வேண்டும்" என்று கூறி மாமல்லரை நோக்கினார்.

ஆயனருடைய கேள்விக்கு மாமல்லர் மறுமொழி கூறுவதற்குள், நாவுக்கரசர் சொல்லுவார்: "அதற்கு இப்போது அவசியமேயில்லை. சிற்பியாரே! தாங்கள் வரும்போதுதான் சக்கரவர்த்தியின் அபிப்பிராயத்தை மாமல்லர் எனக்குத் தெரிவித்துக்கொண்டிருந்தார். யுத்தம் முடியும் வரையில் என்னைச் சிஷ்யர்களுடன் சோழ நாட்டிலும் பாண்டிய நாட்டிலும் உள்ள ஸ்தலங்களைத் தரிசித்து வரும்படி சக்கரவர்த்தி யோசனை கூறியிருக்கிறார். எனக்கும் வெகு காலமாக அந்த ஆசை உண்டு. காஞ்சிக்கோட்டை ஒருவேளை பகைவர் முற்றுகைக்கு இலக்கானாலும் ஆகலாம். அம்மாதிரி சமயங்களில் என் போன்ற துறவிகள் விலகியிருப்பதே நல்லது."

இவ்விதம் நாவுக்கரசர் கூறியதைக் கேட்ட நரசிம்மவர்மர் "அடிகளே! தாங்கள் இப்போது கூறிய அபிப்பிராயம் போற்றத்தக்கது. அதைச் சமண முனிவர்களும் புத்த பிக்ஷுக்களும் ஒப்புக்கொண்டு அரசியல் விஷயங்களில் தலையிடாமல் நடந்து கொண்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்?" என்றார்.

புத்த பிக்ஷு என்ற வார்த்தையைக் கேட்டதும் ஆயனருக்குச் சுருக்கென்றது. அதோடு பரஞ்சோதியைப் பற்றிய நினைவும் வந்தது. "அடிகளே! ஒரு விஷயம் தெரிவிக்க மறந்துவிட்டேன். தங்களுடைய மடாலயத்தில் சேர்ந்து தமிழ் கற்பதற்காக ஒரு பிள்ளை சோழ நாட்டில் திருச்செங்காட்டாங்குடியிலிருந்து வந்தான். திருவெண்காட்டு நமசிவாய வைத்தியரிடமிருந்து தங்களுக்கும் எனக்கும் அவன் ஓலை கொண்டு வந்திருந்தான். சித்திரக் கலை சம்பந்தமான ஒரு மகா இரகசியத்தை அறிந்து வருவதற்காக அவனை வடக்கே ஸ்ரீபர்வதத்துக்கு அனுப்பியிருக்கிறேன்."

"அவ்வளவு தூரமா அனுப்பியிருக்கிறீர்கள்? அங்கேயெல்லாம் யுத்தம் நடக்கும் இடமாயிற்றே? சிறுபிள்ளை என்று சொன்னீர்கள்?" என்று நாவுக்கரசர் சிறிது கவலையுடன் கேட்டார்.

"சிறு பிள்ளையாயிருந்தாலும் மகா வீரன் சுவாமி!" என்று ஆயனர் கூறி, அரங்கேற்றத்தன்று மதயானை மீது அவன் வேல் எறிந்ததைக் கூறி விவரித்தார்.


கடைசியாக, "பரஞ்சோதி திரும்பி வந்ததும் உடனே தங்களிடம் அனுப்பி விடுகிறேன் சுவாமி!" என்றார் ஆயனர்.

"வேண்டாம் ஆயனரே! அவன் திரும்பி வரும்போது நான் எங்கே இருப்பேனோ, தெரியாது. எப்போது அவன் உங்கள் தொண்டில் ஈடுபட்டானோ, உங்களுடைய சீடனாகவே இருக்கட்டும். சிற்பக் கலை பயிலும் பேறு இலேசில் கிடைக்கக் கூடியதா? என்றும் அழிவில்லாத ஈசனுக்கு என்றும் அழியாத கற்கோயில்களை அமைக்கும் கலையைக் காட்டிலும் சிறந்த கலை உலகில் வேறென்ன உண்டு...?"

ஆயனர் அப்போது குறுக்கிட்டு, "அடிகளே! சிற்பக்கலையைக் காட்டிலும் சிறந்த கலை வேறொன்று இருக்கிறது. எங்களுடைய கற்கோயில்கள் சிதைந்து உருத்தெரியாமல் அழிந்து போகலாம். ஆனால் தங்களுடைய கவிதைக் கோயில்களுக்கு ஒரு நாளும் அழிவில்லை; கற்பகோடி காலம் அவை நிலை பெற்றிருக்கும்" என்றார்.

அப்போது குமார சக்கரவர்த்தி "சற்று முன்னால் பேசி முடிவு செய்ததை இரண்டு பேரும் மறந்துவிட்டீர்களே? எல்லாக் கலைகளுக்கும் ஆதாரம் நடனக் கலையல்லவா?" என்று சொல்லவே அங்கிருந்த எல்லாருடைய முகத்திலும் புன்னகை பூத்தது. ஆனால், சிவகாமி மட்டும் குனிந்த தலை நிமிராமலிருந்தாள்.

நாவுக்கரசர், "நல்லது, குமார சக்கரவர்த்தி! நாங்கள் மறந்துதான் போய் விட்டோம்! எல்லாக் கலைகளுக்கும் ஆதாரம் நடனக் கலைதான். தில்லையம்பலத்தில்



ஆடும் பெருமான் முன்னால் நிற்கும் போது உள்ளமானது பொங்கிக் கவிதை வெள்ள மாய் வருவது போல் மற்ற மூர்த்தங்களுக்கு முன்னால் நிற்கும்போது வருவதில்லை!" என்று கூறிவிட்டு, ஆயனரைப் பார்த்து, "சிற்பியாரே! தங்கள் புதல்வியின் நட னத்தை நான் பார்க்க வேண்டாமா? தென் னாட்டுக்கு யாத்திரை சென்றால் திரும்பி எப்போது வருவேனோ தெரியாது. நாடெல் லாம் புகழும் சிவகாமியின் நடனக் கலை யைப் பார்க்காமல் போக எனக்கு மன மில்லை. ஒரே ஒரு பாடலுக்கு அபிநயம் பிடித்துக் காட்டினாலும் போதும்!" என் றார்.

ஆயனர், "சுவாமி! சிவகாமிக்கு அத் தகைய பாக்கியம் கொடுத்து வைக்க வேண் டுமே?" என்று கூறி, தமக்குப் பின்னா லிருந்த சிவகாமியைத் திரும்பிப் பார்த்தார். அவள் முகமலர்ச்சியின்றித் தலை குனிந்த வண்ணம் இருப்பதைக் கண்டதும் ஆய னருக்குச் சிறிது வியப்பு உண்டாயிற்று.

இதையெல்லாம் கவனித்த மாமல்லர், "ஒருவேளை நான் இங்கு இருப்பதால் சிவ காமி ஆட விரும்பாமலிருக்கலாம். சுவாமி விடை கொடுங்கள்! போய் வருகிறேன்!" என்று நாவுக்கரசரைப் பார்த்துக் கூறினார்.

இந்த வார்த்தை காதில் விழுந்ததும் சிவ காமி பளிச்சென்று துள்ளி எழுந்து, நடனத் துக்கு ஆயத்தமாக நின்று, "அப்பா! எந்தப் பாடலுக்கு அபிநயம் பிடிக்க வேண்டும்?" என்று கேட்டது, அழகிய மான்குட்டி ஒன்று குயிலின் குரல் பெற்று, அமுதத் தமிழ் மொழி யில் மழலை பேசுவது போல் தொனித்தது.

"பூவணத்துப் புனிதனார்' முதலில் தோன்றட்டுமே!" என்று ஆயனர் பெரு மிதம் தோன்றக் கூறினார்.

நாவுக்கரசர், கலை அரசர், இள வரசர் ஆகிய மூன்று மன்னர்களின் முன்னிலையில் சிவகாமியின் நட னக் கலை அரங்கேற்றம் இரண் டாவது முறை ஆரம்பமாயிற்று.





மந்த மாருதத்தில் மிதந்து வரும் தேன் வண்டின் ரீங்காரம் போன்ற குரலில் சிவகாமி பின்வரும் திருத்தாண்டகத்தைப் பாடிக்கொண்டு, அதன் பொருளுக்கேற்ப அங்கங்களின் சைகைகளினாலும் முகபாவத்தினாலும் அபிநயம் பிடித்தாள். பாடலில் ஒவ்வொரு வரியிலும், 'தோன்றும்' 'தோன்றும்' என்று வந்தபோது, சிவகாமியின் பாதசரங்கள் 'ஜல், ஜல்' என்று தாளத்துக்கிசைய ஒலித்தன.

"வடிவேறு திரிசூலம்
தோன்றும் தோன்றும்
வளர்சடைமேல் இளமதியம்
தோன்றும் தோன்றும்
கடியேறு கமழ்கொன்றைக்
கண்ணி தோன்றும்
காதில்வெண் குழைதோடு
கலந்து தோன்றும்
இடியேறு களிற்றுரிவைப்
போர்வை தோன்றும்
எழில்திகழும் திருமுடியும்
இலங்கித் தோன்றும்
பொடியேறு திருமேனி
பொலிந்து தோன்றும்
பொழில்திகழும் பூவணத்தெம்
புனிதனார்க் கே."

இந்தத் தெய்வீகமான பாடலைப் பாடிக்கொண்டு சிவகாமி அதன் பொருளுக்கேற்ப அபிநயம் பிடித்த போது, அங்கிருந்தவர்கள் எல்லாரும் தங்களை மறந்தார்கள். தாங்கள் இருக்குமிடத்தை மறந்தார்கள். அங்கு நடப்பது என்ன என்பதையும் மறந்தார்கள்.

சற்று முன்னால் நாவுக்கரசரின் சீடர் பாடியபோது அவர்களுடைய செவிகளில் இனிய தமிழ்ச் சொற்கள் நின்றன. அவர்களுடைய கண்கள் நாவுக்கரசரை நோக்கின. அப்பாடலை அவர் அநுபவித்து உருகுவதைப் பார்த்து அவர்கள் மனமும் கசிந்தன.

சிவகாமி அபிநயம் பிடித்தபோதோ அவர்களுடைய கண்கள் நாவுக்கரசரை நோக்கவில்லை. குமார சக்கரவர்த்தியையோ, ஆயனச் சிற்பியாரையோ அவர்கள் காணவில்லை. அந்த மடாலயத்தின் சுவர்களோ, தூண்களோ, அவற்றில் அமைந்திருந்த சிற்பங்களோ, சித்திரங்களோ அவர்கள் கண்ணில் படவேயில்லை.

அவர்கள் கண் முன்னால் பாடி ஆடி அபிநயம் பிடித்துக்கொண்டிருந்த சிவகாமியைக்கூட அவர்கள் பார்க்கவில்லை!

பின் அவர்கள் யாரை அல்லது எதனைப் பார்த்தார்கள்?

சாக்ஷாத் சிவபெருமானையே தங்கள் கண் முன்னால் தத்ரூபமாக நேருக்குநேரே பார்த்தார்கள்.

அவருடைய கரத்தில் தோன்றிய திரிசூலத்தையும், அவருடைய சடைமேல் இயங்கும் இளமதியையும் பார்த்தார்கள்.

அவருடைய திருமிடற்றில் கொன்றை மாலையைப் பார்த்தார்கள். காதிலே குழையைப் பார்த்தார்கள்.

திருநீறு பொழியும் திருமேனி முழுவதையும் பார்த்தார்கள்.

அந்தத் தெய்வீகக் காட்சியில் தங்களை மறந்தார்கள். இந்தப் பூவுலகையே மறந்தார்கள். பூவுலகிலிருந்து கைலாசத்துக்கு அவர்கள் போய்விட்டார்கள்.

பாட்டும் அபிநயமும் நின்ற சிறிது நேரத்துக்குப் பிறகுதான் எல்லாரும் சுய உணர்வு பெற்றுப் பூவுலகிற்கு வந்து சேர்ந்தார்கள்.

சுய உணர்ச்சி தோன்றியதும், அனைவருடைய கவனமும் இயல்பாக நாவுக்கரசர்பால் சென்றது. அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் ஆறாய்ப் பெருகி, வெண்ணீறு அணிந்த திருமேனியை நனைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

இத்தனை நேரமும் பாவனைக் கண்ணால் தாங்கள் தரிசித்துக் கொண்டிருந்த சிவபெருமான் இந்த மகான் தானோ என்று அவர்களில் பலர் எண்ணினார்கள்.

சற்று நேரத்துக்கெல்லாம் நாவுக்கரசர் தழுதழுத்த குரலில், "ஆயனரே! திருக்கயிலையில் வீற்றிருக்கும் எம் பெருமானைத் தங்கள் குமாரி எங்கள் முன்னால் பிரத்தியட்சமாகத் தோன்றச் செய்துவிட்டாள்!" என்றார்.

ஆயனரும் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ததும்ப, "எல்லாம் தங்கள் ஆசிர்வாதந்தான், சுவாமி!" என்று கூறி, சிவகாமியைப் பார்த்து, "இன்னும் ஒரு பாட்டுக்கு அபிநயம் பிடிக்கிறாயா, அம்மா! இது அகத்துறைப் பாடலாக இருக்கட்டுமே!" என்றார்.

(தொடரும்)



சென்னையில்
டீலக்ஸ் அபார்ட்மெண்டுகள்
ரூ.3.45 லட்சம் முதல்

HANSA GARDEN

ராஜகீழ்ப்பாக்கம்

ஹன்ஸா கார்டன்

தாம்பரத்திற்கு 5 கி.மீட்டருக்கு முன்னால் அமைந்துள்ள ஹன்ஸா கார்டன், நேர்த்தியான வடிவமைப்பு, மற்றும் தரமிக்க கட்டுமானத்துடன் 1-2 படுக்கையறை கொண்ட அபார்ட்மெண்டுகளை வழங்குகிறது.

- விலை ரூ.3.45 – 6.10 லட்சம்*
- செராமிக் டைல் ஃப்ளோரிங்
- டெலிபோன் மற்றும் டிஷ் ஆண்டெனா
- விளையாட போதுமான இடவசதி மற்றும் புல்வெளியமைந்த சுற்றுச்சூழல்
- காம்ப்ளக்ஸிற்கே சொந்தமான போக்குவரத்து வசதி
- பாரிமுனை, அண்ணாசாலை, வேளச்சேரி, தி.நகருக்கு நேரடி அரசு பேருந்து

இடம் : மாடம்பாக்கம் பிரதான சாலை, ராஜகீழ்ப்பாக்கம், வேளச்சேரி - தாம்பரம் சாலை பிரிவில்.

- வரிகள் மற்றும் கட்டணங்கள் நீங்கலாக

HANSA VANDANA

குரோம்பேட்டை

ஹன்ஸா வந்தனா

குரோம்பேட்டை ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள ஹன்ஸா வந்தனா, 1, 2 மற்றும் 3 படுக்கையறை கொண்ட அபார்ட்மெண்டுகளை வழங்குகிறது.

- விலை ரூ.6.68 லட்சம்* முதல்
- செராமிக் டைல் ஃப்ளோரிங்
- தண்ணீர் சுத்திகரிப்பு வசதி

இடம் : நாயுடு ஷாப் ரோடு, ராதா நகர், குரோம்பேட்டை

புக்கிங்கிற்கு அணுகவும்:


ஹன்ஸா எஸ்டேட்ஸ் பிரைவேட் லிமிடெட்

சிவ்ராஜ் எஸ்டேட்ஸ், நான்காம் தளம்,
624, அண்ணா சாலை, சென்னை - 600 006.
போன் : 8293135 / 2315 / 2323
ஃபேக்ஸ் : 8293135.
email : hansaest@md4.vsnl.net.in
visit us at : www.hansaestates.net

சிக்கனமான விலையில் வசதியான வாழ்க்கை

'சித்தி', 'வாழ்க்கை' போன்ற பெயர்களைக் கேட்டாலே நிறைய ஆண்களுக்கு அலர்ஜி. குறிப்பாக பல கணவன்மார்கள் இடியோசைக் கேட்ட நாகம் மாதிரி நடுங்குகிறார்கள். பின்னே! இதுபோன்ற மெகா தொடர்களைக் கிட்டத்தட்ட ஒரு வாழ்க்கைத் துணையாகவே வரித்துக் கொண்டு விட்டனர் பெண்கள்.

"எப்போது வீடு திரும்ப வேண்டும், எப்போது வேலை பார்க்க வேண்டும், எப்போது ஓய்வெடுக்க வேண்டும் என்பதையெல்லாம் கூட இந்தத் தொடர்கள் சொல்லிக் கொடுக்கின்றன. இதோடு முடிந்ததா இந்த மெகா பாதிப்பு என்றால் இல்லை. இன்னும் மனரீதியாக பல பாதிப்புகளுக்குப் பெண்கள் ஆளாகியிருக்கிறார்கள். அந்தப் பாதிப்புகளை அறிய சென்னை, கோவை, மதுரை, சேலம் உள்ளிட்ட ஆறு மாவட்டங்களில் படித்தவர், படிக்காதவர், வேலைக்குச் செல்பவர் என இருநூற்றைம்பது பெண்களிடம் இந்தத் தொடர்களைக் குறித்து கேள்விகேட்டு ஆய்வு நடத்தினோம். ஆய்வின் முடிவில் எங்களுக்கு அதிர்ச்சியூட்டும் உண்மைகள் வெளிப்பட்டன" என்கிறார் ஜனநாயக மாதர் சங்கத் தலைவி உ. வாசுகி.



மெகா சீரியல்கள்!

"வீட்டில் அதிகமிருப்பது பெண்கள் என்பதாலும் பெரும்பாலான பெண்கள் சுயத்தை இழந்தவர்களாக இருப்பதாலும், குடும்பம் குறித்து அதிகம் சிந்திப்பதாலும், தொடர்களில் வரும் பெண் கதாபாத்திரத்தோடு தம்மைச் சுலபமாக அடையாளப் படுத்திக் கொண்டு விடுகிறார்கள். இதனால் தொடர்களின் நேரடி பாதிப்புக்கு ஆளாவது பெண்கள்தான்.

'இந்தத் தொடர்கள் என்னை என்ன செய்துவிடும். நான் இதை பொழுது போக்குக்காகத்தான் பார்க்கிறேன்' என்று பலரும் சொல்கின்றனர். இது உண்மையாக இருந்தால், விளம்பரதாரர்கள் கோடிக் கணக்கில் விளம்பரத்துக்காகவும், ஸ்பான்சர்ஷிப்புக்காகவும் செலவழிக்க வேண்டிய அவசியம் என்ன என்பதுதான் எங்கள் கேள்வி.

"மீடியா சித்திரிப்பு, நாம் உலகைப் பார்க்கும் விதத்தை, மனித உறவுகள் எடை போடுவதை, நமது கருத்துருவாக்கத்தைப் பாதிக்கிறது என்பதே உண்மை" என்கிறார் வாசுகி.

அந்த வகையில் 'சித்தி' மற்றும் 'வாழ்க்கை' தொடர்களை மட்டும்

மாதிரியாக எடுத்துக் கொண்டு, ஆய்வு செய்திருக்கும் இவர்கள், பத்திரிகையாளர் ஞாநி உதவியுடன் கேள்வித்தாள் தயாரித்திருக்கிறார்கள். ஆய்வு செய்யப்பட்ட 250 பெண்களும் இருபது முதல் 40 வயதுக்குட்பட்டவர்கள்.





இவர்களில் தினசரி 5 முதல் 9 தொடர்களைத் தொடர்ந்து பார்ப்பவர்களின் எண்ணிக்கை 56 விழுக்காடு என்ற அதிர்ச்சி தரும் உண்மை வெளிப்பட்டிருக்கிறது.

காலை முதல் பார்த்தால்தான் இந்த எண்ணிக்கை சாத்தியம். அப்படியானால், வீட்டு வேலை போக மீதி நேரம் அநேகமாக இதில் செலவழிகிறது என்று எடுத்துக் கொள்ளலாம். ஓய்வு, வாசிப்பு, குடும்ப உறுப்பினர்களுடன் அளவளாவுதல், அக்கம் பக்கத்தாருடன் நட்பு போன்ற பல விஷயங்கள் இந்தப் போக்கினால் அடிபட்டுப் போகும் அபாயம் அதிகரித்து விட்டது.

'சித்தி' தொடரைப் பற்றி கேள்வி எழுப்பியதில், நடிப்புக்காக அந்தத் தொடரை அதிகம் பார்க்கிறோம் என்று பதில் சொன்னாலும், எல்லா பாத்திரங்களும் சதா அழுது கொண்டிருப்பது, பழி வாங்கும் உணர்வை அதிகமாக முன்னிறுத்துவது போன்றவற்றை சகித்துக் கொள்ள முடியவில்லை என்று பதில் தந்திருக்கிறார்கள். தவிர கணவன் செய்யும் எல்லாக் கொடுமைகளையும் அடி பணிந்து தாங்கிக் கொள்வதாகக் காட்டுவது (விஜி/ஸ்வேதா) சரியில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். கதையில் வரும் மூன்று பிரதான பெண்களில் சாரதா பாத்திரமே பின்பற்றத்தக்கது என்று எண்பத்தொரு சதவிகிதம் பேர் சொல்லியிருக்கிறார்கள். ஆனாலும் சிறந்த தாய், மனைவி, முதலாளி என்று த்ரீ இன் ஒன் சூப்பர் உமனாக ஒரு பெண்ணால் சோபிக்க முடியுமா? என்ற கேள்வியையும் ஏழு சதவிகிதம் பெண்கள் கேட்டிருக்கிறார்





கள். இவ்வளவு தைரியம், நிதானம் இருக்கும் சாரதா, தன் மகள் ஸ்வேதாவை, அவளது கொடுமைக்காரக் கணவனுடன் வாழ நிர்பந்திக்கிறார் என்பதையும் பல பெண்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

ராமு பாத்திரத்துக்கோ யூஸ்லெஸ், நம்பிக்கை துரோகி, கோழை என்று எழுபத்து ஏழு சதவிகிதம் பேர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். கணவனின் முதல் மனைவி திரும்பி வந்தால் ஏற்றுக் கொள்ளலாமா? என்ற கேள்விக்கு ஏற்றுக் கொள்ளலாம் என்று எண்பத்தொரு சதவிகிதம் பேர் பதில் தந்தாலும், இதே கேள்வியை ஒரு பெண்ணின் முதல் கணவன் இறந்து விட்டதாக நினைத்து, இரண்டாவது திருமணம் செய்து கொண்டபின் முதல் கணவர் உயிரோடு வந்தால் அந்தப் பெண் என்ன செய்வாள் என்று கேட்கப்பட்டிருப்பது மிகவும் தர்மசங்கடமான கேள்வி. இந்திய மரபுக்கு எதிரானது. எங்களால் பதில் தர முடியாது என்பது போன்ற பதிலை பல பெண்கள் தந்திருக்கிறார்கள். இருவரையும் விட்டுவிட்டுத் தனியாக வாழ வேண்டும் என்று இருபத்தோரு சதவிகிதம் பேரும், இரண்டாவது கணவனுடன்தான் வாழ வேண்டும் என்று அறுபத்தெட்டு சதவிகிதம் பேரும் சொல்லியிருக்கிறார்கள். நல்ல வேளையாக இதைக் கேட்கத் தகாத கேள்வியாக நினைக்கவில்லை என்று தொண்ணூறு சதவிகிதம் பெண்கள் கூறியிருக்கிறார்களாம்.

இந்த ஆய்விலிருந்து பெரிதும் கவலைப் படத் தூண்டிய விஷயங்கள் பலவுண்டு என்றாலும் ஒரு சிலவற்றை அழுத்தமாகச் சுட்டிக் காட்டுகிறார் வாசுகி.

மெகா தொடர்கள் பெண்ணுக்குக் குடும்பத்தில் உள்ள பொறுப்புகள், கடமைகள் இவற்றையே முன் வைக்கின்றன. அரசியலில், பொருளாதாரத்தில், இயக்கங்களில் திறமை காட்டும் பெண் படைப்புகள் மிக அரிது. குறிப்பாக நகர்புற மத்தியதர பெண்களைச் சுற்றியே கதை நகர்கிறது. குடிசைப் பகுதி பெண் அவர்களின் கண்களுக்குத் தெரிவதில்லை. மொத்தத்தில் பெண்ணைப் பிரதானப் பாத்திரமாக காட்டினாலும், ஏற்கெனவே நிலவி வரும் பழைமைச் சிந்தனைகளை உரமிட்டு வளர்ப்பதாகவே பின்புலப் பிரச்னைகள் இருக்கின்றன. இதனால் பெண் பலவீனப்பட்டுத்தான் போவாள். எனவேதான் தனியார் தொலைக் காட்சிகளுக்கும் தொடர்களுக்கு முன் தணிக்கை தேவை என்கிறோம்'' என்று ஜனநாயக மாதர் சங்க மீடியா குழு சார்பில் கோரிக்கையை முன் வைக்கிறார்கள்.

- ஸ்ரீசக்கரம்



அ.தி.மு.க. அன்பர் தயாரித்த நோட்டு?

சமீபத்தில் எங்கள் கல்லூரி கேன்டீனில் தேநீர் குடித்துவிட்டு, பத்து ரூபாய் நோட்டை நீட்டியபோது கிடைத்த ஐந்து ரூபாய் சில்லறை இது. இதில் வலது பக்க மூலையில் அம்மா படம் ஒட்டப்பட்டுள்ளது. ரூபாய் நோட்டில் எழுதுவதே சட்டப்படி குற்றம். அம்மா படத்தை ஒட்டுவது குற்றம் என்று அ.தி.மு.க. தொண்டர்களுக்குத் தெரியாதா? அல்லது, அ.தி.மு.க. ஆட்சியில் பணப்புழக்கம் அதிகமாகிவிட்டது என சொல்லாமல் சொல்கிறார்களா?

- எம். வினோத், கிருஷ்ணன்கோயில்

Weddings Betrothel Seemantham

Parties

FREEDOM HALL

A Hall for all Occasions...




Lavishly Built 6000sq ft A/C hall

Separate A/C Dining hall

Rooms for Guests

Excellent Ambience

Centrally located



SAA-25

'JPRI Towers', 125, Valluvar Kottam High Road, Nungambakkam, Chennai - 600 034.
Phone : 8223306, 8234746 email : jprij@md2.vsnl.net.in

A JPRI venture

INDIAN INSTITUTE OF MANAGEMENT & TECHNOLOGY

in association with

ALL INDIA COUNCIL FOR MANAGEMENT STUDIES

29, Lazarus Church Road, R.A. Puram, Chennai - 600 028. Phone : 4956036/4933210
Fax : 495 2692/4933259 e-mail : aicomas@rediffmail.com Website:WWW.IIMAT.COM

Offers **Six months/One year** Diploma and **18 months** PG Diploma Courses by Correspondence. (Distance Eduation)

- ★ BUSINESS MANAGEMENT
- ★ BUSINESS ADMINISTRATION
- ★ MARKETING MANAGEMENT
- ★ NURSING MANAGEMENT
- ★ MATERIALS MANAGEMENT
- ★ EXPORT & IMPORT MGMT.
- ★ HOTEL MANAGEMENT
- ★ CATERING MANAGEMENT
- ★ BANKING & INSURANCE MGMT.
- ★ TRAVEL & TOURISM MGMT.
- ★ MECHANICAL ENGINEERING
- ★ CIVIL ENGINEERING
- ★ ELECTRICAL ENGINEERING
- ★ ELECTRONICS & COMM. ENG.
- ★ SALES & MARKETING
- ★ FINANCIAL MANAGEMENT
- ★ LABOUR LAWS
- ★ HUMAN RESOURCES DVPT.
- ★ PRODUCTION MANAGEMENT
- ★ COMPUTERS IN OFFICE MGMT.
- ★ COMPUTER APPLICATION
- ★ TEACHER TRAINING EDUCATION
- ★ HOSPITAL ADMINISTRATION
- ★ EDUCATION MANAGEMENT
- ★ ADVT. & PUBLIC RELATIONS
- ★ ENVIRONMENTAL MANAGEMENT SYSTEM & ISO 14000/14001
- ★ INTERNATIONAL BUSINESS MGMT.
- ★ BUSINESS INFORMATION SYSTEM
- ★ MGMT. INFORMATION TECH.
- ★ HEALTH & HOSPITAL MGMT.
- ★ QUALITY ASSURANCE & ISO 9000
- ★ QUALITY CONTROL & ISO 9000
- ★ TOTAL QUALITY MGMT. & ISO 9000
- ★ OFFICE ADMINISTRATION
- ★ INDUSTRIAL SAFETY
- ★ IND. RELATIONS & PERSONNEL MGMT.
- ★ NETWORKING & INTERNET APPLICATION
- ★ SOFTWARE CAPABILITY MATURITY MODEL
- ★ INTERNATIONAL AIRLINES MANAGEMENT
- ★ E-COMMERCE APPLICATION
- ★ WEB DESIGNING APPLICATION
- ★ WEB APPLICATION DEVELOPMENT
- ★ INTERNET & INTRANET SECURITY

For Application and Prospectus send Rs. 10/- Postage stamp to the above address.

Application and Prospectus are also available on our Website. WWW.IIMAT.COM (or) WWW.AICOMAS.ORG





சின்ன வயசிலிருந்தே நான் ஒரு ரிபெல். பெண்களாலே எதையுமே சாதிக்க முடியும் அப்படிங்கற எண்ணம் என் மனசுல இருந்தது. அதனாலேயே நான் ஒரு நல்ல 'அத்லெட்டா' இருந்தேன். அந்தச் சமயத்திலே பெண்கள் இந்தத் துறையில் அவ்வளவாக ஆர்வம் காட்டவில்லை.

என் பெற்றோருக்கு நான் மூன்றாவது பெண். என் அம்மா என்னை மிகவும் வித்தியாசமாக வளர்த்தார். 'சமையல் கத்துக்கணும், கல்யாணம் செய்து கொண்டு குடும்பத் தலைவியாக மட்டும் இருக்கணும்'னு அவர் நினைக்கவில்லை. 'ஒரு புரொஃபஷனலாக இருக்கணும்' அப்படிங்கற எண்ணத்தையும் என் மனசுல விதைத்தார். 'பொறுப்பாக இருக்கணும், எல்லோர்கிட்டேயும் நல்லாப் பழகணும்'னு சொல்லிக் கொடுத்தார். ஆனால் சமையல் செய்வது, அழகா டிரெஸ் செய்து கொள்வது இவைதான் பெண்களுக்கு உரியது என்று அவர் நினைக்கவில்லை. அதனால் அவர் எங்களை கிச்சனுக்கு உள்ளேயே விடலை.

அம்மா எனக்குச் சுதந்திரமாக இருக்கச் சொல்லிக் கொடுத்தார்; கமல் சினிமாவைப் பற்றி நிறைய விஷயங்கள் சொல்லிக் கொடுத்தார். அப்பவே நான் கமலோடு ரீ-ரிகார்டிங், டப்பிங், எல்லாத்துக்கும் போவேன். அதனால் நிறைய டெக்னிகல் விஷயங்கள் கற்றுக் கொண்டேன்.

என்னுடைய தாத்தா ஒரு சினிமா பைத்தியம். நிறைய சினிமா பார்ப்பார். எட்டு வயதிலிருந்தே நான் அவரோடு சினிமா பார்க்கப் போவேன். அப்பவே எனக்கு 'இந்த சினிமா நல்லா இருக்கு, இது நல்லா இல்லை'னு பாகுபடுத்தத் தெரியும். சிவாஜிகணேசன் மிகச் சிறந்த நடிகர் என்றும், மற்றவர்களிடமிருந்து மிக வித்தியாசமானவர் என்றும் புரியும். கை தட்டி, விஸில் அடிக்கிற சினிமா எல்லாம் நல்ல சினிமா அல்ல என்று கணித்தேன். டைரக்டர் பீம்சிங், ஸ்ரீதர் போன்றவர்களுடைய படைப்புகள் சிறந்தவை என்று அப்பொழுதே என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது.

என் அம்மா, கமல், தாத்தா, பாட்டி எல்லோருமே தத்தம் ரசனைகளை என் மீது பதியவைத்ததால், என்னிடமிருந்த சிறு திறமை வித்தியாசமாய் வெளிப்பட்டது.

நான் ஒரு கலர்ஃபுல் காம்பினேஷனாக இருந்ததாலேயோ என்னவோ, ஃபிலிம் ப்ரொடெக்ஷன் கற்றுக் கொண்டால் என்ன

வாஹினி ஸ்டுடியோவில் 'கதைகதையாம்' - டி.வி. தொடர் படப்பிடிப்பில் இருந்த சுஹாசினியிடம் 'திரும்பிப் பார்த்து, ஃப்ளாஷ்பாக் கதை சொல்லுங்களேன்' என்று கேட்டதும், வெளிப்படையாய்ப் பேச ஆரம்பித்தார்.



—சுஹாசினி

ஃபிலிம் இன்ஸ்டிடியூட் நாட்கள் ரொம்ப ஜாலியானவை. 35 மாணவர்கள் நடுவில் நான் ஒரே ஒரு பெண். நான் அதைப் பற்றிக் கவலைப்படவேயில்லை. எல்லா விஷயங்களிலும் அவர்களோடு போட்டிப் போடுவேன். வகுப்பில் லெக்சரர் என்னைதான் கேள்வி கேட்பார். பதில் சொல்லவில்லை என்றால் அவ்வளவுதான். போச்சு! "நம்ப கிளாஸிலிருப்பது ஒரே மிஸ். அவள் மிஸ் தி பஸ்" என்று கலாட்டாவோ கலாட்டா. எல்லா பையன்களோடும் நானும் ஒரு பையன் போல்தான் இருந் தேன். சாப்பாட்டு வேளையில் என் பையி லிருந்து தயிர் சாதம் அம்பேல்! எப்படியோ காணாமல் போய் விடும். கைமாற்றாக பணம் கேட்பார்கள். என்னிடம் மட்டும் எவ்வளவு பணம் இருக்கும்? அதிகபட்சம் பத்து ரூபாய். என்னை 'இது வாங்கிக் கொண்டு வா, அது வாங்கிக் கொண்டு வா', என்று விரட்டுவார்கள். பரீட்சைக்குச் சமர்த்தாகப் படித்துக் கொண்டு போனவள் நான் ஒருத்திதான். பாக்கி முப்பத்து நான்கு

"எனக்கு வெறி கிடையாது!"

என்று தோன்றியது. ஹீரோயின் ஆசை வேண்டும் என்கிற எண்ணம் துளி கூட இல்லை. பி.எஸ்ஸி., முதல் வருடம் முடித்து விட்டு சினிமடோகிராபியில் சேர்ந்தேன்.

சினிமா டெக்னிக் பற்றி ஓரளவு தெரிந்து இருந்தாலும், படம் எப்படி எடுப்பார்கள் என்று தெரியாது. ஒரு வீட்டில் ஷூட்டிங் எடுப்பது என்றால் வீடு முழுவதும் லைட்டிங் செய்வார்கள் என்று நினைத்தேன், அப்புறம்தான் தெரிந்து கொண்டேன் எந்த இடத்தில் படப்பிடிப்புச் செய்ய வேண்டுமோ அங்கு மட்டும்தான் லைட்டிங் செய் வார்கள் என்று.



பேரும் படிக்காமல் பரீட்சை எழுதினார்கள். ஆண்கள், எதையும் லைட்டாக எடுத்துக் கொள்வார்கள். ஆனால் 'கேரியர்' என்று வந்து விட்டால் படு சீரியஸ் ஆகிவிடுவார்கள்.

காமிராவுக்குப் பின்னால் பணியாற்றிய முதல் படம் 'உதிரிப் பூக்கள்'. இதில் என் தந்தை சாருஹாஸன் நடித்துக் கொண்டிருந்தார். காமிராமேன் அசோக்குமார், 'நீ பிலிம் இன்ஸ்டிடியூடில் படித்தால் மட்டும் போதுமா? ப்ராக்டிகலாக தெரிந்து கொள்ள வேண்டாமா' என்று ஷூட்டிங்குக்கு அழைத்துக் கொண்டு போனார். இரவு பன்னிரண்டு மணிக்கு ஷூட்டிங். ஒரு பாடல் காட்சியில் வயதான பெண்மணி ஒருவர், "போடா போடா பொக்கே; என்னு காட்டுக்கு தெக்கே" என்று பிரமாதமாக டான்ஸ் ஆட, முதல் முறையாக லைட்டிங் செய்தேன். அடுத்த படம் 'ஜானி'. ஸ்ரீதேவி, ரஜினிகாந்த் நடித்த படம். ஸ்ரீதேவியின் அம்மா, "உனக்கு போட்டோஜினிக் முகம்; நீ ஏன் நடிக்கக் கூடாது?" என்றார். நான் சும்மா சிரித்து வைத்தேன். ஊட்டியில் ஷூட்டிங். அவர்கள் எல்லாம் ஜாலியாக சால்வை போர்த்திக் கொண்டு உட்கார்ந்திருப்பார்கள். நாங்கள் எல்லாம் குளிரில் நடுங்கிக் கொண்டு ஓடி ஓடி வேலை செய்வோம். எனக்கு அந்தக் குளிரில் ஜுரமே வந்து விட்டது. ஸ்ரீதேவியின் தாயார், "நீ நடிக்கலாமே" என்று சொல்லிக் கொண்டேயிருந்தார். அப்பொழுது என்னால் என்னை நடிகையாக நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை.

ஆனால் எனக்கும் தெரியாமல் நடந்தது என்னுடைய ஸ்க்ரீன் டெஸ்ட். நான் 'ஜானி'யில் வேலை செய்து கொண்டு இருந்த போது எனக்குத் தெரியாமலே என்னைப் படம் பிடித்து விட்டார்கள். முதலில் நான் ஒப்புக் கொள்ளவே இல்லை. என் தந்தை சாருஹாஸன் என்னை மிகவும் வற்புறுத்தி சம்மதிக்க வைத்தார். 'மேக்-அப் போட மாட்டேன், லிப்ஸ்டிக், ப்ளஷ்ஆன், எல்லாம் போட மாட்டேன்' என்று கண்டிஷன் போட்டேன். அதற்கு டைரக்டர் மகேந்திரன் ஒப்புக் கொண்டார். முதல் படத்தில் நடித்தது மிகவும் சுலபமாக இருந்தது. அந்தக் கதாபாத்திரமும் என்னைப் போலவே இருந்ததால் எனக்கு நடிப்பு இயல்பாகவே வந்தது. 'நெஞ்சத்தைக் கிள்ளாதே' சூப்பர் ஹிட்டாகி விட்டது.


அப்போது கூட எனக்கு அவநம்பிக்கை தான். 'ஏதோ அதிர்ஷ்டவசமாக இந்தப் படம் ஓடிக் கொண்டிருக்கிறது. நானாவது, கதாநாயகி ஆவதாவது' என்று நினைத்தேன். 'நெருங்கி நடிக்க வேண்டிய காதல் காட்சிகளில், நடிக்க மாட்டேன், பெண்களைத் தரக்குறைவாகக் காட்டும் காட்சிகளில் நடிக்க மாட்டேன். ஆபாசமான நடனக் காட்சிகள் வேண்டவே வேண்டாம்' இப்படி எல்லாம் நினைக்கும் நமக்கு, கதாநாயகி வேஷமெல்லாம் சரிப்பட்டு வராது என்று தோன்றியது. படிப்பைத் தொடர ஆரம்பித்தேன். விடுமுறையில் என் இரண்டாவது படமான 'பாலைவன சோலை' செய்தேன். இதுவும் ஹிட்டாகி விட்டது. அதற்குப் பின் சந்தர்ப்பங்கள் வந்து குவிந்தன. படிப்பை நிறுத்த மனமில்லை. ஒரு வருட-படிப்பை முடித்து விட்டுத்தான் படங்கள் ஒப்புக் கொள்வேன் என்று பிடிவாதம் பிடித்தேன். இயக்குனர்களும் பொறுமையாகக் காத்திருந்தனர்.

'சிந்து பைரவி' முதல் காட்சியிலேயே நான் டைரக்டருடன் 'க்ளிக்' ஆகி விட்டேன். அந்தப் படத்தில் கே.பி.ஸார் எனக்கு நிறைய சுதந்திரம் கொடுத்திருந்தார். நான் ஒரு கிளாமரஸ் நடிகை இல்லை. அந்தப் பாத்திரம் எனக்குப் பொருந்துமா என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. "கவலைப் படாதே, ஹாஸினி, இதை நான் ஒரு

"உங்க மனைவிக்கு என்னமோ ஆயிடுச்சுன்னு பயப்படுறீங்களே, எதனால?"

"மெகா சீரியல் எதுவுமே பார்க்க மாட்டேங்கிறா டாக்டர்!"

- மங்கை



சவாலாக எடுத்துக் கொள்கிறேன்." என்று பாலசந்தர் சொன்னார். சொன்னபடியே படத்தை சூப்பர் ஹிட் செய்து விட்டார்.

நான் இதுவரை 170 படங்களுக்கு மேல் நடித்து விட்டேன். 35 படங்கள் தமிழ். மற்றவை தெலுங்கு, கன்னடம், மலையாளப் படங்கள். தெலுங்குப் பட டைரக்டர் ஸ்வரணகுமார் என்னை மிகவும் வித்தியாசமான பாத்திரங்களில் நடிக்க வைத்தார்.

சிவாஜி, கமல், ஷபனா ஆஸ்மி, நஸ்ருதீன் ஷா நடிப்பு மிகவும் பிடிக்கும். சுஜாதா, ஸ்ரீவித்யா, ராதிகா இவர்களோடு போட்டி போட்டுக் கொண்டு நடிப்பதென்றால் எனக்கு ஐஸ்க்ரீம் சாப்பிடுவது போல்.

'இந்திரா' படம் நான் டைரக்ட் செய்யும் போது என் மகன் நந்தாவுக்கு நான்கு வயது. இளம்பிராயத்தில் குழந்தைகளுக்குத் தாயின் அரவணைப்புதான் தேவை. அதற்குப் பிறகு அவர்களுடைய எண்ணங்களை, உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ள ஒரு கம்பானியன் தேவை. அதனால்தான் நான் மேலும் டைரக்ஷனில் ஈடுபடவில்லை. நாற்பது நாள், ஐம்பது நாள் அவனைத் தனியாக விட்டு விட்டுப் படப்பிடிப்புக்குப் போக எனக்குச் சங்கடமாக இருக்கிறது. பலரும், 'ஒரே குழந்தைதானா?' என்று கேட்கிறார்கள். இந்தியா போன்ற நாட்டுக்கு ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தைக்கு மேல் இருக்கக் கூடாது என்பது எங்கள் எண்ணம்.

கமல், ரஜினி, பானுப்ரியா மாதிரி நடிப்பில் எனக்கு வெறி கிடையாது. இது என்னுடைய மைனஸ் பாயிண்ட். கொடுக்கிற வேலையை ஒழுங்காகச் செய்வேன். ஆனால் உயிரைக் கொடுத்து நடித்திருக்கிறேன் என்று சொல்ல முடியாது. இப்பொழுது எனக்குள் ஒரு மாற்றம். முன்பு புரொபெஷனலாக இருந்தேன். இப்பொழுது அதுவே passionஆக மாறி விட்டது. நடிப்புத் தொழில் என் சுபாவத்தையே மாற்றி விட்டது.

சந்திப்பு : **ரஜினி ராஜேஷ்**
படங்கள் : **யோகா**



மலர்களில் மகாராஜா!

கல்கி தீபாவளி மலர் 2001 படித்தேன். மணியம் செல்வனின் காமாட்சி அம்மன் அட்டைப்படம் மனத்தை அள்ளிக் கொண்டு போனது. தளவை இளங்குமரன், வாலி, பொன்னடியான், புதுவயல் செல்லப்பன் கவிதைகள் ரசிக்கும்படி இருந்தன.

- விஜயஸ்ரீஇராஜேஸ்வரன், மொரட்டுப்பாளையம்

கல்கி தீபாவளி மலர் என்ற சமுத்திரத்தில் முத்துக் குளித்தேன். எல்லாமே நல்முத்துகள். காஞ்சி மகா சுவாமிகள் ஓவியம் ஜி.வெங்கட்ராமன் கைவண்ணத்தில் பளிச்சிட்டது. சீதாரவியின் மோகனம் அருமையாக காதில் பாடியது. கல்கியின் 'பித்தளை ஒட்டியாணம்' எங்களைப் பொறுத்தவரையில் தங்க ஒட்டியாணம். இரண்டுக்கும் கோபுலுவின் ஓவியம் சிம்ப்ளி சூபர்ப்!

- தி.சௌந்தரராஜன், சென்னை

மிக அழகான மலர். மலரின் பக்கங்களைப் புரட்ட புரட்ட வானவில் பாலத்தின்மீது, ஜொலிக்கும் நட்சத்திரப் பூக்களை ரசித்துக் கொண்டே போவதைப் போல மனத்தில் ஒரு பிரமிப்பு.

மலர்களில் மகாராஜா என்றால் அது 'கல்கி' மட்டும்தான்.

- சின்னஞ்சிறுகோபு, மயிலாடுதுறை.

கனமான பக்கங்கள் மட்டுமில்லாமல் கனமான பல விஷயங்களுடனும் இந்த வருட 'கல்கி' தீபாவளி மலர் முக்கனிச் சுவையுடன் மின்னியது. ஆம்! கல்கி, மங்கையர் மலர், கோகுலம் மூன்றும் முக்கனிகள்தானே.

- டி.ஜி.நாராயணராவ், சென்னை

கண்ணியமும், கவர்ச்சியும் பொருத்தமான விகிதத்தில் இழைந்து, தரமான இலக்கிய முகத்தோடு மிளிர்ந்தது.

- எஸ். வைதீஸ்வரன், சென்னை

அஹோபில நவநரஸிம்மர்களை சுப்ர. பாலன் கட்டுரை மூலமும், தனுஷு படங்கள் மூலமும் தரிசித்து மகிழ்ந்தோம். 'கல்கி' தீபாவளி மலருடன் தீபாவளி கொண்டாடுவதே ஒரு பேரானந்தம்தான்.

- வி.எஸ்.அனந்தராமன், சென்னை

ஆவினன்குடி அழகன்

'கல் தோன்றி மண் தோன்றா காலத்துக்கு முன் தோன்றிய மூத்த குடி' என்று தமிழ் இனத்துக்கு ஒரு புகழ் உண்டு. இந்த மூத்த குடியினர் இயற்கையை வழிபட்டு ஆராதிப்பதில் தனியானதொரு களிப்பு கொண்டார்கள். அதிலும், கம்பீரமாக உயர்ந்து நிற்கும் மலைகளையெல்லாம் இஷ்ட தெய்வத்துக்குரிய வாசஸ்தலங்களாக்கி மகிழ்ந்தார்கள். விண்ணையும் மண்ணையும் இணைப்பதுபோல் நின்ற மலைகளின் உச்சியில் ஆலயங்களைக் கல்லால் அமைத்தார்கள். அவற்றுக்குள் இறைவனையும் அதே கல்லால் உருவாக்கி ஆகம விதிப்படி பிரதிஷ்டை செய்தார்கள். புற உலகையும் புலனுணர்ச்சிகளையும் எட்ட அனுமதிக்காத உயர உயரச் சுவர்களெழுப்பி, நடு மையத்தில் மனத்தை ஈர்க்கும் மூலஸ்தானத்தையெடுத்து, கற்சிலைகளுக்கு தெய்வ சக்தியூட்டும் கிரியைகள் செய்து அங்கே ஸ்தாபித்தார்கள்.

இப்படி, கல்மலையில், கல் சுவர்கள் சூழ, கற்கோயிலமைத்து, கல்லால் தெய்வம் வடிக்கும் பழக்கத்துக்கு விதிவிலக்காக நிற்பவன் பழநி மலையிலே குடிகொண்டிருக்கும் பாலதண்டாயுதபாணி.

வேலன், முருகன், சரவணபவன், வேலாண்டி என பல பெயர்களால் அழைக்கப்படும் அவன் தன் குறுவடிவாலும் குமிழ்ச் சிரிப்பாலும் கோடிக்கணக்கான பக்தர்களை ஈர்த்துக் கொண்டேயிருக்கிறான். கோவிலெல்லாம் கல்தான். ஆனால் இவன் திருமேனி நவபாஷாணம் எனப்படும் ஒன்பது மூலிகைகள் கொண்ட கலவையினால் ஆனது. கல்லைவிட வலுவானது. ஆனால் அவன் உள்ளமோ அன்பும் அருளும் ததும்ப நிற்பது. பாபநாசம் சிவனின் 'கா வா வா' பாடலில் வருவது போல் 'பழநி வளர் கருணை மழை!' அவன்.

இந்த நவபாஷாண முருகனை இங்கே குடியேற்றியவர் போகர் என்ற சித்தர். இவர் சீனத்திலிருந்து யோக மார்க்கத்தைத் தேடி இந்தியா வந்ததாகச் சொல்வார்கள். தமிழ் நாட்டில், யோக நிலையின் உச்ச கட்டமான அஷ்டமா சக்திகளைப் பெற்று ஆன்மிக நெறியில் தழைத்து பழநியிலேயே அவர் சித்தி அடைந்ததாகவும் கூறுவர்.


இவர் தம் உள்ளத்தில் குடிகொண்ட தெய்வமான முருகனுக்கு, தன் உணர்விலும் கற்பனையிலும் தோன்றியபடி நவபாஷாணம் கொண்டு உருவமளித்து வழிபட்ட ஸ்தலம்தான் பழநி.

பழநிக்குச் சென்று வந்தவர்கள் சில நிமிடங்களுக்கு அந்தக் குறுவடிவத்தை மனத் திரையில் கொண்டு வ்ந்து நிறுத்திப் பாருங்கள்; அல்லது ஓவியர் தனுஸுவின் படத்தைப் பாருங்கள்... கண்ட கணத்திலேயே கவலைகளையெல்லாம் ஓட்டம்பிடிக்கச் செய்கிற குழந்தை வடிவம்; அதிலும் துறவுக் கோலத்தில் ஒரு குழந்தை! போகர் ஒரு பால சித்தர் ரூபத்தில் தன் முருகனைக் கண்டு மெய்மறந்ததில் ஆச்சர்யமில்லை. உலகியலிலிருந்து விடுபடாத மக்களுக்கே இத்தனை பூரிப்பும் களிப்பும் அளிக்கும் அந்த குழந்தைச் சிரிப்பு, அஷ்டமா சக்திகளைப் பெற்ற யோகியான போகருக்கு எத்தனை ஆயிரம் அர்த்தங்கள் புகட்டியிருக்குமோ...! நினைக்கையிலேயே சிலிர்க்கிறது.

முருகன் பழநியில் குடியேறிய புராண வரலாறு



குருஜி ஏ.எஸ். ராகவன்





• இடும்பனின் 'காவடி'

பிரசித்தியானது. சிவபெருமானுக்கு நாரதர் அளித்த மாதுளம்பழத்தைப் (மாம்பழம் என்றும் கூறுவர்) பெற அண்ணன் தம்பியரான கணபதிக்கும் கந்தனுக்குமிடையே போட்டி. 'உலகை ஒரு நொடியில் வலம் வருபவருக்கே இக்கனி' என்று சிவன் சோதிக்க, விநாயகர் 'பெற்றோரே உலகம்' என்று அவர்களை வலம் வந்து பழத்துக்கு முந்திக் கொண்டார். மயில் வாகனத்திலேறி, உலகை வலம் வந்து சேர்ந்த முருகன், கரிமுகன் கையில் 'கைத்தல நிறை கனி' கண்டு கோபித்துக் கொண்டு திருஆவினங்குடி என்னும் பழநியில் வந்து நின்று கொண்டான்!

ஆண்டிக் கோலத்தில் நின்று அடம் பிடிப்பவன் முகத்தில் எப்படி மந்தகாச புன்னகை தவழுமாம்? என்ற கேள்வி எழும். பெற்றோர்தான் பின்னாலேயே ஓடிவந்து செல்லப் பிள்ளையைச் சமாதானப்படுத்தி விட்டார்களே!

'நீயே ஞானப் பழமாக இருக்கையில் உனக்கெதற்கு வேறு பழம்' என்று கொஞ்சிப் பேசி குழந்தையைச் சிரிக்க வைத்து விட்டார்கள்!

ஞானமார்க்கத்துக்கு வழிகாட்டும் ஞானப் புன்னகையுடன் ஞானமே வடிவாக நிற்கிறான் ஆவினங்குடி அழகன்.


அருணகிரியார் இந்த வரலாறை மலர்த் தொடுப்பதுபோல் சந்தத்தில் தொடுத்துத் தருகிறார் திருப்புகழாக:

படியிற் பெருமித
தகவுயர் செம்பொற்
கிரியைத் தனிவலம் வரஅர னந்தப்
பலனைக் கரிமுகன் வசமருளும்பொற்
பதனாலே
பரன்வெட் கிடவுள மிகவும்
வெகுண்டக்
கனியைத் தரவிலை யென அருள்
செந்திற்
பழநிச் சிவகிரி தனிலுறை கந்தப்
பெருமானே

பழத்தைப் பற்றிய புராணத்தோடு தொடர்புடையதால் பழநி; பழனம் என்னும் வயல்கள் சூழப்பெற்றதால் பழநி, 'பொதினி' என்ற பழந்தமிழ்ச் சொல்லின் திரிபு (சங்க இலக்கியங்களில் பொதினி என்று குறிப்பிடப்பட்டுள்ளது) பழநி — இப்படிப் பல விளக்கங்கள் பழநி என்ற பெயருக்கு.

இந்தப் பழநி மலையின் அடிவாரத்தில் உள்ள ஸ்தலத்தை திருஆவினன்குடி என்று அழைக்கிறார்கள். நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் மூன்றாம் படை வீடாகக் குறிப்பிடுகிற திருஆவினங்குடி, திருவாகிற லக்ஷ்மியும் ஆவாகிற காமதேனுவும் 'இனன்' என்கிற சூரியனும் பூஜித்த இடம் என்பதாக கந்தபுராணம் சொல்கிறது. ஆவியர் குலத்து வள்ளலான பேகன் தலைநகராகக் கொண்ட ஊர் ஆவினன்குடி என்பதும் ஒரு விளக்கம்.

இங்கும் குழந்தை வேலாயுத சுவாமியாகத்தான் தோற்றமளிக்கிறான் முருகன். மயில்மீதமர்ந்த திருக்கோலம். இவரை வழிபட்ட பிறகே மலைமேல் இருக்கும் பாலதண்டாயுதபாணியைத் தரிசிக்கச்



• திருவாவினன்குடி

செல்வது மரபு.

இத்தலம் ஒரு காலத்தில் நெல்லி வனமாக இருந்தது. இன்றும் நெல்லியே ஸ்தல விருக்ஷம்.

ஆவினன்குடி பற்றிய புராணக் கதையும் சுவாரஸ்யமானது. சிவன்_பார்வதி கல்யாணத்தைக் காண உலகமே வடதிசையில் திரண்டு விட்டதாம். ஆதலால் தென்திசை உயர்ந்து வடதிசை பளு தாளாமல் தாழ்ந்து விட்டது. அகத்தியரை அழைத்து, இதைச் சமன் செய்யுமாறு பணித்தார் சிவனார். அகஸ்தியரும் தாம் வழிபடும் மலைகளான சிவகிரி, சக்திகிரியை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். இரு மலைகளையும் அவர் சிஷ்யனான இடும்பன் தூக்கி வந்தான்_ ஒரு பெரிய தண்டத்தின் இரு புறங்களிலும் அவற்றைக் கட்டியெடுத்து காவடி போல் தோளில் தூக்கி வந்தான். அவன் மனைவி இடும்பியும் கூட வந்தாள்.

ஆவினன்குடியை அடைந்தபோது அகஸ்தியர் அனுஷ்டானத்துக்குச் செல்ல, இடும்பன் சற்று ஓய்வெடுக்க காவடியை இறக்கி வைத்தான். மீண்டும் அதைத் தூக்க முடியாமலே போயிற்று. சிவகிரி மேல் அமர்ந்திருந்த ஒரு சிறுவனே இந்த மாய வித்தைக்குக் காரணம் என்று அறிந்து அவனை இறங்கும்படிச் சொல்ல, அவன் மறுக்க, இடும்பன் அவனைத் தாக்க முயன்று தோற்று மூர்ச்சையாகிப் போனான்!

அகஸ்தியருக்குத் தெரிந்து போயிற்று... இது முருகனின் திருவிளையாடல் என்று! இடும்பியும் அவருமாக முருகனை வேண்டி இடும்பனை மீட்டார்கள். முருகன் சிவகிரியைத் தனதாக்கிக் கொண்டு இடும்பனைக் காவல் தெய்வமாக 'அப்பாய்ன்ட்' செய்து விட்டான்! அன்றைய சிவகிரியே இன்றைய பழநிமலை ஆகிவிட்டது. இன்று காவடி எடுத்துச் செல்லும் வழக்கமானது இடும்பன் ஆரம்பித்து வைத்ததுதான்! ஞானக் கடவுளுடன் மோதாமல், அவன் காட்டிய வழியில் பணிந்து நடக்கும் வினயத்துக்கு அடையாளமாகிவிட்டது அந்தப் பிரார்த்தனை.

பழனிமலைமேல் 450 அடி உயரத்தில் இருக்கிறது பாலதண்டாயுதபாணி கோயில். போகர் நிறுவிய கோயிலுக்கு முன்னதாகவே அங்கே முருகனுக்கு ஆலயம் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். சேர மன்னர்கள் இன்றைய கோயிலைக் கட்டியதாக தல புராணம் சொல்கிறது.

மலையின் மேற்கே ஷண்முக நதி என்னும் புனித தீர்த்தம். 697 படிகள் ஏறியோ, மின் இயந்திரப் பல்லக்கில் அமர்ந்தோ மேலே செல்லலாம்.



● 'பழம்' கதை!

பொன் விமானத்தின் கீழ், கல்வெட்டுகள் வரலாறு பேசும் கர்பகிருஹச் சுவர்களுக்குள் கந்தப் பெருமான் கௌபீனதாரியாகக் காட்சி தருகிறான். மேற்கு நோக்கிய நிலையில் அருள்கனிந்த திருப்பார்வையும் புன்னகை தவழும் திருவாயும் மதாணி துலங்கும் திருமார்பும் அரையில் வைத்த இடக்கரத்தின் அழகும், ஞான தண்டமேந்திய வலக்கரத்தின் எழிலும், திருப்பாதங்களில் சிறு தண்டைகள் உறவாடும் ரஞ்சகமும் காண காண பரவசமூட்டுகின்றன. வேலனாக, விருத்தனாக, ஆண்டியாக, அரசனாக என்று விதம்விதமாய் அலங்கரித்து மகிழ்கிறார்கள்_ நாளெல்லாம் அபிஷேகம் நடக்கிறது.... எல்லாமே ஒன்றுதானே என்பதுபோல் சிரித்துக் கொண்டு அனுபவித்து நிற்கிறான் பாலமுருகன். முருகன் என்றாலே அழகுதான். இத்தலத்தில் புதுமலர் போல் பூத்துப் பொலிகின்றது அவன் அழகு.

சண்டாம்ச தசகோடி ஸம்காசம்...

அண்டஜ மணிமண்டலமய குண்டலாதி மண்டிதாங்க ஸுகுமாரம் (நூறு கோடி சூர்யன்களைப் போல் பிரகாசிப்பவன்; நவரத்தின குண்டலங்கள் அணிந்தவன்,



அருள்வாக்கு

மூளைக்குத் தெரிகிறது வேறே; அதற்கும் ஆதாரமான உயிருக்குத் தெரிகிறது வேறே. கோட்டான் கண்ணுக்கு வஸ்துக்கள் ராத்திரியில்தான் தெரிகிறது. பகலில் அதற்கு எதுவும் தெரிவதில்லை. மனுஷக் கண்ணுக்குப் பகலில்தான் தெரிகிறது. ராத்திரியில் தெரிவதில்லை. மூளைக்கு அநுபவம் தெரிவதில்லை. அதற்குத் தர்க்கத்தையொட்டி விசாரிக்கிற அறிவு வாதம்தான் தெரியும். அநுபவம் தெரிகிற ஹ்ருதயத்துக்கு அறிவு வாதம் தெரிவதில்லை. ஜீவனின் ஸார ஸத்யமான உயிரைத்தான் ஹ்ருதயம் என்பது.

ஆனாலும் ஹ்ருதயம் இலேசில் திறந்து கொள்வதில்லை. எதனாலோ மனுஷ்யர்களுக்கு மூளைப் பெருமையையே பெரிசாக வைத்திருக்கிறது. அதனால், எதுவுமே முதலில் புத்தியில், மூளையில் உறைத்தாக வேண்டியிருக்கிறது. ஹ்ருதயமே அநுபவிக்க வேண்டிய ஆத்யாத்மிக விஷயங்களைக்கூட மூளை ஸரியாயிருக்குமா, இருக்காதா என்று எடை போட்டுப் பார்க்க ஆரம்பிக்கிறது. ஸரியாயிருப்பதாக அது முடிவு பண்ணினால் அதற்கப்புறமே, 'இப்படி நாம் அறிவினால் முடிவு பண்ணினது போதாது. இதனால் அந்த விஷயத்தின் லக்ஷ்யமான ப்ரயோஜனம் நமக்குக் கிடைத்து விடவில்லை. உதாரணமாக, ஆத்மா ஸச்சிதாநந்த ஸ்வரூபமாகத்தான் இருக்க வேண்டுமென்று இத்தனை வேதாந்த புஸ்தகங்களைப் படித்து, குரு உபதேசங்கள் கேட்டு புத்தியினால் புரிந்து கொண்டபோதிலும் நமக்கு ஸத்தும் தெரியலை, சித்தும் தெரியலை, ஆனந்தமும் தெரியலை. அசடு மாதிரி துக்கப்பட்டுக் கொண்டுதான் கிடக்கிறோம். அதனால் புத்திக்குள் போனதோடு நிறுத்திக் கொள்ளாமல் அதை ஹ்ருதயத்துக்குள் இறக்கிக் கொள்ள வேண்டும்' என்று நினைக்கிறோம்.

— ஜகத்குரு காஞ்சிகாமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

அலங்காரன், குறைவற்ற ஸு(குமாரன்) என 'தண்டாயுதபாணிம்' என்ற கீர்த்தனையில் முத்துஸ்வாமி தீக்ஷிதர் இந்த அழகுக்கு இசை வடிவம் அளித்திருக்கிறார்.

மூவேந்தர்களாலும் கொங்கு நாட்டு மன்னர்களாலும் மதுரை நாயக்க மன்னர்களாலும் ஆளப்பெற்றது இத்தலம். இன்று உலகெங்கிலுமிருந்து வரும் பக்தர்கள் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

சித்திரை உத்ஸவம், வைகாசி விசாகம், தைப்பூசம், கந்த ஷஷ்டி விழா, திருக் கார்த்திகை, பங்குனி உத்திரப் பெருவிழா என்று கோலாகலமாய் ஏற்றுக் கொலுவிருக்கிறான் முருகன். தைப்பூசத்தின் போது இடப்படும் அன்னதானம் மிகச் சிறப்பானது.

யோகியர், ஞானியர், சித்தர்கள், கவிஞர்கள், இசைப்பாடலாசிரியர்கள் என்று வகை வகையானோர் இத்தலத்தைப் பாடிச் சென்றிருக்கிறார்கள்.

பாலசுப்ரமண்ய கவிராயர் என்பவர் கண்பார்வையும் கேட்கும் சக்தியும் அற்ற குழந்தையாக இந்த தலத்துக்கு அழைத்து வரப் பட்டதாகவும் முருகன் அருள் பெற்று இத்தல புராணத்தையே பின்னர் பாடியதாகவும் வரலாறு. வள்ளிமலை சச்சிதாநந்த சுவாமிகளை ஆட்கொண்டு திருப்புகழ் போதித்த அற்புதமும் இங்கே நடந்தது.

திருவாவினன்குடி, சிவகிரி, பழநி என்று மூன்று பெயர்களையும் திருப்புகழில் எடுத்தாண்டுள்ள அருணகிரிநாதர் இத்தலத்தைப் பற்றிப் பாடிய 96 பாடல்கள் கிடைத்திருக்கின்றன.

பார்த்தால் குழந்தையெனினும் சூரனை வென்றவன் இந்த முருகன் – உலகாள வந்தவன் என்பதை அழகாக தெரிவிக்கிறார் அருணகிரிநாதர்.


தினைப் புனமு னேத டந்து
குறக்கொடியை யேம ணந்து
செகத்தைமுழு தாள வந்த பெரியோனே
செழித்தவள மேசி றந்த மலர்ப்பொழில்
கனேதிறைந்த
திருப்பழநி வாழ வந்த பெருமாளே!

என்று முடியும் திருப்புகழானது 'மனக் கவலை யேதுமின்றி உனக்கடிமையே புரிந்து...' என்று ஆரம்பிக்கும் அழகை கவனிக்க வேண்டும்.

இதை எதிரொலிக்கும் விதமாய்த்தான். 'தாபத்ரய வெயிலற நிழல் தரும் வான் தருவே என் குல குருவே வா!' என்று அழைத்துப் பாடியிருக்கிறார் பாபநாசம் சிவன் ('கா வா வா' கீர்த்தனை)

அவன் புன்னகை அழகும் பழநி மலையின் உயர்வும் நம்மை 'வா! வா!' என்று அழைப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது.

(அடுத்த வாரம்: சிவனார் மனங்குளிரச் செய்த சுவாமிநாதன்)







பிரமாண்டமான பங்களா... அரண்மனை போன்ற முகப்புத் தோற்றம்.. என்று படமாக்க விரும்பினால் இப்போதெல்லாம் ஸ்டூடியோக்களில் செட்டுகள் அமைப்பதில்லை. அப்படியே 'பேக்கப்' சொல்லி காரைக்குடி பக்கம் வந்து விடுகின்றனர். காரணம்... அங்குள்ள வீடுகளின் கம்பீரமான அழகு!

இரண்டாம் உலகப் போருக்கு முன்னால் 'நகரத்தார்கள்' என்று அழைக்கப்படும் செட்டியார் இனத்தவர்கள் ஏராளமானோர் பர்மாவில் தொழில் செய்து வந்தனர். அப்போது பர்மாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தேக்கு மரங்களால் அழகிய வேலைப்பாடுகளுடன் வீடுகளை கட்டியுள்ளனர். 'சிமெண்ட்' அறிமுகம் இல்லாத காலத்திலேயே வழுவழுப்பான சுவர்களை, சுண்ணாம்பு கொண்டே அமைத்துள்ளனர்.

"திரைப்படத் தயாரிப்பாளர் புரட்சிதாசனும், செவரக்கோட்டை நாராயணனும் காரைக்குடியில் ஒரு திருமணத்திற்கு வந்திருந்தார்கள்... இந்த வீடுகளில் படப்பிடிப்பு நடத்த அனுமதிப்பார்களா? என்று கேட்டார்கள். வீட்டின் உரிமையாளர்களும் 'நம்முடைய வீடு சினிமாவில் வந்தால் சரி' என்று சந்தோஷத்தில் இலவசமாக அனுமதித்தார்கள். அப்புறம் இரண்டு மூன்று ஆண்டுகள் கழித்து அதுவே வர்த்தகமாகி விட்டது. இன்று ஒருநாள் படப்பிடிப்பு நடத்த இரண்டாயிரத்திலிருந்து ஐயாயிரம் ரூபாய் வரை வாடகை. குறைந்தது பத்து பதினைந்து நாட்கள் படப்பிடிப்பு நடக்கும். இதுபோன்ற வீடுகளுக்கு 'செட்' போடுவதை விட, வாடகைக்கு எடுப்பது வசதி மட்டுமல்ல, சிக்கனமும் கூட" என்கிறார்கள், காரைக்குடி பகுதியில் வீடுகளைத் திரைப்படத் துறையினருக்கு, படப் பிடிப்புக்கு அமர்த்திக் கொடுக்கும் குமரேசன் மற்றும் கண்ணன்.

"வீடுகளில் எந்த இடத்திலும் ஆணி அடிக்க அனுமதிக்க மாட்டார்கள். பெயிண்டிங் செய்ய அனுமதிக்க மாட்டார்கள். இயல்பு நிலை கெடாதவாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கண்டிஷன் போட்டு விடுவார்கள். அப்புறம் படப்பிடிப்பு ஆரம்பிக்கும் போது மின்சாரக் கணக்கை குறித்துக் கொண்டு முடியும் போது கணக்கிட்டு, அதற்குத் தனியே கட்டணமும், படப்பிடிப்பு முடிந்தவுடன் அந்த வீட்டை கழுவிச் சுத்தம் செய்து கொடுப்பதற்குக் கட்டணமும் தனியே கொடுக்க வேண்டும். இதுபோன்று ஏற்பாடு செய்து கொடுக்கும் எங்களுக்கு ஒரு படத்துக்கு பத்திலிருந்து பதினைந்தாயிரம் ரூபாய் வரை கமிஷன் கிடைக்கும்" என்று

கூறும் குமரேசன் பதினாறு ஆண்டுகளாக இந்தத் தொழிலில் உள்ளார்.


இன்னும் வெளிச்சத்துக்கு வராத கலையம்சம் மிக்க வீடுகளும் இந்தப் பகுதியில் நிறைய உள்ளன. வீட்டின் உரிமையாளர்கள் அங்கே படப்பிடிப்பு நடத்த அனுமதிப்பதில்லை. காரைக்குடி அருகில் செட்டிநாட்டில் செட்டிநாட்டரசர் எம்.ஏ.எம். இல்லம் இருக்கிறது. சிவாஜி கணேசனுடன் உள்ள நட்பு காரணமாக பிரபுவின் 100வது படமான ராஜகுமாரனுக்கு மட்டும் படப்பிடிப்பு நடத்திக் கொள்ள அனுமதித்திருந்தார்களாம்.

வெற்றிப் படங்களான 'அரண்மனைக் கிளி', 'ஜீன்ஸ்' போன்ற படங்களிலும் 'இருவர்', 'தேவர் மகன்' (இந்தி), 'வள்ளல்', 'மருதநாயகம்' 'தேசிய கீதம்' 'வாட்டாக்குடி இரணியன்', 'கண்டுகொண்டேன், கண்டுகொண்டேன்' போன்ற நாற்பதுக்கும் மேற்பட்ட படங்களிலும் காரைக்குடி வீடுகள் நடித்துள்ளன.

இயக்குநர்கள் மணிரத்னம், சங்கர், சேரன், ராஜீவ்மேனன், ஆர்ட் டைரக்டர்கள் சாபுசிரில், தோட்டாதரணி, சமீர்சந்தா ஆகியோர் 'விசிட்' செய்த வீடுகள் விஐபி அந்தஸ்து பெற்றுள்ளன.

நடிக்கும் வீடுகள்!





• கண்ணன்




• குமரேசன்

தற்போது இந்தப் பகுதியிலுள்ள வீடுகளில் டிவி. சீரியல்களான 'ஜன்னல்', 'அம்பிகை' தொடர்களின் படப்பிடிப்புகள் நடக்கின்றன.

காரைக்குடி பகுதியின் வீடுகளின் புறத்தோற்றம் மற்றும் உள்ளமைப்பு படங்களுடன் மற்ற விவரங்களுடனும் புதிய 'வெப்சைட்' ஒன்றை, திரைப்படத் துறைத் தொடர்புகளுக்காகத் தொடங்கியுள்ளனர்.

படம், கட்டுரை : கி. சிங்கார வடிவேல்.





“அம்மா, என் பையன் முருகன் உங்களைப் பார்க்கணுமாம்'' என்றாள் முத்தம்மா – ஹேமா வீட்டு வேலைக்காரி.

“என்ன விஷயம்?” ஹேமா அசுவாரசியமாகக் கேட்டாள்.

''என் பையன் ஏதோ யாவாரம் பண்றானாம். நீங்க வாங்கிப்பீங்களான்னு கேட்டான்.”

''சரி, சரி... பார்த்து மெழுகு. என்ன வியாபாரம்?”

''இல்லம்மா, தரை துடைக்கிற சோப்புத் தண்ணி, குளியல் சோப்பு, பாத்திரம் கழுவற பொடினு எல்லாம் வெளிநாட்டுப் பொருளாம். படிச்சுட்டு வேலை கிடைக்கல. இதை வித்தா ஏதோ அஞ்சு, பத்து கமிஷன் மாதிரி தர்றாங்களாம்.

திணறல்



வேலைக்கு மனுப் போடவாவது ஆகுமேன்னான். தெரிஞ்ச, வேலை செய்யற வீட்லயெல்லாம் சொல்லச் சொல்றான். பத்து மணி வாக்கில உங்களைப் பார்க்க வரேன்னான். ஏதோ பார்த்துச் செய்யுங்கம்மா."

"ம்ம்.... பார்க்கலாம்" என்றபடியே ஹேமா சமையலறைக்குள் சென்றாள்.

பத்து மணிக்கு முருகன் வந்தான். அவன் தோற்றத்திற்குப் பொருந்தாத நவீன புது தோல் பையுடன் தயங்கித் தயங்கி நுழைந்தான்.

"முருகனா? என்ன, படிப்பு முடிஞ்சு போச்சா?" என்றாள் ஹேமா.



"ஆமாம் மா. பிஎஸ்ஸி., கணக்கு முதல் வகுப்பில் பாஸ் பண்ணியிருக்கேன். வேலைக்கு மனுப் போட்டுக்கிட்டிருக்கேன். கம்ப்யூட்டர் தெரிஞ்சா வேலை கொடுக்கறேன்னு சொல்றாங்க. ஆறு மாத கோர்ஸ்னா கூட பத்தாயிரம் வரை ஆகுது. அதுதான் இது மாதிரி ஏதாவது வேலை செஞ்சு கொஞ்சம் பணத்தை சேமிச்சு, படிக்கலாம்னு இருக்கேன்" என்று இழுத்தான்.

"சரி, என்ன வியாபாரம்?" என்று ஹேமா கேட்க, அவன் ஆர்வத்துடன் பையைத் திறந்து பொருள்களை வரிசையாக அடுக்குவதை ஊஞ்சலில் அமர்ந்த வண்ணம் சுவாரசியமில்லாமல் பார்த்தாள்.

"அம்மா, எல்லாமே வெளிநாட்டுப் பொருள். உற்பத்தி செய்ய லைசென்ஸ் பெற்று இங்கேயே தயாரிக்கறாங்க. விலை அதிகமா இருந்தாலும் நல்ல தரமானவை" என்றான்.

"சரி, இதை வித்தா உனக்கு என்ன கிடைக்கும்?"

"எனக்குப் பதினைஞ்சு சதவிகிதம் கமிஷன் கொடுக்கறாங்க" என்று சொல்லிக் கொண்டே ரூம் பிரெஷ்னர் ஸாம்பிள் பாக்கை எடுத்து 'விஸ்' என்று அடித்தான். கம்மென்று மணம் பரவியது.

"என்ன விலை?" என்று கேட்டாள் ஹேமா.

"நூற்று நாற்பது ரூபாய்ம்மா" என்றபடியே தரை துடைக்கும் சோப் மற்றும் டிஷ்வாஷர் பவுடர் என்று எல்லாவற்றையும் விளக்கியும், செய்தும் காட்டினான்.

ஹேமாவுக்கு 'வாங்கிப் பார்க்கலாமே' என்ற எண்ணம் இருந்தாலும் மாதாந்திர பட்ஜெட் இடிக்குமே என்று தோன்றியது.

"சரி முருகா, தேவைப்பட்டா முத்தம்மாகிட்டே சொல்லி அனுப்பறேன்."

"சரிம்மா. உங்களுக்குன்னா விலை கூட குறைச்சுக்கறேன். நமக்குத் தெரிஞ்சவங்களுக்கு டிஸ்கௌன்ட் கொடுக்காட்டி எப்படி?" என்று சொல்லியபடியே "இந்தாங்கம்மா இந்த விக்விட் சோப், வெள்ளிப் பாத்திரங்கள் கண்ணாடிப் பாத்திரங்கள் துலக்கப் பயன்படுத்தலாம். சாம்பிள்தான். நீங்கள் உங்க உபயோகத்துக்கு வைச்சுக்குங்க" என்று கிளம்பிச் சென்றான்.

"பாவம். வெயிலில் இவ்வளவு தூரம் வந்திருக்கிறான். ஏதாவது ஒரு பொருளாவது வாங்கியிருக்கலாமோ" என்று நினைத்துக்கொண்ட ஹேமா டி.வி.யில் மூழ்கி விட்டாள்.

சிறிது நேரத்துக்குப் பின் ஃபோன் அடித்தது.

"ஹலோ."

"ஹேமா, நான்தான் மாதவ் பேசறேன்"

"அந்த இரண்டு பேரும் மெகா சீரியல் நடிகைங்கன்னு எப்படிச் சொல்றே?"

"Tears"னு சொல்லி விட்டு ஜூஸ் குடிக்கிறாங்களே"

— சாயம் வெ. ராஜாராமன்

என்றார் ஹேமாவின் கணவர்.

"என்ன?"

"என்ன பண்ணிட்டு இருக்கே?"

"சும்மாத்தான் இருக்கேன்" என்றாள்.

"ஒண்ணுமில்லை. எங்க ஆபீஸுக்கு எங்க ஜி.எம். ஒய்ப் மிஸஸ் ராகவ் வந்திருக்காங்க. உன்னைப் பார்க்கணுமாம். அடையாறு பக்கம்தான் வரப் போறாங்களாம். நீ வீட்டில் இருப்பியான்னு கேட்கச் சொன்னாங்க."


"என்ன விஷயமாம்?"

"தெரியலை. ஏதாவது கிளப், அஸோஸியேஷன் எதிலேயாவது மெம்பர் ஆகச் சொல்வாங்களோ என்னமோ. இன்னும் ஒரு மணி நேரத்தில் ஷாப்பிங்கை முடிச்சுட்டு நம்ப வீட்டுக்கு வருவாங்க. அழகா டிரெஸ் பண்ணிக்க; வீட்டையும் நீட்டா வைச்சுக்க. காப்பி டிபன் பண்ணிக் கொடு. மொத்தத்துல பிரியமா நடந்துக்க" என்று சொல்லி ஃபோனை வைத்து விட்டார்.

ஹேமாவுக்குக் கையும் காலும் பரபரத்தது. ஜிஎம் ராகவ்தான், மாதவ்வுக்கு

டைரக்ட் பாஸ். எதுக்காக வர்றாங்களோ? ஒருவேளை பார்ட்டி, வீட்டிலே விசேஷம்னு ஏதாவது இருக்குமோ? லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப்பில் சேரச் சொல்வாங்களோ? ஏதாவது ஸோஷியல் ஸர்வீஸுக்குக் கூப்பிடுவாங்களோ? என்னென்னவோ கற்பனை ஓடியது.

ஸோபாவைத் தட்டி, கார்ப்பெட்டை விரித்து (பெரிய விருந்தாளிகள் வந்தால் மட்டுமே விரிப்பாள்) பிளவர்வாஸைத் துடைத்து, பூக்களை அடுக்கினாள். ஒரு மாதிரி வரவேற்பறையைச் சரிசெய்தபின் டிபனைப் பற்றி யோசிக்கலானாள்.



'பஜ்ஜி போடலாம்' என்று அதற்குத் தேவையானதை ஏற்பாடு செய்தாள்.

"முத்தம்மா, இங்கே வா. கிருஷ்ணா ஸ்வீட்ஸிலிருந்து அரை கிலோ மைசூர்பா வாங்கி வா" என்று பணத்தைக் கொடுத்தனுப்பினாள். இரண்டு ஏடு பஜ்ஜி போட்டு முடிக்கவும், மைசூர்பா வரவும் சரியாக இருந்தது.

புடைவையை மாற்றிக் கொண்டு இலேசாக பவுடர் ஒற்றி பளிச்சென்று தயாரானாள்.

வாசலில் கார் சப்தம் கேட்க, ஓடிச் சென்று கதவைத் திறந்தாள். மிஸஸ் ராகவ், சிரித்துக் கொண்டே இறங்கி உள்ளே நுழைந்தாள்.

கையைப் பற்றி குசலம் விசாரித்த வண்ணம் அழைத்துச் சென்று ஸோபாவில் அமரச் செய்தாள் ஹேமா. மண்டைக்குள் 'என்ன விஷயமோ?' என்று அரித்தது.

சாதாரண மேக்கப்புடன் சிம்பிளாக இருந்த மிஸஸ் ராகவ், ஸ்வாதீனமாக அமர்ந்து தோழமையுடன் பேசிக் கொண்டே, அவள் கொடுத்த டிபனை விரும்பிச் சாப்பிட்டாள். வீட்டை வைத்திருக்கும் நேர்த்தியை வெகுவாகப் புகழ்ந்தாள்.

"என்ன மிஸஸ் மாதவ், நீங்கள் என்ன ப்ளோர்வாஷ், டிஷ் வாஷ் உபயோகிக்கிறீங்க?" என்று கேட்டவண்ணம் டிரைவரை அழைத்து, பையை எடுத்து வரச் சொன்னாள்.

டிரைவர் கொண்டு வந்த பையைப் பார்த்ததும் ஹேமாவுக்கு இலேசாகப் புரிவது போலிருந்தது. அது காலையில் முருகன் கொண்டு வந்த பையை ஒத்திருந்தது.

"ஒன்றுமில்லை மிஸஸ் மாதவ். வீட்டில் ரொம்ப போரடிக்கிறது. சார், காலையில் எட்டு மணிக்குப் போனால் இரவு வர, பத்து மணி ஆகிவிடுகிறது. குழந்தைகளும் கல்லூரிக்குப் போய் விடுகிறார்கள். பொழுதை வீணாக கழிக்க இஷ்டமில்லை. இந்த பிராடக்ட்ஸை, தெரிஞ்சவங்களுக்கு அறிமுகப்படுத்தலாமேன்னு இந்தத் திட்டத்தில் சேர்ந்திருக்கேன். இதெல்லாம் வெளிநாட்டு பொருள்கள். இந்த டிஷ் வாஷரை யூஸ் பண்ணினா கைக்கு ஒன்றுமே ஆகாது. இது ரூம் பிரஷ்னர். இது ப்ளோர் வாஷ்" என்று காலையில் முருகன் காண்பித்த பொருள்களை அடுக்கினாள்.

'ஓ!' 'அப்படியா?' 'நன்றாக இருக்குமா?' 'ஓகே' என்ற வார்த்தைகளைத் தவிர ஹேமாவால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. வரிசையாக ஏழு எட்டு பொருட்களை எடுத்து வைத்தாள். "இதைப் பாருங்க, இதை ஒரு தரம் உபயோகிச்சிட்டீங்கன்னா வேற பொருளே வாங்க மாட்டீங்க. உங்களுக்கு ஏதாவது தேவைப்பட்டா, மிஸ்டர் மாதவிடம் சொல்லி அனுப்புங்க" என்றபடி ஒரு தாளில் வரிசையாக சாமான்களை எழுதி விலையைப் போட்டு "1380 ரூபாய் ஆச்சு! மிஸ்டர் மாதவிடம் வாங்கிக் கொள்கிறேன்" என்றபடி கிளம்பினாள்.

வாசல் வரை சென்று கைகுலுக்கி அனுப்பும்போது "இதுமாதிரி எத்தனை பிரண்ட்ஸ்களைச் சந்திக்க முடிகிறது தெரியுமா?" என்று கூறி கையசைத்து காரில் ஏறி விடை பெற்றாள்.

உள்ளே நுழைந்தவள் டம்ளர், ஸ்பூன் டிபன் பிளேட், கப் முதலியவற்றைக் கழுவி வைக்க சோப்பை எடுத்தாள். காலையில் முருகன் கொடுத்தது. மனம் வலித்தது ஹேமாவுக்கு! ○

"ஆக, நீங்களும் டீ.வி. சீரியலில் நடிக்க வந்துவிட்டீர்களா?" என்று கௌதமியிடம் கேட்டதுதான் தாமதம். படபடவென்று பொரிந்து தள்ளிவிட்டார்.

"என்ன நீங்களுமா என்று கேட்டு விட்டீர்கள்? கடந்த இரண்டு வருடங்களாக என்னை டீ.வி. சீரியல்களில் நடிக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் நான்தான் சொந்த வாழ்க்கையில் சில பிரச்னைகள் காரணமாக, ஒப்புக் கொள்ளவில்லை. நடித்தால் நல்ல கேரக்டரில் நடிக்க வேண்டும். இல்லை என்றால் நடிக்கவே வேண்டாம் என்று தீர்மானமாக இருந்த சமயத்தில், சினி டைம் நிறுவனத்துக்காக, ராஜூ ஈஸ்வரன் என்னிடம் சொன்ன கதைதான் இந்திரா. கேரக்டர் ரொம்பப் பிடித்தது. அருமையான ஸ்கிரிப்ட். உடனே ஓ.கே. சொல்லி விட்டேன்."

"அப்படி என்ன கேரக்டர் 'இந்திரா' தொடரில் உங்களுக்கு?"

"பெண் தொழிலதிபர் கேரக்டர். அயல்நாட்டில் படித்த, திறமைசாலி பெண் இந்திரா. அவளுக்குச் சொந்த வாழ்க்கையிலும், தொழிலிலும் பல விதமான சவால்கள். அதுதான் கதை. நான் டைரக்டர் ராஜூ ஈஸ்வரனிடம், 'நான் நடிக்கவில்லை' என்றால், வேறு யாரை 'நடிக்க வைப்பீர்கள்?' என்று கேட்டபோது, 'அந்த கேரக்டருக்கு உங்களைத் தவிர வேறு யாரையும் என்னால் கற்பனை செய்து பார்க்க முடியவில்லை' என்றார். அது மட்டுமில்லாமல், தொடக்கம் முதல் கிளைமாக்ஸ் வரை கதையை முழுசாகத் தீர்மானித்து ஸ்கிரிப்ட் எழுதி வைத்திருந்தார். அவரது ஸ்கிரிப்ட்மீது உள்ள, அவர் திறமை மீதுள்ள நம்பிக்கைதான் என்னை 'இந்திரா' தொடரில் நடிக்க வைத்தது. நிச்சயமாக, நீங்கள் இப்போது டீ.வி.யில் பார்க்கிற எல்லா சீரியல்களிலிருந்தும் மாறுபட்ட ஒன்றாக 'இந்திரா' இருக்கும். சினிமாவிலும் நான் நடிப்பேன்.

"திடீரென்று திருமணம் செய்து கொண்டு, சினிமாவை விட்டு விலகிப் போனது ஏன்? இப்போது மறுபிரவேசத்துக்கு என்ன காரணம்?"

"சினிமாவில் அறிமுகமாகி, ஏழெட்டு வருஷம் பிஸியாகத்தான் இருந்தேன். அதன் பின் திருமணம், குடும்ப வாழ்க்கை.



இப்போது என் குழந்தை சுப்புலட்சுமிக்கு இரண்டு வயதாகிறது. மறுபடியும் நடிப்பைத் தொடர நினைக்கிறேன். நான் திருமணம் செய்து கொள்ள முடிவு எடுத்த

இன்னமும் பி.ஜே.பி தான்!



போது, 'இனி சினிமாவில் நடிக்க மாட்டேன்' என்றெல்லாம் அறிக்கைவிடவில்லை. அதுபோலவே, இப்போதும் அறிக்கை அவசியமில்லை என்றே நினைக்கிறேன்.

''திருமணமாகி கணவருடன் நியூயார்க்கில் செட்டில் ஆனீர்கள் அல்லவா...?''

''நியூயார்க் சென்றபோது, 'அட! இப்படி அற்புதமான ஒரு ஊரா?' என்று ஆச்சரியமாக இருந்தது. சந்தோஷமாக குடும்பம் நடத்தினேன். பெண் குழந்தை பிறந்தது. ஆனால் எதிர்பாராதவிதமாக, என் அம்மாவுக்கு சிறுநீரகப் பிரச்னை ஏற்பட்டது. சிறுநீரக மாற்று சிகிச்சை நடந்தது. டெல்லியிலும் சென்னையிலும் சிகிச்சை அளிக்கப்பட்டும் பலனில்லாமல், என் தாயார் இறந்துவிட்டார். அவரது மறைவு என்னை மனோரீதியாய் மிகவும் பாதித்துவிட்டது. அதற்குள், என் கணவரும், நியூயார்க்கிலிருந்து, லண்டனுக்கு இடம் பெயர்ந்தார். நானும், நடிக்க முடிவு செய்து இங்கு வந்திருக்கிறேன்.''

''குடும்பத்தில் பிரச்னை ஒன்றுமில்லையே?''

''இல்லை. அம்மாவின் உடல்நிலை, குழந்தையை இந்தியச் சூழ்நிலையில், நான்கைந்து வயது வரையிலாவது வளர வேண்டும் என நாங்கள் நினைத்தது. இவைதான் என்னை இந்தியா வரவழைத்தன. 'திறமையான, புகழ் பெற்ற நடிகையான நீ, அந்தத் திறமையை வீணாக்கக்கூடாது' என்று என் கணவர் அடிக்கடி சொல்லுவார். இவை எல்லாம்தான் நான் இந்தியா திரும்பக் காரணம். என் கணவரும் இந்தியா வந்து செல்வார். நானும் இங்கேயும் லண்டனிலுமாக இருப்பேன்.''

''பா.ஜ.க.வில் சேர்ந்தீர்கள். இளைஞர் அணியில் உங்களுக்குப் பதவி கூடத் தரப்பட்டது. தேர்தலில் பிரசாரம் செய்தீர்கள். அப்புறம் ஏன் கட்சியிலிருந்து விலகிவிட்டீர்கள்?''

''நான் பா.ஜ.கட்சியிலிருந்து விலகவில்லை. அன்று நாடு இருந்த சூழ்நிலையில், மக்களை வழி நடத்திச் செல்ல, சிறந்த தலைவர்கள் கொண்ட கட்சி என்ற முறையில் பி.ஜே.பி.யில் சேர்ந்தேன். தேர்தலில் பிரசாரம் செய்தேன்.

அதன்பின், அரசியலில் தீவிரமாக ஈடுபட அவசியம் ஏற்படவில்லை. குடும்ப விஷயங்களில் கவனம் செலுத்தினேன். மறுபடியும் அவசியம் ஏற்படுகிறபோது, அரசியலில் தீவிரமாக ஈடுபடுவேன். நான் இன்னமும் பி.ஜே.பி. தான்.''

— சந்திரமௌலி

படங்கள் : யோகா

தாத்தாவுக்கும் பிடிச்ச மாதிரி!



'**சா**ம்ராட் அசோகா' படத்தின் காஸ்ட்யூம் டிசைனராகப் பணியாற்றியிருக்கும் அனு வர்தன், கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் - வேம்பு தம்பதியின், மகள் வழி பேத்தி. படம் கிளப்பிவிட்ட பரபரப்பான வெற்றியில் மிகவும் உற்சாகமாகப் பேசினார்.

"லயோலா கல்லூரியில் விஷுவல் கம்யூனிகேஷன் படிச்சபோதே, காஸ்ட்யூம் டிசைன் செய்யற வாய்ப்புகள் வந்தன. சந்தோஷ் சிவன் இயக்கிய 'டெரரிஸ்ட்', 'மல்லி' படங்களில் உடை வடிவமைப்பு செய்தேன். என்னுடைய வேலை மிகவும் பிடித்துப் போகவே, அவருடைய விளம்பரப் படத்திலே எனக்கு வாய்ப்பு கொடுத்தார்." என்றார் அனு வர்தன் நன்றியுடன்.

'அசோகா' சரித்திரப் படமென்பதால் நிறைய படிக்க வேண்டியிருந்ததாம்.

"ஏன்ஷியன்ட் காஸ்ட்யூம்ஸ் ஆஃப் இந்தியா', 'டிரடிஷனல் ஜுவல்லரி ஆஃப் இந்தியா' போன்ற புத்தகங்கள் உதவியாக இருந்தன. வரலாற்றுச் சம்பவங்கள் மட்டுமில்லாது, 2500 வருஷங்களுக்கு முன் இருந்த ஆடை சம்பந்தமாகச் சொல்லப்பட்ட தகவல்களைத் தேடி படித்தேன். அந்தக் காலத்தில் தாவரங்களை அடிப்படையாகக் கொண்டு உடைகள் தயாரிக்கப்பட்டன என்ற தகவல் உறுதியாகத் தெரிந்தது. அதை அடிப்படையாகக் கொண்டு காஸ்ட்யூம் டிசைன் செய்தேன்." என்றார் அனு வர்தன்.

மத்திய பிரதேசத்தில் மகேஸ்வரி அரண்மனையில் படப்பிடிப்பு நடந்தபோது, அவசரமாக அறுநூறு பேருக்கு ஆடைகள் தேவைப்பட்டனவாம். உடனே மில்லுக்கே போய், பேல் கணக்கில் துணி வாங்கி, மறுநாள் மத்தியானத்துக்குள் அனைவருக்கும் ஆடைகள் தயார் செய்திருக்கிறார்கள்.


"இந்தப் படம் முடிவடையும்வரை, ஏதோ மகத நாட்டில், கலிங்கப் போர் சமயத்தில் வாழ்ந்த உணர்வே மேலோங்கியிருந்தது. அந்த அளவுக்கு எங்கள் டீமே படத்தோடு ஒன்றிவிட்டது." என்கிறார் அனு.

சந்தோஷ் சிவனிடம் அசோசியேட்டாகப் பணிபுரியும் விஷ்ணு வர்தனைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார் அனு.

"கலைவாணர் விரும்பிய சமுதாய சீர்திருத்த திருமணத்தை, பேத்தியாகிய நானே கடைபிடிக்கலைன்னா எப்படி?" என்கிறார் சிரித்துக் கொண்டே.

- க. அனந்தபத்மநாபன்

பசுவதை ஒரு பாவம் எனவே அதை கைவிட்டுத் தீரவேண்டும்!



ஸ்ரீ கோசாலா ஸேவா டிரஸ்ட்

SHRI GHOSALA SEVA TRUST (Regd)

(பசுக்கள் பாதுகாப்பு இல்லம்)

68, நடுத் தெரு, மைலாப்பூர், சென்னை - 600 004.
Tel: 4959302 Fax: 4616311 E-Mail:sivasiva@vsnl.net

குடும்ப நலனுக்காக பசுக்களை பாதுகாத்து, பராமரிக்க எங்களுடன் இணைந்து சேவைசெய்ய உங்களையும் அன்புடன் அழைக்கிறோம்!

ஆன்மீக அன்பர்களுக்கு வணக்கம்! தங்களுக்கு கோமாதாவின் பேரருள் கிடைக்க ஸ்ரீ பசுபதீஸ்வரர் அருள்புரியட்டும்.

இந்துக்களின் அனைத்து தெய்வங்களும் உள்ளடங்கிய "கோ" என்பது கோமாதாவாகிய "பசு" ஆகும். அது தாயைப் போன்றது. பிறந்த குழந்தைக்கு தாய்ப்பால் எவ்வளவு அவசியமோ அதற்கு நிகரான பசுவின் பால் குழந்தைப் பாதுகாப்புக்கு மிக அவசியமாகும். இத்தகைய புனிதமான காமதேனுவை - கோமாதாவை பசுத்தாயை பராமரிப்பதும், பாதுகாப்பதும், பூஜைசெய்து வழிபடுவதும் ஒவ்வொரு இந்துவின் கடமையாகும். மேலும் பசுக்களை காப்பாற்றுவதே உண்மையான லட்சுமி பூஜை என்ற நல்லுணர்வுடனும், சமுதாய சிந்தனையுடனும் சென்னை திருவேற்காடு அருள்மிகு கருமாரியம்மன் திருக்கோவில் அருகில் "ஸ்ரீ கோசாலா ஸேவா டிரஸ்ட்" மூலம் பசுமடம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளோம். பசுக்களின் துன்பங்களைத் தனதுபோல் உணர்ந்து அவற்றைப் போக்கவும், மத்திய, மாநில அரசின் பசு வதை சட்டத்தை மதித்தும், குடும்பநலன் கருதியும் நமக்குப் பலவழிகளில் நன்மைதரும் பசுக்களை வாங்கி நமது பசுமடத்திற்கு அனுப்பிப் பாதுகாக்க, பராமரித்து பூஜை செய்து வழிபட, கொடுப்பதன் மூலம் தங்களுக்கு கோமாதாவின் அருளைப்பெற இது ஒரு நல்ல வாய்ப்பாகும்.

வாழ்வில் உயர்வுபெற கோதானம் செய்யுங்கள்!

நீங்கள் தானம் செய்யும் பசுவுக்கும், கன்றுக்கும் வைதீக முறைப்படி புரோகிதர்களை வைத்து நித்தம் பூஜார்த்திகள் உங்கள் பெயரில் நடத்தி வைக்கப்படுகிறது. மேலும் பசுத்தொழுவத்தில் கோமாதாக்களுக்கு நவீன விஞ்ஞான முறைப்படி பராமரிப்புகள், மின்விசிறிகள், வேதபாராயண ஸ்லோகங்கள், கர்னாடக தெய்வீகப்பாடல்கள் தொடர்ந்து ஒலிக்க ஒலிநாடாக்கள் இயக்கி வைக்கப்படுகிறது. இத்தகைய பராமரிப்புகள், வழிபாடுகள் அமைந்துள்ள கோசாலாவிற்கு கோதானம் செய்து கோமாதாவின் தெய்வீக அருளைப்பெற அன்புடன் அழைக்கிறோம். பசுவை பராமரித்து, பாதுகாத்து பூஜிக்கவும், பசுக்களின் தினப்படி ஆகாரங்களுக்கும், தீவனங்களுக்கும் தினம், வாரம், மாதம், வருடம் என முறைப்படியாகும் செலவுகளுக்கு உதவியளித்து கோமாதாவின் அருளைப்பெறுவதுடன் வாழ்வில் உயர்வும் பெற்றிடலாம்.

தீவனம் அனுப்புவோர் TVS/ABT மூலமாக மைலாப்பூர், சென்னை - 4 க்கு அனுப்பி வைத்து எங்களுக்குத் தெரிவித்தால் நாங்கள் உடனே Delivery எடுத்துக் கொள்வோம்.

பசுத்தாயின் - (கோமாதாவின்) பலன்களும், மகிமைகளும்:

பசுத்தாயின் உடலில் மும்மூர்த்திகளும், 33 கோடி தேவர்களும், அனைத்துப் புண்ணிய தீர்த்தங்களும் குடிகொண்டுள்ளன. பசுவை வலம் வந்தால் எல்லா தெய்வங்களை வணங்கிய பலனும், எல்லாப் புண்ணிய நதிகளில் நீராடிய பலனும் தங்களுக்குக் கிடைக்கும் என்று வேதசாஸ்திரங்கள் சொல்கின்றன. பசுச்செல்வத்தின் உடல் புண்ணியத்தின் விளைநிலம். இறந்த நமது முன்னோர்களுக்கு உணவு அளிக்க விரும்பினால், பசுவிற்கு கொடுத்தால் போதும். அது நமது முன்னோர்களுக்குப் போய்விடும். பசுவின் சாணம் கிருமிநாசினியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பஞ்சகவ்யம் எனப்படும் பால், தயிர், நெய், கோமியம், சாணம் இவைகளில் இருந்து தயாரிக்கப்படும் மருந்து தீராத வியாதியாகிய கேன்ஸரைக் குணப்படுத்துகிறது. எப்படி நீதிகப்படி பார்த்தாலும், விஞ்ஞானப்படி பார்த்தாலும் பல வழிகளில் நமக்கு நன்மை தரக்கூடிய பசுத்தாயைப் பாதுகாத்து வணங்க வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும்." இறைவனுக்கு அபிஷேகமாகும் பாலையும், இறைவனின் திருமேனியை அலங்கரிக்கும் விபூதியையும், வேள்விகளுக்கான வரட்டியையும், நெய்யையும், பறை, பேரிகை முழங்க தன் தோலையும் வழங்குவது கோமாதாதான் என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள்.

பசுவைப் பாதுகாத்து பராமரிக்க தாங்கள் அளிக்கும் நன்கொடை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ★ ரூ.500/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் ஒரு ஆண்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ரூ.1000/- அனுப்பும் ஆன்மீக அன்பர்களுக்கு, 'ஆன்மீகம்' மாத இதழ் இரண்டு ஆண்டுகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- ★ ஒரு பசுவை பராமரிக்க ஆண்டிற்கு ரூ.5400/- தேவைப்படுகிறது. இந்த நன்கொடையை வழங்கும் ஆன்மீக அன்பர்கள் சார்பாக ஒரு பசுவை ஒரு ஆண்டிற்கு பராமரிப்பதுடன், தங்களை "Ghomadha Seva Scheme" "பசு சேவை திட்டம்" என்ற புனித அமைப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதுடன் "ஆன்மீகம்" மாத இதழ் 10 ஆண்டுகளுக்கு தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

தாங்கள் நினைத்த எண்ணங்கள் செயல்கள் நிறைவேற "கோ பூஜை" அவசியம்!

ஆன்மீக அன்பர்கள் தங்களுடைய திருமண நாள், பிறந்த நாள், பிள்ளைகளின் பிறந்த நாள், பண்டிகை நாட்கள், விசேஷ நாட்கள், முன்னோர்கள் திதி நாட்கள் என தங்களுக்கு உகந்த நாட்களில் பசுவை தானமாகத் தரலாம். மேலும் இதுபோன்ற முக்கிய நாட்களில் தாங்கள் "கோ பூஜை" செய்ய விரும்பினால் அந்த நாட்களில் நமது "ஸ்ரீ கோசாலா ஸேவா டிரஸ்ட்" என்ற அமைப்பின் மூலம் சென்னை திருவேற்காட்டில் நிர்வகிக்கப்படும் "பசுமடத்திற்கு" குடும்பத்துடன் நேரில் வரலாம். "கோமாதாவிற்கு" பூஜைசெய்து வழிபடுவதன் மூலம், குலவளர்ச்சி, செல்வச்செழிப்பு, தேக ஆரோக்கியம் போன்ற அனைத்து சௌபாக்கியங்களையும் கோமாதாவின் பேரருளையும் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இறைச்சிக்காக பசு கொல்லப்படுவதை தடுக்கவும், குடும்பநலனுக்காக பசுக்களை காக்கவும், கோபூஜை செய்யவும், ஆன்மீக அன்பர்கள் பசுவைத் தானமாக கொடுக்கலாம் அல்லது பசுக்களை பாதுகாத்து பராமரிக்க தங்களால் இயன்ற அளவு நன்கொடையை Cheque/D.D/M.O மூலமாக Shri Ghosala Seva Trust, Chennai - 4 என்ற பெயருக்கு மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி உதவுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

பசு பாதுகாப்பு, உலகத்திற்கு இந்துமதம் அளித்துள்ள அருமையான பரிசாகும்!

சரவணன் ஆவலை அடக்க முடியாமல் கேட்டான்.

"வேலு என்னா பண்ணான்? சிலையைத் தூக்கிட்டு ஓடிட்டானா?"

கிழவி சரவணனை முறைத்தாள்,



"அதாஞ் சொல்லிக்கிட்டே வாரேன்ல! அதுக்குள்ள என்னா முந்திரிக்கொட்டை மாதிரி அவசரம்? பேசாமக் கேளு!"

"சரி...சரி.. சொல்லு."

"........வேலு நல்லவனாத்தான் இருந்தான். இருந்தாலும் ஆசைன்னு ஒண்ணு இருக்கே! மனுசனை அதுதானே போட்டு அலைக்கழிக்குது. எத்தனை நாளைக்குத்தான் அடிமை வேலை பாக்குறது.... அப்படின்னு நினைச்சுட்டான் போலிருக்கு.... சரியான நேரம் பாத்துச் சிலையோட ஊரைவிட்டு ஓடிரணும்னு நினைச்சிட்டான் வேலு. தன்னோட எண்ணத்தை தங்கச்சிகிட்ட ஒரு நாளு சொல்லியிருக்கான்.

ஆனா பூவரசிக்கு அதுல சம்மதமில்லை. ஆதரவில்லாம ஓடி வந்த நம்மளை அடைக்கலங் குடுத்து வச்சிருக்கிற மனுசனுக்குத் துரோகம் பண்றது தப்புன்னு அவ அண்ணங்கிட்ட வாதாடியிருக்கா. ஆனா அவன் கேக்கலை.

பூவரசியோட நிலைமை ரொம்பக் கஷ்டமாப் போச்சு.... தன்னோட ஒரே உறவான அண்ணன் ஒரு பக்கம். என் மாமனாரு ஒரு பக்கம். அவரோட பூவரசிக்குண்டான உறவு இப்ப ரொம்ப நெருக்கமாகிப் போச்சு. அவரை மனசளவுல அவ



புருசனாவே ஏத்துக்கிட்டா.... வெளியில சொல்லிக்கலையே தவிர அவருக்கு நல்ல பொண்டாட்டியாத்தான் அவ நடந்துக் கிட்டு இருந்திருக்கா.

இதுக்கு நடுவுல வேலு அப்பப்ப ஒரு நா, ரெண்டு நான்னு ஆளு காணாமப் போயிற் றதும், வர்றதுமா இருந்தான். ஒரு தரம் சந்தேகப்பட்டு பெரியவரு கேட் டதுக்கு 'மேலுக்குச் சரியில்லை. தீர்த்தக் கரை வைத்தியர்கிட்ட அப்பப்ப போயி மருந்து வாங்கிச் சாப்பிட்டுட்டு வர்றேன்' அப்படின்னு சொல்லி சமாளிச்சிருக்கான்.

வேலு அந்த மாதிரி பொய் சொல்லிட்டு வெளியூரு போயி ஊரை விட்டுக் கிளம்பிப் போறதுக்கான ஏற்பாடுகளை செஞ்சுக்கிட்டு இருந்திருக்கான். பெரியவருக்குத் தெரியாம தப்பிச்சுப் போறது அம்புட்டு இலேசான காரியம் கிடையாது. அந்தக் காலத்துல பஸ்ஸா! காரா? ஒண்ணும் கிடையாதே.... வேலு என்ன பண்ணிருக்கான்! கொஞ்சம் தள்ளியிருக்கற ஊர்ல போய் கிளம்பிப் போறதுக்கு வண்டி மாடு, சாமாஞ் சட்டெல்லாம் ஒரு ஆளு மூலியமா தயார் பண்ணி வச்சிட்டான். இங்கேருந்து நடுச் சாமம் கௌம்புனா விடியறதுக்குள்ள அந்த ஊருக்குப் போயிரலாம். அங்க போயி தயாரா வச்சிருக்கற வண்டியில ஏறி கிளம்பிரலாம். விவரந் தெரிஞ்சு பெரியவரு தேட ஆரம்பிக்கிறதுக்குள்ள நல்ல தொலைவுக்குப் போயிரலாம்னு வேலுவோட திட்டம்.

பூவரசிகிட்ட இதை அவன் முதல்லியே சொல்லலை. சொன்னா எங்கே அவ காரியத்தைக் கெடுத் திடுவாளோன்னு அவனுக்கு ஒரு சந் தேகம். என்ன பண்ணுனான்னா, ஒரு

பாஸ்கர் சக்தி

நாள் காலையில தங்கச்சியைக் கூப்பிட் டான்.

"இன்னிக்கு ராத்திரி நம்ம ரெண்டு பேரும் இந்த ஊரைவிட்டுப் போறோம்... தயாராயிரு" அப்படின்னு சொன்னான். பூவரசி பதறிட்டா... அண்ணன் எண்ணம் அவளுக்குத் தெரிஞ்சு இருந்தாலும் இவ் வளவு சீக்கிரமா, இம்புட்டு மாறுவான்னு அவ எதிர்பார்க்கலை. அவ என்ன பண்ணுவா? அவங்கிட்ட கெஞ்சினா. இந்த ஊரை விட்டு எங்கேயும் போக தனக்கு மனசில்லைன்னு சொல்லி அழுதா.

வேலு அதைக் காதிலேயே வாங்கிக் கிரலை. சிலையைக் கொண்டுட்டு ரொம்பத்




தொலைவு போயி அதை நல்ல விலைக்கு வித்துட்டு வசதியா வாழலாம்னு அவன் சொன்னான். "எத் தனை நாளைக்கி நாம ஒருத்தர்கிட்ட அடிமை வேலை செய்யிறது?" அப்படின் னான்.

ரெண்டு பேரும் மாத்தி மாத்திப் பேசி சண்டை போட்டதுதான் மிச்சம். அவன் கடைசில எச்சரிக்கையா சொல்லிட்டான். "இன்னிக்கி ராத்திரி நாம போயே

ஆகணும்னுட்டான். இப்படிச் சொல்லிட்டு வேலு வெளியில போயிட்டான். இவ தனியா வீட்டுல அழுதுக்கிட்டே படுத்துக் கிடந்தா. என்ன பண்றதுன்னே புரியாம குழப்பத்துல கெடந்தா. கடைசியா ஒரு முடிவு பண்ணுனா? எழுந்து கண்ணைத் துடைச்சிக்கிட்டு பெரியவரு இருக்கற எடத்தைத் தேடிப் போனா.

போயி அவருகிட்ட காலில விழுந்து அழுது தன்னோட அண்ணன் மனசுல இருக்கறதைச் சொன்னா.

உண்மையைச் சொல்றதுக்கு முன்னால எக்காரணத்தைக் கொண்டும் தன்னோட அண்ணனுக்கு எந்தக் கெடுதலும் பண்ணக் கூடாதுன்னு பெரியவர்கிட்ட வாக்குறுதி



''திரைக்கதை ஸ்கிரிப்டைத் தொட்டில்லே போட்டு ஆட்டுறாங்களே... எதுக்கு?''
''படத்துக்குப் பேர் வைக்கப் போறாங்களாம்!''
- தஞ்சை தாமு

கேட்டா... அவரும் சரின்னு ஒத்துக்கிட்டாரு. அதுக்கப்புறந்தான் அவ எல்லாத்தையும் அவருகிட்ட சொன்னா.

அமைதியா எல்லாத்தையும் கேட்டுக்கிட்டாரு பெரியவரு... சரி நீ போ நான் பாத்துக்கிறேன்னு சொன்னாரு.

அன்னிக்கு ராத்திரி வேலு கிளம்பிப் போறதுக்குத் தயாராயிட்டான். புதைச்சு வச்சிருந்த சிலையை எடுக்க வேண்டி அவன் தோண்ட ஆரம்பிக்கிற சமயத்தில பெரியவரு அங்கே போனாரு.

வேலு அதிர்ச்சி அடைஞ்சிட்டான். பெரியவரு கோபமா "அனாதையா வந்தவனுக்கு அடைக்கலம் குடுத்ததுக்கு இது தான் நீ காட்டற நன்றியா?" அப்படின்னு கேட்டாரு.

அதுக்கு வேலு "நான் என்ன உங்க வீட்டு சொத்தை ஏதும் கொள்ளை அடிச்சனா? நான் கண்டெடுத்த இந்தச் சிலையைக் கொண்டுட்டுப் போயி நான் பிழைச்சுக்கிறதில என்ன தப்பு? என்னைப் போக விடுங்க"ன்னு சண்டை போட்டிருக்கான். அவன் பேச, பெரியவரு பேச பெரிய சண்டையாயிடுச்சு. பூவரசியால இதைத் தடுக்க முடியலை. கடைசியா பெரியவரு மறைச்சு வச்சிருந்த சூரக்கத்தியை எடுத்து வேலுவைக் குத்திட்டாரு.

பூவரசி அதிர்ந்து போயி சிலையா நின்னுட்டா.... பெரியவரு இப்படிப் பண்ணுவாருன்னு அவ நினைக்கலை. வேலு அங்கேயே விழுந்து செத்துட்டான். ஆளுகளை வச்சு அடுத்த நாளே அவனைப் புதைச்சிட்டாரு பெரியவரு. அப்பல்லாம் போலீசு, கோர்ட்டு கிடையாது. பெரியவர் வச்சதுதான் சட்டம்.

அண்ணன் செத்ததில இருந்து பூவரசி ஒரு வார்த்தை பேசலை. கண்ணீர் விட்டுக்கிட்டு சிலையா உக்காந்திருந்தா. ஒரு வாய் தண்ணி கூட குடிக்கலை.

பெரியவர்கிட்ட தான் இவ்வளவு விசுவாசமா இருந்தோமே... அவருக்குப் பொண்டாட்டியா இருந்தது மட்டுமில்லாம அண்ணனையே அவருகிட்ட காட்டிக் குடுத்தோமே. அவனை ஒண்ணும் பண்ண வேணாம்னு கெஞ்சி, வாக்குக் குடுத்த பிறகும் அவரு கத்தியை எடுத்திட்டு வந்திருக்காருன்னா... அந்த துரோகத்தைப் பூவரசியால ஏத்துக்கிட முடியலை. எண்ணி எண்ணி மருகிப் போனா. கூடப்பிறந்தவன். சொந்தம்னு சொல்லிக்கிற இருந்த ஒரே ஜீவன். அவன் தன் கண்ணு முன்னால கொலையானது. அவன் சாகுறதுக்கு தானே காரணமா இருந்தது. தன்னைப் பெண்டா வச்சிருந்தவனே அவனைக் கொன்னது... இதையெல்லாம் எண்ணி எண்ணி அவ இதயம் கொதிச்சது. வேலு செத்த பிறகு நாலு நாளாச்சு, அஞ்சு நாளாச்சு. பூவரசி அந்தக் குடிசை வீட்டுல அப்படியே கல்லா உக்காந்திருந்தா. கண்ணீர் விட்டபடியே உக்காந்திருந்தா யார் யாரு போயி நின்னும் அவ பேசலை.

ஊருக்குள்ள எல்லாருக்கும் ஒரு பயம் வந்திருச்சு. ஒரு பொம்பளை இப்படி ராத்திரி, பகல்னு இல்லாம, ஒரு கொலை நடந்த வீட்டுல அன்னம் தண்ணி இல்லாம, தூங்காம பேய் மாதிரி உக்காந்து இருக்காளேன்னு அம்புட்டுப் பேரும்

பயந்து போனாங்க... ஒரு சாமியாடியைக் கூட்டிக்கிட்டு ஊர்ல நிறையப் பேரு பூவரசி வீட்டுக்குப் போனாங்க.

போன கூட்டத்தில் பெரியவரும் இருந்தாரு. கூட்டத்தையும், சாமியாடியையும் பார்த்ததும் பூவரசி எழுந்து நின்னா. முகத்தில் ஒரு கேலிச் சிரிப்பு. முதன் முறையா வாயைத் திறந்து அவ பேச ஆரம்பிச்சா.

"எதுக்குய்யா சாமியாடியோட ஊர்க்காரங்க எல்லாம் வந்திருக்கிங்க? எனக்குப் பேய் விரட்டவா... எனக்குப் பேய் பிடிக்கலை பயப்படாதிங்க...

"அண்டி வந்தவங்களை, அடைக்கலமா இருக்கறவங்களை புள்ளைகளா நினைச்சு ஆதரிக்கிறதுதானய்யா தருமம்... ஆனா இந்த ஊரு அண்டியிருந்த என அண்ணனைக் காவு வாங்கிடுச்சு. என்னை அநாதையாக்கிருச்சு...

"...என் வயிறெரிஞ்சு சொல்றேன். இந்தப் பெரிய மனுஷனை நம்பி ஏமாந்து, என்னையே ஒப்புக் கொடுத்து, என் கூடப் பொறந்தவனையே கண்ணு முன்னால இழந்து நிக்கிற நான் என் மனசு வெந்து போய் சாபம் விடுறேன். இவன் சாம்பலாப் போவான்..."

பெரியவரு வெலவெலத்துப் போனாரு. ஊருச் சனம் அப்படியே நடுங்கிப் போயி நிக்குது.

எனக்குப் பண்ணின பாவம் இவன் வம்சத்தோட நிம்மதியை அழிக்கும். நான் செத்தபின்னாடியும் நின்னு அதைப் பாத்துக்கிட்டுத்தான் இருப்பேன். போனவங்க எல்லாரும் பயந்து போயி திரும்பி வந்துட்டாங்க. பெரியவரு மூஞ்சி பேயறைஞ்சாப்ல ஆயிருச்சு.

அன்னிக்கு ராத்திரி பூவரசி செத்துப் போனா. எப்படி தெரியுமா... நடு ராத்திரியில பூவரசி வீட்டுல இருந்து கூச்சல்கேட்டுச்சு. ஊரே அங்கே ஓடுச்சு. வீட்டு வாசல்ல கையில தீப்பந்தத்தோட பூவரசி பைத்தியக்காரி மாதிரி சிரிச்சுக்கிட்டே நிக்கிறா.

ஊர்க்காரங்களுக்கு என்ன பண்றதுன்னே தெரியலை. தள்ளியே நிக்கிறாங்க.

"எவனும் இங்கே வராதிங்கடா"ன்னு கத்திக்கிட்டே வீட்டுக்குள்ள போயி கதவைச் சாத்திக்கிட்டா பூவரசி.

கொஞ்ச நேரத்தில வீடு கொழுந்து விட்டு எரிய ஆரம்பிச்சிடுச்சு. ஊரே பயந்து போயி பாத்துக்கிட்டு நிக்க அந்த வீட்டோட எரிஞ்சு சாம்பலானா பூவரசி.

எரிஞ்சு முடிஞ்ச மறுநாள் கூட அந்த சாம்பல் மேட்டை நெருங்க அஞ்சி எட்டியே நின்னுது ஊரு சனம்.

அப்புறம் மெல்ல தைரியம் வந்து மாந்திரீகனைக் கூப்பிட்டு என்னென்னமோ பரிகாரம் எல்லாம் நடந்துச்சு.

ஒரு மாசம் கழிச்சு எரிஞ்சு சாம்பலான அந்த இடத்தில ஒரு பூவரச மரம் முளை விட்டிருந்துச்சு பூவரசிதான் மரமா வளர்றான்னு ஊர்ல எல்லாரும் பேச ஆரம்பிச்சாங்க.


அந்த இடத்துப் பக்கம் போறதுக்கே எல்லாருக்கும் ஒரு வித பயம் இருந்துச்சு.

ஆறு மாசம் ஆச்சு... ஆனா பெரியவரு பயம் போகலை. எப்பப் பாத்தாலும் புலம்பிக்கிட்டும், அழுதுக்கிட்டும், பயந்துக்கிட்டும் கெடந்தாரு... அவரு மூஞ்சியில ஒரு சாவுக்களை படர்ந்து போச்சு.

ஒரு நாள் சாயங்காலம் தோட்டத்துக்குப் போனாரு. திரும்பும்போது மழை. அங்கேயிருந்த ஒரு பூவரச மரத்தோட நிழல்ல ஒதுங்கி நின்னாரு. கொஞ்ச நேரங்கழிச்சுத் தான் தான் ஒதுங்கி இருக்கற மரத்தைக் கவனிச்சாரு. பூவரச மரம்... அவருக்குப் பூவரசி ஞாபகம் வந்து சட்டுன்னு விலக நினைச்சாரு. அப்ப 'டமார்'னு ஒரு பெரிய சத்தம். இடி... நேரா வந்து அந் மரத்துல விழுந்தது.

அந்த மரத்தோட சேர்ந்து அவரும் கருகிப் போனாரு. பூவரசி சாபம் விட்ட மாதிரியே சாம்பலாப் போயிட்டாரு.

(தொடரும்)



"ஏண்டி... புடைவை எடுக்க இவ்வளவு நாழியா? என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்குக் கூட நீ இவ்வளவு நாழி யோசிக்கலையே."

"ஒரு தடவை அவசரப்பட்டதால நான் படுற கஷ்டம் போதாதா.

- சச்சின் சக்திவேல்

வட்டமேஜை

✉ எழுத்தாளர் மகரிஷியின் நாவல்களை எஸ்.பி. முத்துராமன், ஏ.சி. திருலோகசந்தர், தேவராஜ் மோகன் ஆகிய இயக்குனர்களே படமாக்கியுள்ளனர். நாவல் சினிமா கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது போல் பீம்சிங் அல்ல.

நெய்வேலி -3, சாந்திசுந்தர்.

✉ குருஜி ஏ.எஸ். ராகவன் 'தலம் தோறும் தமிழ்க்கடவுள்' தொடரில் ஆழமான செய்திகளை இனிமையாகவும் எளிமையாகவும் சொல்கிறார். இலக்கியச் செழுமையோடு, பக்தியைத் தூண்டும் முறையில் அவரது எழுத்து அமைந்துள்ளது. கந்தன் கருணைக்குத் தானே சாட்சி என்று கூறி நிமிர்ந்து நிற்பது தனிச் சிறப்பு.

சென்னை – 24, எஸ்.டி. காசிராஜன்.

✉ பட்டுப்புடைவைப் பரிசு கூப்பனை இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் நிறுத்திவிட்டீர்களே... கூப்பனைத் தேடித் தேடி கண்ணும், கையும் வலிச்சதுதான் மிச்சம். இது நியாயமா?

அரசரடி வி. சிவா.

✉ உங்க கூற்றுப்படி விஜயகாந்த் வேண்டுமானால் தீவிர அரசியலுக்கு வருவார். ஆன்மிகத்தில் ஈடுபாடு கொண்ட ரஜினியின் கொடி சினிமாவில்தான் பறக்குமே தவிர அரசியலில் பறக்கவே பறக்காது! இது சத்தியம்!

மதுரை - 9, பி.எல். பரமசிவம்.

✉ 18.11.2001 இதழில் 'சிவகாமியின் சபதத்'துக்கு வரையப்பட்ட ஓவியத்தில் வஜ்ரபாஹுவும், பரஞ்சோதியும் சாப்பிடும் இலைகளின் நுனி வலது பக்கம் இருக்கும்படி வரையப்பட்டுள்ளது. சாதாரணமாக, சாப்பிடுபவர்களின் இடது பக்கத்தில்தான் இலை நுனி இருக்கும்.

சென்னை – 14, டி.ஆர். ராமசாமி

✉ தீபாவளி என்றாலே புத்தாடையும், பட்டாசும், இனிப்பும் குதூகலமும் மட்டுமே ஞாபகத்துக்கு வரும். ஆனால், நரகாசுரனைப் பற்றி நினைத்து, அரக்கனாயினும் மனிதன்தானே. அவன் இறப்பை சந்தோஷமாக கொண்டாடலாமா என்ற வாசகரின் கேள்வி, உண்மையிலேயே வித்தியாசமாக இருந்தது.

நல்லத்துக்குடி, கே.வி. சூர்யா

✉ அறந்தை மணியன் தொகுத்திருந்த பல திரைப்படச் செய்திகள் ஆச்சர்யத்தை உண்டாக்கின!

பொன்மலை, ஆர். பிரகாஷ்.

✉ 'கஜானா காலி, கலாட்டா பல்லவி' தலையங்கம் சூப்பர்! கும்பகோணத்தில் பெண் பார்த்து சம்பந்தம் பேசியதும் தாம்பூலத் தட்டு மாற்றும்போது, பெண் வீட்டு சார்பாக ஒருவர் பேச்சுவாக்கில் 'போனவாரம்தானுங்க நான்கு ஏக்கர் வெற்றிலைக் காம்பு வெட்டிப் பதியம் போட்டு இருக்கோம்'னு சொன்ன கதை நினைவுக்கு வந்தது. வெற்றி(இ)லை - வெற்றிலை (இல்லா) தட்டு மாற்றிய சாமர்த்தியம் எவ்வளவு நாளைக்கு?

கோயமுத்தூர்-6, பி. தங்கவேல்

பறக்கவே பறக்காது!

சொர்க்க வாசலாகும் சென்னை சாலைகள்?

- கராத்தே தியாகராஜனுடன் காரசார சந்திப்பு

சென்னை மாநகர வாழ்வின் பல்வேறு சவால்களில் புதிதாக மிரட்டிக் கொண்டிருப்பது, சொர்க்கத்துக்கு வழி காட்டும் சாலைகள். மேயருக்கு முன்பாக முந்திக் கொண்டு, அதிரடி விசிட் அடிக்கும் துணை மேயர் கராத்தே தியாகராஜனை மடக்கி, 'சாலை மராமத்துப் பணிகள் முடுக்கி விடப்படாதது ஏன்' என்று கிடுக்கினோம்.

முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு சென்னை மாநகரச் சாலைகள் இத்தனை மோசமானது ஏன்? உடனடி பழுதுபார்க்கும் பணியும்கூட தாமதமாகிறதே

சாலைக்கு முதல் எதிரி தேங்கும் நீர். கடந்த ஆட்சியில் மழைநீர் வடிகால் வசதிக்காக இருபத்தைந்து கோடி ரூபாய் செலவு செய்தோம் என்கிறார் மேயர் ஸ்டாலின். போதிய வடிகால் வசதிகள் செய்யப்பட்டிருந்தால், வாய்க்கால்கள் வழியாக மழைநீர் கடலுக்குப் போய் விட்டிருக்க வேண்டும். சென்னை மழைநீர் கடலில் கலக்கும் இரண்டு முக்கியமான முகத்துவாரங்களான கூவமும், அடையாறும் இயல்பாகவே மேடான பகுதிகள். எனவே மாநகராட்சி, பொதுப் பணித் துறையின் ஒத்துழைப்போடு, முகத்துவாரங்களில் படியும் வண்டலை அள்ளி அப்புறப் படுத்தினால்தான் மழைநீர் கடலைச் சேரும். ஆனால் கடந்த ஆட்சியில் துரை முருகன், ஸ்டாலின் இருவரும் ஒருங்கிணைந்து செயல்படவில்லை. இது போன்ற பணிகளை நிறைவேற்ற மழைக் காலம் போக, வருடத்தில் ஒன்பது மாதம் எஞ்சியிருக்கிறது என்பதை மறந்துவிட்டு மந்தமாக இருந்துவிட்டார்கள் இந்த மாண்புமிருகள். இதனால் கூவம், அடையாறு கூவாக கொசு உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஆகிவிட்டன.

ஆப்டிகல் பைபர் கேபிள் புதைக்க, தனியார் நிறுவனங்கள் தோண்டிய குழிகளும் சாலைகள் மோசமானதற்குக் காரணம் என்கிறார்களே.

அதுவும் முக்கிய காரணம்தான். மொத்தம் ஏழு நிறுவனங்களுக்கு, தலா எழுநூறு கிலோ மீட்டர் தூரம் இந்தவகை கேபிள் புதைக்க கடந்த ஆட்சியில் உரிமம் கொடுத்திருக்கிறார்கள். இதில் நான்கு நிறுவனங்கள் வேலையைத் தொடங்கி விட்டன. பொதுவாக சென்னை குடிநீர் வாரியமோ, மின்சார வாரியமோ, சாலையில் பள்ளம் வெட்டினால், சதுர மீட்டருக்கு இவ்வளவு என்று நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை மாநகராட்சிக்குச் செலுத்திவிடுவார்கள். அதைக் கொண்டு மாநகராட்சியே, வெட்டப்பட்ட சாலை



களை தரமான முறையில் சீர் செய்து விடும்.

ஆனால் முரசொலி மாறன் தமது செல்வாக்கைக் கொண்டு, ஒரு தவறான அரசாணை போடச் செய்தார். அதாவது இந்த இண்டர்நெட் நிறுவனங்கள், வருடத்துக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை, புதைக்கப்பட்ட கேபிள்களுக்கு 'டிராக்ரெண்டாக' கட்டினால் போதும் என்பதுதான் அந்த அரசாணை. வெட்டிய பள்ளத்தை இவர்களே மூடி விடலாம் என்றும் அனுமதி தரப்பட்டது. அதன்படி வெட்டப்பட்ட பள்ளத்தில், இரண்டடிக்கு ஆற்றுமணல், இரண்டடிக்கு கடல் மணல், அதன்பிறகு கிராவல் அதன் மேல் தார் போட்டு, சாலையைச் சரிசெய்ய வேண்டும். இந்த விதிமுறைகளை, தனியார் நிறுவனங்கள் சரியாகப் பின்பற்றவில்லை. இதனால் மாநகராட்சிக்கு இருநூறு கோடி இழப்பு. இதற்கெல்லாம் ஸ்டாலின்தான் பதில் சொல்ல வேண்டும். ஆப்டிகல் பைபருக்காக இனி புதிதாக சாலைகளை வெட்ட யாருக்கும் அனுமதி கொடுக்கப் போவதில்லை. ஏற்கெனவே உரிமம் பெற்ற கம்பெனிகளுக்கும், விதிமுறைகளைச் சரியாகப் பின்பற்ற வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம்.

"ஏழாண்டு ஒப்பந்தம் எதற்கு என்பதுதான் என் கேள்வி..."



போர்க்கால அடிப்படையில் - சாலைகளைப் பழுதுபார்க்கும் பணியை ஏன் உடனே தொடங்கவில்லை?

மழை முழுவதுமாக நின்ற பிறகுதான், இந்தப் பணியைத் தொடங்க முடியும். இருநூறு டன் மிக்ஸ் கைவசம் தயாராக இருக்கிறது. பதினைந்தே நாட்களில் பழுதுபட்ட எல்லா சாலைகளையும், பழுதுபார்த்துவிட முடியும். பட்ஜெட்டுக்குப் பிறகு, பிப்ரவரியில் தொடங்கி ஜூன் மாதத்துக்குள் சென்னை மாநகரச் சாலைகளை முழுவதுமாக புதுப்பித்துவிட முடியும்.

மாநில அரசின் நிதி நெருக்கடி, மாநகராட்சிகளையும் பாதிக்கும் நிலை வந்தால் மராமத்துப் பணிகளைக்கூட கவனிக்க முடியாதே?

மாநகராட்சிக்கு வரவேண்டிய நிதி வருவாய் நிறைய வசூலிக்கப்பட வேண்டியிருக்கிறது. வணிகவரி வருமானத்தில் நிறைய நிலுவைகள் உள்ளன. இவற்றைத் தீவிரமாக வசூலிப்பது தொடர்பாக விரைவில் கூட்டம் போட்டுப் பேசவிருக்கிறோம். மராமத்துப் பணிகளுக்கு, இருக்கிற நிதியிலிருந்து ஏற்கெனவே கொஞ்சம் ஒதுக்கிவிட்டோம்.

நிதிநெருக்கடியைச் சமாளிக்க வீட்டு வரி, மின்கட்டண டெபாஸிட் போன்றவற்றை பல மடங்கு உயர்த்தப் போவதாக செய்தி அடிபடுகிறதே?

மின்கட்டண டெபாஸிட்டை உயர்த்துவது குறித்து நீங்கள் மின் அமைச்சர் அல்லது மின் வாரியத்திடம்தான் கேட்க வேண்டும். வீட்டுவரியைப் பொறுத்தவரை, விதிக்கப்பட்டதை முறைப்படுத்தி வசூலித்தாலே மாநகராட்சிக்கு கூடுதல் வருமானம் வரும். ஏழைகள், நடுத்தர வர்க்கத்திடம் கறாராக வீட்டு வரியை வசூலிக்கத் தெரிந்த இவர்கள், கமர்ஷியல் இடங்களில் பொறுப்புடன் வரி வசூல் செய்வதில்லை. எனவே நாங்கள் வணிக வரி வசூல் செய்வதில் தயவு தாட்சண்யமோ, சலுகையோ காட்ட மாட்டோம்.

குப்பைகளை அகற்றுவதில் இந்தியாவிலேயே ஒரு முன் மாதிரி முறையைக் கொண்டு வந்த 'ஓனிக்ஸ்' ஒழிக்கப்பட வேண்டும் என்று பேசியிருக்கிறீர்களே?

ஒனிக்ஸ் ஒரு பெரிய மூடு மந்திரமாக இருக்கிறது. பிரான்சு நாட்டு நிறுவனத்தின் ஒரு பிரிவுதான் பிசியாட்டிக் லிமிடெட் என்கிறார்கள். சிங்கப்பூரில் செயல்படும் இந்த நிறுவனம், சென்னையில் 'சென்னை என்வயர்ன்மெண்ட்' என்ற பிரிவில் ஒப்பந்தம் எடுத்திருக்கிறது. இந்த நிறுவனத்துக்கு ஏன் இத்தனை முகமூடி? இப்போது மூன்று மண்டலங்களில் குப்பையள்ளும் இந்த நிறுவனத்தால் நிறைய தாழ்த்தப்பட்ட சகோதரர்கள் பாதிக்கப்பட்டு, வேலை நிறுத்தம் செய்தார்கள். இவர்கள் வழக்குத் தொடுத்தபோது அதை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. காரணம் ஒன்றுதான். தொழிலாளர் சட்டப்படி எந்த பிரச்னைக்கும் ஆளாகாமல் சுதந்திரமாகச் செயல்பட, ஒனிக்ஸ் நிறுவனத்துக்கு மட்டும் ஏழாண்டு விதிவிலக்கு கொடுத்து, அனுமதித்திருக்கிறார்கள். பூகம்பமோ, புயலோ வந்தால்தான் தொழிலாளர் சட்டத்துக்கு விதிவிலக்குக் கொடுத்து, ஒரு பெரிய நிறுவனத்தை உள்ளே விடமுடியும். ஆனால் ஸ்டாலினுக்காக இந்த விதிவிலக்கு. இன்னொரு முக்கிய விஷயம். சாலைகள்போட, கட்டடங்கள் கட்ட ஒப்பந்தம் விடுகிறோம். திட்டப்பணி முடிந்ததும் சாலைகளின், கட்டடங்களின் பராமரிப்பு அரசிடம் வந்துவிடுகிறது. அதுபோல் ஒனிக்ஸ் இங்கே பயிற்சி அளித்துவிட்டுப் போய்விட வேண்டியதுதானே. ஏழாண்டு ஒப்பந்தம் எதற்கு என்பதுதான் என் கேள்வி.



“நாங்கள் கொண்டுவரும் திட்டங்களை மேயர் எதிர்க்க மாட்டார் என்று நம்புகிறோம்...”

சென்னை மாமன்றத்தில் தி.மு.க.வுக்குப் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இருந்தபோதே மேயர் ஸ்டாலின் செயல்பட முடியாத நிலை ஏற்பட்டது. இப்போது அ.தி.மு.க. அதிக பலம் பெற்றிருக்கும் நிலையில் மாமன்ற கூட்டம் பிரச்னைக்கு உள்ளாகுமா?


பொதுச் செயலாளர் புரட்சித் தலைவி மக்கள் பிரச்னைகளில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். எல்லா மாமன்ற உறுப்பினர்களுக்கும் மழைநீர் சேகரிப்பு பற்றி பயிற்சி அளிக்க நிபுணர்களைக் கொண்டு தலைமை கழகத்திலேயே கருத்தரங்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எங்கள் கவனம் முழுவதும் இப்போது மக்கள் பணிதான். எங்களால் எந்தப் பிரச்னையும் வராது. தி.மு.க.காரர்கள் வன்முறையில் இறங்காமல் இருந்தால் சரி. அதேபோல துணை மேயருக்கென்று சில மரபுகள், எல்லைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளை மதித்து நடப்பேன்.

ஒற்றுமையான பட்ஜெட்டை எதிர்பார்க்கலாமா? தீர்மானங்களை நிறைவேற்றுவதில் கருத்து வேறுபாடும், களேபரமும் வராது என்று என்ன நிச்சயம்?

ஒற்றுமையான பட்ஜெட்டா இல்லையா என்று இப்போது தெரியவில்லை. வரும் பட்ஜெட்டைப் பொருத்தவரை நிதி, வரிவிதிப்பு ஆகிய இரண்டு குழுக்கள் எங்கள் வசம் இருக்கும். எனவே நாங்கள் கொண்டு வரும் திட்டங்களை மேயர் எதிர்க்க மாட்டார் என்று நினைக்கிறோம். அதேபோல ஒரு தீர்மானம், வார்டு குழு, நிலைக் குழுவில் நிறைவேறினாலும் அதன்பிறகு மாநகராட்சி கமிஷனரின் கையெழுத்திட்டு, இறுதியாக மேயர் கையெழுத்திட்டால்தான் முழுமையாக நிறைவேறும். அந்த வகையில் தீர்மானங்களை மேயர் தடுக்காமல் இருந்தால் சரி.

சந்திப்பு : **ஜெயந்தன்**
படங்கள் : **ராஜன்**

ஜி.எஸ்.எஸ்.



ஆப்கான் துயரங்கள்! 2

தாலிபான்கள் அகற்றப்பட்டதில் எந்த நடுநிலையாளருக்கும் வருத்தம் இருக்க வாய்ப்பில்லை. அவர்கள் பதவியேற்ற விதம், அவர்கள் மக்களை நடத்திய விதம் ஆகிய இரண்டுமே சிறிதும் கௌரவமானதல்ல என்பதால் தாலிபான் வீழ்ச்சி பலருக்கும் மகிழ்ச்சியையே தந்திருக்கும்.

ஆப்கான் அப்பாவிகள் முகங்களிலும் மகிழ்ச்சி ரேகைகள் தெரிகிறதென்றால் அதற்குக் காரணம் தாலிபான்களின் நீக்கம் மட்டுமல்ல, அமெரிக்கத் தாக்குதல் இனி பின் லேடன் பதுங்கியிருப்பதாகக் கருதப்படும் காந்தஹாரை நோக்கி மட்டுமே இருக்கும் என்பதும் கூடதான்.

அது ஒரு காலம். ஏதோ கல் தோன்றி மண் தோன்றா காலத்தைச் சொல்லவில்லை. சோவியத் யூனியன் உடையாத நேரம். அதற்கும் அமெரிக்காவுக்கும் நிலவியது (மட்டும்தான்) உக்கிரமான பகைமை என்ற சூழல். எல்லா நாடுகளையும் 'இது அமெரிக்க ஆதரவு நாடு, இது சோவியத் ஆதரவு நாடு' என்று பிரித்தார்கள். 'நடுநிலை நாடுகள்' என்பதைப் பலரும் ஏற்கவில்லை.

இந்த இருவரில், யார் யார்மீது அணுகுண்டை வீசியெறியப் போகிறார்களோ? மூன்றாம் உலகப்போர் வந்துவிடுமோ என்றெல்லாம் அமைதி விரும்பிகள் கவலைக் கடலில் மூழ்கினார்கள். ஆனால் அவர்கள் கவலை நல்லவேளையாக அஸ்திவாரம் இல்லாமல் போனது.

சோவியத் யூனியன் உடைந்தது. இரும்புத்திரை கிழிந்த பின்பு உள்ளே பல சோதனைகள் இருந்தது புலப்பட்டது. பிரிந்த சோவியத் நாடுகளுக்குள்ளேயே ஒற்றுமையில்லை (ஒற்றுமையிருந்தால் பிரிந்திருக்குமா என்பதும் நியாயமான வாதம்தான்). ஆக ரஷ்யா நலிந்து போனது. பொருளாதாரம், அரசியல் சித்தாந்தம் இரண்டிலுமே ரஷ்யாவுக்குப் பின்னடைவு.

முதல் இரண்டு உலகப்போர்களிலும் எதிரிகள் அணிவகுத்து நின்றனர். பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, பெல்ஜியம், ஜப்பான், செர்பியா, போர்ச்சுகல், அமெரிக்கா, கிரீஸ் ஆகிய நாடுகள் ஒருபுறம், ஜெர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா ஆகிய நாடுகள் மறுபுறம். இப்படித்தான் நாடுகளிடையே பிரிவுக்கோடு எழுந்தது முதல் உலகப்போரின்போது.

இரண்டாம் உலகப்போரின்போது இந்தப் பட்டியலில் உள்ள சில நாடுகள் அடக்கி வாசித்தன. ஒரு சில நாடுகள் கட்சி மாறின. உதாரணமாக முதல் உலகப்போரில் ஜெர்மனிக்கு எதிரணியில் இருந்த ஜப்பான் இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியின் தோழனாகித் தோள்கொடுத்தது. ஆனால் யார் எந்தப் பக்கம் என்பது மிகத் தெளிவாகத்





தெரிந்தது. தான் இருவர் பக்கமும் இல்லை என்பதில் ஸ்விட்சர்லாந்து மிகத் தெளிவாக இருந்தது.

யார் பாண்டவர் யார் கௌரவர் என்பதில்கூட பெரும்பாலான உலக நாடுகளுக்குச் சந்தேகமிருக்கவில்லை.

இப்போதைய 'யுத்தத்தின்' விந்தையே எந்த குறிப்பிட்ட நாடும் போரில் நேரடியாக ஈடுபடாததுதான்.

'எங்கள் முதல் எதிரி அமெரிக்காதான்' என்று கூறும் தீவிரவாத அமைப்புகள் கூட, தங்களது தீவிரவாத வெறியை வெளிப்படையாகச் சொந்தம் கொள்ள மறுக்கின்றன. பாலஸ்தீனிய தீவிரவாதிகள் அமைப்பு 'நாங்கள் அதைச் செய்யவில்லை' என்றது. 'எங்களுக்கும் அமெரிக்கத் தாக்குதலுக்கும் தொடர்பு இல்லை' என்பதே பின்லேடனின் ஒரு முறைக்கு இருமுறை வெளியிடப்பட்ட அறிக்கை. வணிகக் கோபுரங்கள் தாக்குதலுக்குத் தாமே காரணம் என்பதை மிகச் சமீபத்தில் தான் மறைமுகமாக அவன் ஒப்புக் கொண்டிருக்கிறான். ஆக பழைய போர்களில் தென்பட்ட துணிச்சல் இப்போது இல்லை. குள்ளநரித்தனம் மட்டுமே கொடி கட்டிப் பறக்கிறது.

அமெரிக்காவும் இப்போது ஆப்கானிஸ்தான் என்ற நாட்டின் மீது போர் தொடுக்கவில்லையாம். அந்த நாடுகளிலுள்ள தீவிரவாதிகளின் மீதுதான் தங்கள் அழிவுக் கருவிகளை ஏவிக் கொண்டிருக்கிறதாம்! நடப்பது முகமூடி யுத்தம்.

முன்பெல்லாம் 'வெற்றி அல்லது வீரமரணம்' என்பது யுத்த மந்திரமாக இருந்தது. இப்போது அது அச்சமூட்டும் வகையில் 'மரணத்தின் மூலமாகவே வெற்றி' என்றாகி வருகிறது. கேடயம் தேவையில்லை. வாள் மட்டுமே போதும் என்கிற வகையில் தயாராகின்றனர் தற்கொலைப்படைகள். ராஜீவ் காந்தி கொலையில் இதன் பயங்கரத்தை நேரடியாகவே நாம் பார்த்துவிட்டோம். இப்போது நியூயார்க்கைத் தாக்கிய விமான ஹைஜாக்கர்கள்!

'நூறு குற்றவாளிகள் தப்பலாம். ஆனால் ஒரு நிரபராதி தண்டனையடையக் கூடாது' என்ற வழக்கறிஞர்களின் வாதத்தை நேரில் கேட்காதவர்கள்கூட திரைப்படங்களில் பல முறை கேட்டிருப்பார்கள். ஆனால் இந்தத் தற்கொலைப் படையினர் எண்ணம் 'நூறு அப்பாவிகள் சாகட்டும். நேரடி எதிரி ஓரிருவராவது இதில் இறந்துபோவான் அல்லவா? அது போதும்' என்கிற கொள்கையைக் கொண்டிருக்கிறார்கள். அதாவது மனித உணர்வுகள் மூளைச் சலவை மூலம் முதலில் கொலை செய்யப்படுகின்றன. அதன்பின் தற்கொலைக்கும் அவர்கள் தயார்!

இந்த அநாகரிகப் போரில் இறந்த அப்பாவி ஆப்கான் குடும்பங்களை ஒருகணம் நினைத்துப் பாருங்கள்...

ஆப்கானிஸ்தானின் இருள் இப்போதும் பெருமளவு நீங்கிவிடவில்லை. அதற்கு முக்கிய காரணம் அதன் சரிந்த பொருளாதாரம்.

சோவியத் யூனியன் அந்த நாட்டை 1979ல் ஆக்கிரமித்த போதுகூட நான்காக இருந்தது ஆப்கானியின் மதிப்பு _ அதாவது ஒரு பாகிஸ்தான் நாணயத்துக்கு நான்கு ஆப்கானிய நாணயங்கள் சமம் என்கிற கணக்கில். 1992ல் இது பதினாறாகச் சரிந்தது. இந்த வருடம் இந்த எண்ணிக்கை மிக மோசமான நிலையில். 1300 ஆப்கானிய நாணயம் ஒரு பாகிஸ்தான் ரூபாய்க்குச் சமம்!

இன்றைய தேதிக்கு ஐம்பதிலிருந்து எழுபது லட்சம் ஆப்கானியர்கள் (அதாவது மொத்த ஜனத்தொகையில் நான்கில் ஒருவர்) பட்டினிச் சாவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் உணவுப் பண்டங்கள் ஸ்டாக் இல்லை. மக்கள் தொகையில் 85 சதவீதம் பேர் விவசாயத்தையே முக்கிய தொழிலாகக் கொண்டவர்கள். ஆனால் கடந்த சில வருடங்களாகவே அங்கு கடும் பஞ்சம். பலரும் இன்று வெட்டுக் கிளிகளையே உணவாகக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம். வட எல்லைப் பகுதியில் உள்ளவர்களுக்கு உணவு இது என்றால், மையப்பகுதிகளில் உள்ளவர்கள் புற்களைத் தின்று வாழவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. சமயங்களில் விஷப் புற்களையும்!

நிலைமையை மோசமாக்கும் வகையில் ஆப்கானிஸ்தான்மீது மேலும் மேலும் பொருளாதாரத் தடைகள். தாலிபான் ஆட்சியைத் தொடர்ந்து எந்த உறுப்பினர் நாடும் ஆப்கானிஸ்தானோடு வணிகம் வைத்துக் கொள்ளக் கூடாது என்றும், அந்த நாட்டின் மீது எந்த சர்வதேச விமானமும் பறக்கக் கூடாது என்றும் ஐ.நா.சபை தடையுத்தரவு போட்டுவிட, மேலும் மேலும் பரிதாபமான நிலையைச் சந்தித்தது ஆப்கானிஸ்தான். தாலிபான் ஆட்சியை அங்கீகரித்த மூன்றே நாடுகள்: ஐக்கிய அரபுக் குடியரசு நாடுகள், சவுதி அரேபியா, பாகிஸ்தான். இவற்றில் முதல் இரண்டும் தாலிபான் அரசோடு தாங்கள் கொண்டிருந்த தொடர்பை ரத்து செய்துவிடுவதாக பகிரங்கமாக அறிவித்துவிட்டன. பாகிஸ்தானும் சமீபத்தில், அமெரிக்க வற்புறுத்தலால், கிட்டத்தட்ட இதே நிலையை எடுத்திருக்கிறது. இதனால் நஷ்டம் தாலிபானுக்கு மட்டுமல்ல, மொத்த ஆப்கானிய மக்களுக்கும்தான்.

யாருக்குத்தான் இப்படிப்பட்ட சூழலில் இருக்கப் பிடிக்கும்? ஆப்கானியர்களைப் பொருத்தவரை அண்டை நாடுகளான ஈரானும் பாகிஸ்தானும் சொர்க்கப்பூமிகள். ஆப்கானிஸ்தானின் கிழக்கு எல்லை நாடாக பாகிஸ்தானும், மேற்கு எல்லை நாடாக ஈரானும் இருக்கின்றன. இருபது லட்சம் ஆப்கானியர்கள் பாகிஸ்தானுக்குச் சென்றுவிட, பதினைந்து லட்சம் பேர் ஈரானில் தஞ்சம் புகுந்திருக்கிறார்கள். குறைந்தபட்சம் உயிருக்குப் பாதுகாப்பு உண்டு என்ற காரணத்துக்காக. ஆனால் அந்த இரு நாடுகளாலும் ஓரளவுக்கு மேல் ஆப்கானிய அகதிகளை வரவேற்க முடியவில்லை. போதாக்குறைக்கு கையில் பணமே இல்லாத காரணத்தால் திருட்டு, விபசாரம், போதை மருந்து வியாபாரம் போன்றவற்றில் இந்த அகதிகளுள் கணிசமானவர்கள் ஈடுபடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு வேறு.

செப்டெம்பர் 11க்குப் பிறகு ஆப்கானிஸ்தானைச் சுற்றியுள்ள அத்தனை நாடுகளின் எல்லைகளும் ஆப்கானிய அகதிகளுக்கு மூடிக் கொண்டன. முக்கியமாக பாகிஸ்தானைத்தான் ப்ரூட்டலாக நினைக்கிறார்கள் ஆப்கானியர்கள். பாகிஸ்தானிய விசா வைத்துள்ளவர்களுக்குக் கூட அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக ரகசிய வழிகளில் பாகிஸ்தானுக்குச் செல்ல முயற்சி செய்கிறார்கள் ஆப்கானியர்கள் (பாகிஸ்தானையும் ஆப்கானிஸ்தானையும் பிரிக்கும் எல்லைக்கோட்டின் நீளம் 1300மைல்கள்; இந்த முழு நீளத்தையும் தொடர்ந்து மூடுவது நடைமுறையில் சாத்தியமில்லை). ஆனால் இந்த ரகசியவழி மிகக் கடினமானது. அது மலைப்பாதை. அமெரிக்காவின் முதல் எதிரியைப் பாதுகாக்க முடிந்த ஹிந்துகுஷ் மலைத் தொடரால் அகதிகளுக்குப் பெரும் தொல்லைதான். இருந்தும் வேறுவழியில்லை.

போதாக்குறைக்கு ஆயிரம் பாகிஸ்தானிய ரூபாய்களை லஞ்சமாகக் கொடுத்தால் அகதியாக கொல்லைப்புற வழியாக நுழையும் முறையும் வந்துவிட்டது. ஆப்கானிய மக்களுக்கு இது பிரமிக்க வைக்கும் தொகை. இருந்தும் உயிர், விலைமதிக்க முடியாதது என்பதால் இந்த வழியையும் முயற்சி செய்து பார்க்கிறார்கள்.

ஆப்கான் சீரமைப்புப் பகுதியில் நிதி திரட்டுவதற்காக யுனிசெப் உட்பட பல சர்வதேச அமைப்புகள் ஒரு குழுவாக இனி ஈடுபடப் போகின்றனவாம். உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, தனியார் தொண்டு நிறுவனங்கள் ஆகிய பலவும் இவற்றோடு இணைந்து செயல்படுமாம். பின்லேடன் பிடிபட்ட பிறகோ, புதிய ஆப்கானிய அரசு அப்படியொன்றும் தங்களுக்கு அவசியமானதல்ல என்று ஆகிப்போனாலோ அதற்குப் பிறகு இதே நிதி ஒத்துழைப்பு கிடைக்குமா?...

வருங்காலத்திலும் ஆப்கானிஸ்தானில் அமைதியோ நிலையான ஆட்சியோ அமையும் என்பது நிச்சயமில்லை. ஏற்கெனவே பதவி சுகம் கண்டவர்கள்தான் மீண்டும் ஆட்சிக்கு வரப்போகிறார்கள். இஸ்லாமிய நெறிகள் என்ற பெயரில் மக்களின் சுதந்திரத்தை ஒடுக்கவில்லையே தவிர மற்றபடி அதிகாரபோதையில் மிதந்தவர்கள்தான் வடக்குக் கூட்டமைப்பினரும். இப்போது அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற பெரிய நாடுகளின் ஆதரவு வேறு இருப்பதால் அவர்கள் கள் குடித்த குரங்கு போல் நடந்து கொண்டால் வியப்பில்லை.

ஆப்கானிஸ்தானில் பல இனங்கள் உண்டு. இந்த இனத்துக்கு இவ்வளவு பிரதிநிதி என்பது போல் ஒரு மறைமுக ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட அரசுதான் அங்கு பெரும்பாலும் நிலவி வந்திருக்கிறது.

பிரதிநிதித்துவம் கொண்ட அரசு ஆப்கானிஸ்தானில் அமையவேண்டும் என்று ஆளாளுக்குச் சொல்கிறார்கள். ஆனால் ஒவ்வொரு நாட்டுக்கும் இதில் ஒவ்வொருவிதமான கண்ணோட்டம். 'தாலிபான்களிலேயே ஒரு மிதவாத பிரிவு உண்டு. அவர்களுக்கும் உருவாகப்போகும் புதிய அரசில் பங்கிருக்கவேண்டும்' என்கிறது பாகிஸ்தான். வேறொன்றுமில்லை. தாலிபான்கள் 'பஷ்தூன்' என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆப்கானிஸ்தானின் மொத்த மக்கள் தொகையில் இவர்கள் நாற்பது சதவிகிதம்தான் என்றாலும், வேறெந்த இனத்தவரையும்விட இவர்களின் எண்ணிக்கை அதிகம். எப்போதுமே பாகிஸ்தானை இவர்கள் ஆதரித்து வந்திருக்கிறார்கள். அதற்குப் பிரதியுபகாரமாகத்தான் தாலிபான் அரசேற்ற கையோடு அதை முதலில் ஆதரித்தது பாகிஸ்தான். அமெரிக்க - ஐரோப்பிய ஆதரவுடன் காபுலைக் கைப்பற்றியிருக்கும் வடக்கு கூட்டமைப்பு படையினருக்கும், பாகிஸ்தானுக்கும் நல்லுறவு கிடையாது - 'நண்பனின் எதிரி நமக்கும் எதிரி' என்கிற வகையில். ஆனால் காலத்தின் கட்டாயமாக, அமெரிக்காவை எதிர்க்கும் வலு இல்லாத காரணத்தால், தாலிபானை எதிர்ப்பதுபோல் காட்டிக் கொள்ள வேண்டிய கட்டாயம் பாகிஸ்தானுக்கு. எனவேதான் இப்போது 'மிதவாதி தாலிபான்களைச் சேர்த்துக் கொள்ளலாமே' என்கிறது.

தாலிபான் ஆட்சி நீக்கப்பட்டுவிட்டதால் இனி பாகிஸ்தானை அவ்வளவாக அண்டியிருக்க வேண்டிய அவசியம் அமெரிக்காவுக்கு இல்லை. (பின்லேடனும் ஒழிக்கப்பட்டுவிட்டால் 'அவ்வளவாக' என்ற வார்த்தையைக் கூட நீக்கிவிடலாம்). சுயமாக முடிவுகளை எடுத்து அவற்றை ஆப்கானிஸ்தானின் மீது திணிக்க அமெரிக்காவால் முடியும். ஆனால் அதே சமயம் ஆப்கானிஸ்தானுக்கு மிக நெருங்கிய (குறைந்தபட்சம் உலக வரைபடத்தின்படி) நாடு என்பதால் பாகிஸ்தானை முழுவதுமாக இந்த விஷயத்தில் எந்த நாடும் அலட்சியம் செய்ய முடியாது.

பஷ்தூன் இனத்தினரின் மூலமாக ஆப்கானிஸ்தானின் உள்நாட்டு விவகாரங்களில் வெகுவாகத் தலையிட முடிந்தது பாகிஸ்தானால் என்றால் ஈரானின் அபிமானத்தைப் பெற்றவர்கள் 'பலூச்' என்ற இனத்தவர். தங்களைப் போலவே ஷியா பிரிவைச் சேர்ந்தவர்களென்பதால் ஹஸராஸ் என்ற இனத்தவரிடமும் ஈரானுக்கு இணக்கம் உண்டு. மேற்கு மற்றும் வடகிழக்குப் பகுதியில் உள்ள தாஜிக் இனத்தவர் ஆப்கானிஸ்தானின் மற்றொரு அண்டை நாடான தாஜிகிஸ்தானின் அபிமானத்தைப் பெற்றவர்கள். உஸ்பெக் என்ற மைனாரிடி பிரிவினருக்கும் வருங்கால அரசில் பங்கு அமைந்தால் தங்களுக்கு நல்லது என்று கணக்குப் போடுகிறது உஸ்பெகிஸ்தான் அரசு.

நாட்டின் சுமார் பத்து சதவிகிதத்தை மட்டுமே தன்னிடம் கொண்டிருந்தது வடக்குக் கூட்டமைப்பு. ஆனால் இப்போது உலகம் முழுவதும் அவர்களுக்கு அங்கீகாரம். ஐ.நா. சபையே இவர்கள்தான் ஆப்கானிஸ்தான் என்று இப்போதைக்கு அங்கீகரித்துவிட்டது!

'இனி சுதந்திரம்தான், ஜனநாயகம்தான்' என்று இப்போது ஆப்கன் மக்கள் குதூகலிக்கிறார்கள். இது நீண்ட நாள் தொடருமா என்பது பெரிய கேள்விக்குறி. காரணம் இனி கணிசமான காலத்துக்கு, யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் பிற வல்லரசுகளின் இசைக்கேற்ப ஆடவேண்டியிருக்கும். ஆப்கானிஸ்தானுக்கு எது நல்லது என்பதை அந்த நாட்டைவிடப் பிற நாடுகளால்தான் தீர்மானிக்க முடியும் என்பதுபோன்ற ஒரு மாயைத் தோற்றம் உருவாக்கப்பட்டுவிட்டது. இதுவே அந்நாட்டுக் குடிமகனுக்குத் துயரமான நிலைதானே.

'எப்படியிருந்தாலும் தாலிபான் ஆட்சியைவிட ஒருபோதும் வரவிருக்கும் ஆட்சி மோசமானதாக இருக்காது. எனவே வருங்காலத்தில் ஆப்கானியர்கள் நிம்மதியாக வாழ முடியும்' என்பவர்கள் பலர். அவர்கள் ஆப்கானிஸ்தானின் கடந்த காலத்தை அறியாதவர்களாக இருக்கக் கூடும்... ...

(அடுத்த இதழில் முடியும்)



பார்த்தாலே பரவசம்



வணிக வளாக நகரும் படிக்கட்டுகளில் எதிரும் புதிருமாக, ஏக்கப்பார்வை பார்த்தபடி மாதவனும், சிம்ரனும் பிரிந்து போகும் தொடக்கக் காட்சியே நிமிர்ந்து உட்கார வைக்கிறது. ஆனால் படம் முடிந்து வெளியே வருகிறபோது கேபி இன்னும் திருந்தவேயில்லை என்று உரிமையாய் வருகிற கோபமும், இவரால் மட்டும் இத்தனைத் துணிச்சலாய் எப்படி படமெடுக்க முடிகிறது என்ற குதூகல குறுகுறுப்பும் கலவையாய் ஆக்கிரமிக்கின்றன.

அவசரப்பட்டு மணவிலக்கு வாங்கிக் கொள்ளும் இருவர், மறுபடியும் ஒன்று சேர நினைக்கும்போது, வில்லனாகச் சூழல். இந்த ஒருவரிக் கதைக்கு இடைவேளை வரையிலும் இளமைத் துள்ளலோடு திரைக்கதை அமைத்திருக்கும்

'எழுத்து, இயக்கம் பாலா' டைட்டில் கார்டு போடுகிறபோது முன்வரிசை ரசிகர்களும் கூட கைத்தட்டுகிறார்கள். தமிழ் சினிமா ரசனையில் எத்தனை பெரிய மாற்றம்! அழுத்தமான கதை, இடைவேளை முடிச்சுக்கு குட் பை, தீர்க்கமான முடிவு, ஒப்புக்குக்கூட ஒப்பனை தொடாத நடிகர்கள் அல்ல, பாத்திரங்கள்! இவைதான் இந்த இயக்குனருக்குக் கிடைக்கும் கைத்தட்டலின் பின்னணி. நந்தாவும் இதே பின்னணியில் மின்னுகிறான்.

வீட்டிற்கே விலைமாதுவைக் கூட்டிவரும் அப்பாவை, அம்மா முன்னிலையில் அடித்துக் கொன்றுவிட்டு, சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் வளர்ந்து திரும்பும் நந்தாவை, ஏற்கமறுக்கும் தாய். தனிமையை உணரும் அவனுக்கு, தனது தோளில் அடைக்கலம் தரும் ஊர்ப்பெரியவர். இறுதியில் தாயின் அன்பை அவனால் பெற முடிந்ததா என்று அளந்து வைத்த மாதிரி நகர்கிறது திரைக் கதை!

சூர்யாவின் உடல்மொழியை அடியோடு மாற்றி- நந்தா என்கிற முரட்டு இளைஞனாக நடமாடவிட்டிருக்கிறார் இயக்குனர். கண்களில் அக்னிக்குஞ்சு பளபளக்க வலம் வரும் சூர்யா, அம்மாவிடம் ஒருபிடி சோறு கேட்கும்போது வெளிப்படுகிற அதிகாரக் குரலில், கலந்திருக்கும் பாசம், கல்நெஞ்சையும் கரைய வைக்கும்.

ராஜகுடும்பத்தின் மிச்சமாகத் தோன்றும் ராஜ்கிரண் பாத்திரத்தின் வீச்சு, படத்திற்கு மூச்சு. "அநியாயத்தைப் பார்த்துப் பொறுக்க முடியாமல் ஆத்திரப்படற நாம ஒவ்வொருத்தரும் அவதாரம்தான்" என்று கர்ஜிக்கும் அவர், நந்தாவை அவனது தாய் திரும்பக் கேட்கும் காட்சியில் மௌனமாய்த் துடித்து, மாடிப் படிகளில் சுருண்டு விழும்போது, மனத்தைக் கனக்க வைக்கிறார்.

ராஜஸ்ரீ, கருணாஸ், லைலா இன்னும் ஒரே ஒரு காட்சியில் வருகிறவர்களையும் கூட, நடிகர்களாய்ப் பார்க்க முடியவில்லை.

ஒரு பெண்ணைக் கற்பழித்தவனை, பல்லுக்குப் பல் பாணியில் பதம்பார்க்கும் காட்சியைக் கூட நந்தாவின் கோணத்தில் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் எதிர்த்துப் பேசிவிடும் கல்லூரி மாணவியை, ரவுடி மாணவன் பிடித்துக் கொள்ள, அவனுக்குப்

ஆனாலும் படம் நெடுகிலும் ஸ்கோட்டிக்கிடக்கும் 'கேப்' முத்திரைகள் "அட! என்னதான்யா சொல்லவர்றார்!" என்று கட்கார வைத்துவிடுகின்றன.

ஓர் இளம் பிரபலமாக வரும் மாதவன், இடைவேளைக்குப் பிறகு சீரியஸ் ஆகி, மெச்சூர்டான உணர்ச்சிகளையும் கூட, தனது ரொமாண்டிக் முகத்தில் அளவோடு பிரதிபலித்து அசத்துகிறார். இவரைப் பின்னுக்குத் தள்ளி விடுகிறார் இன்னொரு ஹீரோ ராகவேந்திரா லாரன்ஸ். காற்றின் லாகவத்துக்கு வளைகிற ஒற்றை இறகு மாதிரி அசத்தல் நடனம். யாருடைய பாதிப்பும் இல்லாத இயல்பான நடிப்பாற்றல்! இரண்டும் கைவரப்பெற்ற அதிர்ஷ்டக்காரர். குறிப்பாக சிம்ரனிடம் காதலைச் சொல்ல வரும்போது அவருக்கு நிச்சயதார்த்தம் நடந்து கொண்டிருக்க... 'ம்ம்... இவனுக்கு அதிர்ஷ்டமில்லை' என்று நொடிப்பொழுதில் தன்னம்பிக்கையை நிரப்பிக் கொண்டு சிரிக்கிறபோது எல்லாதரப்பு ரசிகர்களையும் அள்ளிக் கொள்கிறார்.

சிம்ரன் வெளுத்துக்கட்ட நிறைய ஸ்கோப். கேரளத்து நேந்திரம் சிப்ஸ் மாதிரி திரைக்கதைக்குக் கூடுதல் சுவை கூட்டுகிறார் சினேகா. வாலியோ படத்துக்குள் விசு நுழைந்து விட்ட உணர்வை ஏற்படுத்தும் வலி.

அப்பாவின் லட்சியக் கனவான கேன்ஸர் ஹாஸ்பிடல் திட்டத்தை, தனதாய் வரித்துக் கொள்ளும் மாதவன், அதை முன்னாள் மனைவிக்காக தியாகம் செய்கிறார். ஆனால் மணவிலக்குக்கு முன்பு சராசரி கணவன் மனைவியாகத்தான் இருவரும் சித்திரிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது நிறையவே நெருடுகிறது.

லாரன்ஸ் குடும்ப உறுப்பினர்களுக்குப் போடப்பட்டிருக்கும் கறுப்பு ஒப்பனை, விவேக் காமெடிக்குப் போட்டி! நித்யஸ்ரீயின் கம்பீரக்குரலில் கஜல், கர்நாடிக், ஃபோக் இவற்றின் கலவையாக 'மன்மத மாசம்' என்று மயங்க வைக்கிறார் ஏ.ஆர்.ரகுமான்.

கொஞ்சம் யதார்த்தம், கொஞ்சம் சினிமாத்தனம், நிறைய தில் என்று களமிறங்கும் கேபி, இந்த முறை டிராமாடிக் சினிமாத்தனத்துக்குள் சிக்கிக் கொண்டு விட்டதுதான் சிக்கல்.

● அபவ் ஆவரேஜ்

மாணவிக்கு முத்தம் கொடுக்கிற காட்சி, யதார்த்தமில்லாத குரூரம்! (சாரி! மிஸ்டர் பாலா! இளைஞர்கள் இந்த அளவு சீரழிந்து விடவில்லை.)

அதிரடி இசையை வழங்கிவந்த யுவன், இதில் தந்தையின் வழியில் வழங்கியிருப்பதோ வருடும் இசை. மசாலா மணம் இல்லாமலேயே விறுவிறுப்பான படத்தைத் தரமுடியும் என்று நிரூபித்திருக்கும் இயக்குனர், 'சேது' மூலம் சம்பாதித்த ரசிகர்களின் நம்பிக்கையை 'நந்தா' மூலம் தக்க வைத்துக் கொண்டிருக்கிறார்.

— விஷுவல்தாசன்

● அபவ் ஆவரேஜ்



நந்தா

மேஷம் :

கிரக சஞ்சாரப்படி 10ல் உலவும் செவ்வாய் எடுத்த காரியங்களில் வெற்றிகாண உதவுவார். 'சித்தி' சாரதா போல் மனத்தில் துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். கணவன், மனைவி உறவு சீராக இருக்கும். தந்தையின் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அரசியல் துறையில் இருப்பவர்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும். வியாபாரிகளுக்கு அளவான லாபம் கிட்டும். வாரக் கடைசியில் சில காரியங்கள் அனுகூலமாகும்.

ரிஷபம் :

புதன் மட்டுமே அனுகூலமாக இருப்பதால் 'பிரசாத்' மாதிரி அவசரப்பட்டு முடிவெடுக்காமல் எதையும் யோசித்து செயல்படுவது நல்லது. பணவிஷயம், உடல் நலத்தில் அதிக கவனம் தேவை. கணவன், மனைவி உறவில் சிறு ஊடல் ஏற்படும்; விட்டுக் கொடுத்து நடந்து கொள்ள வேண்டும். உல்லாசம், ஆடம்பரத்தைக் குறைத்து சிக்கனமாக இருப்பது நல்லது. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், ஓவியர்கள் முன்னேற்றம் அடைவார்கள்.

மிதுனம் :

இந்த வாரம் உங்களின் புத்திசாலித்தனமும், செயல் திறமையும் வெளிப்படும். அதைச் 'சாருலதா' போல சரியாகப் பயன்படுத்திக்கொள்வது உங்கள் சாமர்த்தியம். நினைத்து நினைத்து சந்தோஷப்படக் கூடிய இனிமையான நிகழ்ச்சிகள் நடைபெறும். முக்கியமான விஷயம் - அரசுப் பணியாளர்கள், அரசாங்க விவகாரம் ஆகியவற்றில் அனுகூலம் ஏற்படும். பெற்றவர்களுக்கு, பிள்ளைகளால் நன்மை வந்தடையும். விவசாயிகளுக்கு நல்ல வாரம்.

கடகம் :

புதன், சுக்கிரன், சனி, கேது ஆகியோரின் கூட்டான அனுகூலத்தால் உங்கள் எண்ணங்கள், திட்டங்கள் ஸ்ரீரங்கம் பாட்டி போல எளிதில் நிறைவேறும். கலைத்துறையைச் சேர்ந்தவர்கள் சுபிட்சம் பெறுவார்கள். அரசுப் பணியாளர்கள், தொழில் செய்பவர்கள் வளர்ச்சி காண்பார்கள். கணவனால் மனைவிக்கும், மனைவியால் கணவனுக்கும் அன்பு பெருகி ஓடும். உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும். ஸ்ரீதுர்க்கை வழிபாடு செய்வது நல்லது.

சிம்மம் :

11ல் ராகு, ராசி நாதன் 4ல் இருப்பதால் உங்கள் திறமை, செயல்பாடு வெளிப்படும். இயந்திரப் பணியாளர்கள் லாபம் பெறுவார்கள். இன்ஜினியர்களின் மதிப்பு உயரும். செயற்கரிய காரியங்கள் செய்வீர்கள். வெளிநாட்டுத் தொடர்புடன் வியாபாரம் செய்பவர்களுக்கு ஆதாயம் அதிகம். கோர்ட் வழக்கு, விளையாட்டு, பந்தயங்கள், கலைத்துறை போன்றவற்றில் உங்களுக்குத்தான் வெற்றி. பெண்கள் நினைத்த காரியம் நடக்கும். 'வேலுமணி'போல கலகலக்க வைப்பீர்கள்.

கன்னி :

சூரியன், புதன், சுக்கிரன், செவ்வாய், ராகு ஆகியோரது கூட்டு நன்மையைத் தேடித் தரும். உங்கள் திறமை, 'சீனு'போல புத்திசாலித்தனம் பளிச்சிடும். பேச்சாற்றல் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சியில் குறைவிருக்காது. பேச்சைத் தொழிலாகக் கொண்டவர்கள் முன்னேறுவார்கள். மாணவர்களுக்கு இதுவரை இருந்து வந்த மந்த நிலை விலகும். உங்களால் மற்றவர்கள் உதவி பெறுவார்கள். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரியின் ஆதரவைப்பெறுவார்கள்.



'பாலபிரும்மம்' என்னும் சிறுவர் கர்நாடக இசைக்குழுவை மேடையேற்றவிருக்கும் அபஸ்வரம் ராம்ஜிக்கு (மேஷம்) தன்னம்பிக்கை அதிகரிக்கும்!

நடக்குமென்பார், நடக்கும்

துலாம் :

உங்கள் உடல் நலம், மதிப்பு, வாழ்க்கை வசதிகள் எல்லாம் திருப்திகரமாக இருக்கும். பொருள் வரவு அதிகரிக்கும். மனத்தில் அமைதி குடி கொள்ளும். எதிர்ப்புகள் குறைந்து எதிரிகள் விலகிப் போவார்கள். 'ராமு' போல பக்தியில் நாட்டம் வரும். தூர தேசப் பயணத் திட்டம் நிறைவேறும். கொடுக்கல், வாங்கலில் எச்சரிக்கை தேவை. இன்ஜினியரிங் மாணவர்கள் ஏற்றம் பெறுவார்கள். தொழில் நுட்பத் திறமை அதிகரிக்கும். பெயர், புகழ் தேடி வரும்.

மகரம் :

அரசுப் பணியாளர்கள் ஏற்றம் அடைவார்கள். மாணவர்களுக்கு நன்மை ஏற்படும். புதிய சொத்து சேரும் வாய்ப்பு உருவாகும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். பயணத்தில் நன்மை ஏற்படும். நிர்வாகத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்குப் பதவி உயர்வு, பட்டங்கள், விருதுகள் தேடிவரும். வேலை வாய்ப்பு உங்கள் வீட்டுக் கதவைத் தட்டும். 'ஈஸ்வரப்பாண்டி' போல பேச்சில் கடுமையைப் பயன்படுத்தாதீர்கள். தொழில் நுட்பத் திறமை வெளிப்படுவதால் பெயர், புகழ் அதிகரிக்கும்.

விருச்சிகம் :

எந்தச் செயலிலும் நிதானம் அவசியம். ராசிநாதன் 4ல் குரு பார்வை என்பதால் உங்கள் எண்ணங்கள் நிறைவேறும். பொருளாதாரம் சீராக இருக்கும்; அந்தஸ்து உயரும். பந்தயங்கள், வழக்குகளில் எச்சரிக்கை தேவை. வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள சந்தர்ப்பம் தேடி வரும். மாணவர்களின் உழைப்பும் திறமையும் வீண்போகாது. குடும்பத்தில் சிறு சலசலப்புகள் ஏற்படும். 'ஸ்வேதா' போல பேச்சில் பதற்றமோ கடுமையோ கூடவே கூடாது.

கும்பம் :

உங்கள் திறமை அத்தனையும் வெளிப்படும். வெளிநாட்டுத் தொடர்பு நன்மை உண்டாக்கும். வெளிநாட்டுப் பயணத் திட்டம் கைகூடும். பொருளாதார நிலை சீராக இருக்கும். தந்தையால் அனுகூலம் உண்டாகும். உத்தியோகஸ்தர்கள், அலுவலகப் பணியாளர்களின் நிலை உயரும். ஊதிய உயர்வு, இடமாற்றம் ஏற்படும். 'யோகி' போல நேர்வழியில் செல்ல வேண்டும். நல்லவர்கள் தொடர்பு நன்மை தரும். வியாபாரிகள் மந்த நிலை விலகி வளர்ச்சி காண்பார்கள்.

தனுசு :

எந்தத் தொழில் செய்தாலும் மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் அவசியம். வியாபாரிகள் அகலக்கால் வைக்கக் கூடாது. குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். பயணத்தில் அதிக கவனம் தேவை. பணம் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் எச்சரிக்கை வேண்டும். 'பிரபாவதி' போல் எதிலும் பதற்றம், வேகம் கூடவே கூடாது. விவேகம் அவசியம். யாரிடத்திலும் வெளிப்படையாகப் பேசி பழக வேண்டாம்.

மீனம் :

குடும்பத்தில் குதூகலம், சந்தோஷத்துக்குக் குறைவிருக்காது. பேச்சில் கனிவும் இனிமையும் பிரதிபலிக்கும். 'கண்ணனுக்கு' வந்தது போல திடீர் அதிர்ஷ்டம் உங்களைத் தேடி வரும். சவால்களைச் சந்திக்க நேரிடும். சிவப்பு நிறப் பொருள்கள் நன்மை தரும். அலைச்சலைத் தவிர்ப்பது நல்லது. உடல் நலத்தில் அலட்சியம் கூடாது. 3ல் சனி நலம் தருவார் என்றாலும் வக்கிரம் என்பதால் குரு ப்ரீதி செய்வது நல்லது. பயணம் சம்பந்தப்பட்ட காரியங்களில் கவனம் அவசியம்.

“காதல் என்றாலே, கொதித்து அரிவாள் தூக்குகிறவர்கள் மத்தியில், ‘பக்திக்கும், வீரத்துக்கும், தியாகத்துக்கும், பண்புக்கும், அன்புக்கும் அஸ்திவாரம் காதல்’ என்று ஒரு புகழ் மாலை சூட்டி, ‘உலகமெங்கும் காதல் ஓங்கி ஒளி வீசட்டும்’ என்று சொல்லி, தெய்விக மாய்க் குத்து விளக்கு ஏற்றியது மனசுக்கு ரொம்ப இதமாக இருந்தது” என்றாள் விஜி.

“ஆமாம்! நிஜமான காதல்னா என்ன, அதோட சக்தி என்னன்றதை இறைவணக்கப் பாடல்லயே உணர்த்திட்டாங்க பார்த்தியா...? அமரர் கல்கியோட ‘பூங்குயில் கூவும்’



• விழா மேடையில்...





• லேனா தமிழ்வாணன்

எது காதல்?

பாட்டு, நிகழ்ச்சிக்கு அப்படியே ஜீவனைக் கொடுத்தது கவனிச்சியா..?" என்றான் ராஜு.

இளம் காதலர்களான ராஜுவும், விஜியும் இப்படி ஆச்சரியப்பட்டுப் பேசியது, கல்கி-ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் இணைந்து, 'காதல்' என்ற தலைப்பில் நடத்திய நிகழ்ச்சி குறித்துத்தான். சிறப்புப் பேச்சாளர்களாக நிகழ்ச்சியில் கலந்து கொண்ட லேனா தமிழ் வாணனும் பாரதி பாஸ்கரும் காதலைப்பற்றி சுவையாகப் பேசி சிந்திக்க வைத்தார்கள் :



நிகழ்ச்சிக்கு வந்திருந்த ராஜுவும், விஜியும், நிகழ்ச்சி பற்றி உரையாடுகிறார்கள் :

"எந்த ஒரு நிகழ்ச்சியிலும், வரவேற்புரை என்றால், சம்பிரதாயமாகப் பேசுவார்கள். ஆனால், கிருஷ்ணா ஸ்வீட்ஸ் முரளி, காதலைப்பற்றி ஒரு மினி சொற்பொழிவே நடத்திவிட்டாரே!'' என்று ராஜு ஆரம்பித்தான்.



• அரங்கம் நிறைந்த...



• பாரதி பாஸ்கர்

"ஆமாம்! ஆமாம். காதல்தான் குடும்பம் என்ற வாழ்வின் அஸ்திவாரம். காதல் என்ற உயிர், குடும்பம் என்ற உடம்பில் இருக்க வேண்டும் என்றவர், காதலுக்குப் பெற்றோர் எதிர்ப்பை ஒரு புதுக்கோணத்தில் பார்த்தாரே! ஜாதி, மதம், இனம், மொழி இவற்றை எல்லாம் மீறி

பெற்றோர்கள் பிள்ளைகளின் காதலை எதிர்க்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம், பாசம்தான்னு சொன்னாரு... எங்க அப்பா கோபப்பட்டுக் குதிக்கறப்போ இதை ஞாபகம் வைச்சுக்கறேன்!'' என்றாள் விஜி.

''காதல் வாழ்க்கையைச் சின்னா பின்னமாக்கி விடுகிற ஒரு விஷயம் பிடிவாதம் என்றாலும்கூட, காதல் விஷயத்தில் விதிவிலக்கு உண்டு. பிடிவாதம், பிடிவாதம், கடுமையான பிடிவாதம்தான் காதலை ஜெயிக்க வைக்கும்''னு லேனா சொன்னதையும் ஞாபகம் வைச்சுக்கோ விஜி!

''காதலுக்கும், அன்புக்கும் என்ன வித்தியாசம்னு லேனா ஒரு ஜோக் அடிச்சாரே! ஒரு வாத்தியார், காதலுக்கும், அன்புக்கும் என்ன வித்தியாசம்னு ஒரு மாணவனிடம் கேட்டபோது, மாணவன் 'சார்! நீங்க உங்கள் மகள்மீது வைச்சிருக்கிறது அன்பு! நான் வைச்சிருக்கிறது காதல்னு' சொன்னானாம்! இந்த ஜோக் சொன்ன கையோடு, 'எல்லா ஆண்களும், தங்கள் வாழ்க்கையில் ஏதாவது ஒரு



சமயத்திலாவது, ஒரு பெண்ணின்மீது காதல் கொண்டிருப்பார்கள்! அந்த காதல் தொடர்ந்ததா?, ஜெயித்ததா, தோற்றதா என்பதெல்லாம் வேறு விஷயம். காதல் வயப்படாத ஆணே இருக்கமாட்டான்!'

என்றாரே! உன் அனுபவம் எப்படி? என்று விஜி கேட்க, ''ம்.. ஒரு பெண்ணிடம் காதல் வயப்பட்டு, அல்லாடிக் கொண்டிருக்கிறேனே! நீதான் பார்த்துக் கொண்டிருக்கிறாயே!'' என்றதும் இருவரும் சிரித்துக் கொண்டார்கள்.

''கேள்வி பதில் நேரத்தில் பார்வையாளர்களிடமிருந்து நல்ல கேள்விகள் வந்தது ஆரோக்கியமான விஷயம். 'காதல் விஷயத்தில் ஆண்கள் சற்று விரைவாக பெண்களின் புற அழகில் மயங்கி, காதலிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். ஆனால் பெண்கள் அப்படிக் கிடையாது. ஆள் எப்படி என்று ஆராய்ந்து, நிதானமாக யோசித்து, தனக்கு ஏற்றவன் என்று திருப்தி அடைந்தால்தான் காதலிக்க ஆரம்பிக்கிறாள்' என்று சொன்ன லேனாவை மடக்கினார் ஒரு வாசகர்.

'திருப்தியடைந்த பின்தான் பெண் காதலிக்கிறாள் என்றால், பல பெண்களும் காதலில் தோல்வியடைகிறார்களே! இது ஏன்?' என்று கேட்டு தர்மசங்கடத்தில் ஆழ்த்தினாரே!''

''ஆனாலும், அவர் சொன்ன பதில் நல்ல பதில்தானே! டீன் ஏஜ் பருவத்தில் பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள்மீது அன்பு கொண்டிருந்தாலும், அதை வெளிப்படையாய்க் காட்டிக் கொள்வதில்லை. ஆனால், அந்தப் பருவத்தில், அன்பு காரணமாகவே, பெற்றோர் கண்டிப்பு அதிகமாக இருக்கும். இதை பருவ வயதில் இருப்பவர்கள் சரியானபடி புரிந்து கொள்ளாமல், பெற்றோருக்கும், தங்களுக்கும் ஒருவித இடைவெளி இருப்பதாக நினைக்கிறார்கள். இந்த

நினைப்புடன் வளர்ந்து, பெரியவர்களாகிறபோது, ஒரு ஆணோ, பெண்ணோ, அன்பைக் காட்டுகிறபோது, பெற்றோரிடம் கிடைக்காத அன்பும், அரவணைப்பும் காதலில் கிடைப்பதாக நினைக்கிறார்கள். இந்தக் கட்டத்தில் தங்கள் காதலனைப் பற்றி யதார்த்தமான கண்ணோட்டத்தில பார்க்கத் தவறி விடுகிறார்கள். காதல் என்ற திரை விழுந்துவிடுகிறதே! அதனால், அவள் மனத்தில் அறிவுபூர்வமாக எழும் சந்தேகங்கள் மற்றும் கேள்விகளுக்கு, யதார்த்தக் கண்ணோட்டத்தில் அல்லாமல், தன் ஆசையின் அடிப்படையில், சாதகமாக பதில்களை அவளே சொல்லி, சமாதானமடைகிறாள். இப்படி அறிவுபூர்வமாக, ஆக்கபூர்வமாகப் பார்க்காத, திரைபோட்ட பார்வைதான் தோல்விக்குக் காரணமாகிவிடுகிறது."

"ஊட்டி, கொடைக்கானல் போனால், அங்கே வருகிற ஜோடிகள் காதலர்களா, இல்லை திருமணமாகி எத்தனை வருடமாகிறது என்று கண்டுபிடிக்கிற டெக்னிக் சொன்னாரே, அதில் லேனாவின் யதார்த்தமான நகைச்சுவை வெளிப்பட்டதை நான் ரொம்ப ரசித்தேன்." இது விஜி!

"ஆமாம்! ஆமாம்! காதலிக்கிறபோது, காற்று புகவும் இடைவெளியில்லாத நெருக்கம் இருக்குமாம். கல்யாணம் ஆனபின், ஒரு வருடத்துக்கு ஒரு அடி என்று இடைவெளி அதிகரிக்குமாம். சரி! நாம காதலர்கள்தானே! நெருங்கி வந்து உட்கார்!"

"இப்ப இப்படித்தான் இருப்பீங்க. 'காதலிக்காக காத்திருத்தலில் சுகம் உண்டு'னு கவிதை சொல்லுவீங்க. ஆனால் கல்யாணமானதும், ஆண்கள் ரொம்பவே மாறிப் போயிடுவீங்க. லேனா, தானே முன்னின்று கல்யாணம் நடத்தி வைத்த நான்கு காதல் ஜோடிகளிடம் கேட்டபோது, நான்கு பெண்களும் இதைத்தானே சொன்னாங்களாம். அப்படிப் பார்த்தா, நீங்களும் மாறிடுவீங்கதானே" என்று ஆழமாக ஒரு பார்வை பார்த்தாள் விஜி.

"இது பொதுவான குற்றச்சாட்டு. ஆனா, இதற்கு லேனா, பாரதி பாஸ்கர் இரண்டு பேருமே நல்ல விளக்கம் கொடுத்தாங்களே! காதலர்களுக்கு,



"யாரும் பிறந்த நாள் வாழ்த்து அனுப்ப வேண்டாம்னு நம்ம தலைவர் பேப்பர்லே விளம்பரம் கொடுத்திருக்கிறாரே, ஏன்?"

"எல்லாம் 'ஆந்த்ராக்ஸ்' பயம்தான்!

- *கே.ராகவேந்திரன்*

பொறுப்பு, கடமை ஏதுமில்லை. ஆனால் கணவன் - மனைவிக்கு, குடும்பப் பொறுப்பு, கடமை உண்டே! இருபத்திரண்டு வயதில் காதலிக்கிறபோது, காதலி பின்னாலேயே மணிக் கணக்கில் சுற்றும் காதலன், திருமணத்துக்குப் பின், மனைவிக்காக, தனியாக நேரம் ஒதுக்க முடியாமல், ஓடிஓடி உழைக்கிறபோது, பிரச்னை வருகிறது.

"இந்தச் சூழ்நிலையை மனைவி புரிந்து கொண்டு, தன் எதிர்ப்பார்ப்பைக் குறைத்துக் கொண்டால், ஏமாற்றத்தைத் தவிர்க்க முடியும். நிம்மதியும், சந்தோஷமும் தொடரும்."னு சொன்னதை யார் மறந்தாலும், என் சகியே! நீ மறந்துவிடாதே!" என்று சொல்லி, ராஜு சிரிக்க, "ஊகூம். உங்களை மறந்தாலும் இந்த அட்வைஸை மறக்கவே மாட்டேன்" என்று சொல்லி, நமுட்டுச் சிரிப்பு சிரித்தாள் விஜி.

"பாரதி பாஸ்கர் பேச்சை ஆரம்பித்தபோதே, எது காதல் என்று விளக்காமல், எது காதல் இல்லை என்று ஒரு பட்டியல் போட்டாரே, சூப்பர் லிஸ்ட். தன் காதலை ஏற்றுக் கொள்ளாத மாணவி முகத்தில் ஆசிட் ஊற்றின மாணவனைப் பற்றிச் சொல்லிவிட்டு, எங்கே ஆக்கிரமிப்பு சிந்தனை இருக்கிறதோ அது காதல் இல்லைனு சொன்னார். நல்ல பாயின்ட் அது."

நான், "காதல்.. காதல்.. காதல்.. காதல்

கல்கி B. M. SILK SAREES

இணைந்து வழங்கும்

பட்டுப்புடவை பரிசுப் போட்டி முடிவு - 15

நன்றி வாசகர்களே! வைர விழா கொண்டாட்டத்துக்குப் பொருத்தமான காமெண்டுகளை அனுப்பச் சொல்லி யிருந்தோம். நிறைய எழுதி குவித்து விட்டார்கள். 'நறுக் சுருக்' காமெண்ட் எழுதி முதல் பரிசாக ரூ.2500/- பெறுமானமுள்ள பட்டுப்புடவை பெறுகிறார்.

— எஸ். வீமராஜன்,
8, பாவடித் தெரு,
கமுதி - 623 603

முதல் பரிசுக்குரிய காமெண்ட்

பிரகாசிக்கும் கூட்டணி

ஆறுதல் பரிசாக கல்கி புத்தகங்கள் பெறுகிறார் :

— பாற்கடல் வேந்தன்
அருகந்தபூண்டி,
வேலூர் - 632 001.

ஜிம்பூம்பா!
நிஜமாய் மாறி
என் கைக்குள் வா!

போயின் சாதல்.. சாதல்.. சாதல்.."
என்ற வரிகளைப் படிச்சுட்டு, பாரதியாரே காதல் தோல்விக்குத் தற்கொலைதான் தீர்வுன்னு சொல்லி இருக்கிறாரேன்னு நினைச்சிக்கிட்டிருந்தேன். ஆனால் அது தவறுனு பாரதி பாஸ்கர் தெளிவுபடுத்திட்டாங்க.

"பாரதியார் அறிவு பூர்வமாக தேசபக்திப் பாடல்களையும் மற்றவற்றையும் எழுதினாலும், குயில்பாட்டு எழுதுகிறபோது, ரொம்ப உணர்ச்சிபூர்வமாகவே எழுதியிருக்கிறார். ஒரு குயில் மாட்டையும், குரங்கையும் காதலிப்பதுபோல எழுதப்பட்ட குயில் பாட்டில், கடைசியில் எல்லாம் கனவு என்று வருமாம். காதல் என்பதால், உணர்ச்சி மேலோங்கி, காதல் பற்றிச் சொல்கிறார் பாரதியார். எனவே, பாரதி, காதல் தோல்விக்கு சாதல்தான் வழி என்று காட்டுவதாகக் கொள்ளக் கூடாது என்று சொன்னது புதுசு இல்லையா?

"அதுபோலவே, காதலில் தோற்கிற பையனையோ, பெண்ணையோ, அரவணைத்து அன்போடு ஆறுதல் சொல்லி, சகஜநிலைக்குக் கொண்டுவரும் பொறுப்பு பெற்றோருக்கு உண்டு என்பதையும் அழகாக சுட்டிக் காட்டினார் பாரதி பாஸ்கர்." சிலாகித்தான் ராஜு.

"கிளைமாக்ஸாக, முதியவரும், அவரது வயதான மனைவியும் அறையில் பக்கத்துக்கு ஒருவராக படுத்துக் கிடக்கிறபோது, அன்புப் பெருக்கால், உருண்டு உருண்டு நெருங்கி வந்து, மூச்சிறைக்க ஒருவரை ஒருவர் ஆழமாய்ப் பார்த்தபடியே தங்கள் ஆழமான காதலை வெளிப்படுத்தும் பாரதிதாசனின் பாடல் காட்சியை விவரித்தபோது அது, சினிமாபோல, நம் மனத்திரையில் நிழலாடியதை மறக்க முடியுமா? தலைநரைத்த வயதில் நாமும் அந்த பாரதிதாசன் சொன்ன தம்பதி போல வாழணும்பா..." என்று நெகிழ்ச்சியாய் விஜி கூற, "அதுக்கு இன்னும் எத்தனை நாள் கிடக்கு..! இப்பவே நாம அதைவிட அதிகமான காதலோட இருப்போம்..." என்றபடி இன்னும் ஒரு நரைகூட காணாத அவன் தலையை வருடினான் ராஜு.

தொகுப்பு : எஸ்.சந்திரமௌலி
படங்கள் : யோகா

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

DESH - VIDESH

Indian Airlines



Fly Within India To Fly Abroad

- Get 1 Free International ticket for Rs.50,000 of Domestic flying
- Get 2 Free International tickets for Rs.80,000 of Domestic flying

(fly between 13th Aug to 10th Nov 2001)

* Contact IA office or your nearest Travel Agent for further details

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2001 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka